கல்கி

KALKI 20.7.2003
ரூ.6.00



கண்ணகியாகிறார் காயத்ரி?



அம்மாவும் நீயே அப்பாவும் நீயே!

-பங்காரு அடிகளார் மகன் பேட்டி

கல்கி

20.7.2003





ரேடியோ மவுசு கூடிப் போச்சு!

சூரியன் எஃப்.எம்., ரேடியோ மிர்ச்சியும் மட்டும் ஹாட்டாக இல்லை. எஃப்.எம். ரேடியோ விற்பனைகூட செம ஹாட்தான்.

சென்னை நகர பிளாட்பாரக் கடைகளில் விதவிதமான மாடல்களில் எஃப்.எம். ரேடியோக்கள் கறுகறுப்பாக விற்பனையாகின்றன. சென்னை நகரின் எலெக்டிரானிக் பொருட்கள் விற்பனைக்குப் புகழ்பெற்ற ரிச்சி தெருவில் ஒரு ரவுண்டு அடித்தோம்.

கொஞ்சம் பெரிய தீப்பெட்டி சைஸ், தட்டையான முட்டை உருவம். செல்போன் மாடல், பேனா போல என்று ஏகப்பட்ட மாடல்களில் சிறிய எஃப்.எம். ரேடியோக்கள். "ஐம்பது ரூபாயிலிருந்து, ஐந்நூறு ரூபாய் வரை மாடலுக்கேற்ப விலை. செல்போன் மாடலும், பேனா மாடலும்தான் அதிகமாக விற்பனை ஆகின்றன. எல்லாம் சூரியன், மிர்ச்சி வந்தப்புறம்தான் சார். தினமும் இருபது ரேடியோ விக்குது!'' என்கிறார் பெட்டிக்கடை செட்டப்பில் எஃப்.எம். ரேடியோ விற்கிற பாபு.

"இப்போது, பிசினஸ் கொஞ்சம் டல். போன மாதம் எல்லாம் தினம் நாற்பது, ஐம்பதுவரை கூட வித்துச்சு" என்கிறார்.

"சென்னையில்தான் என்று இல்லை. தமிழ்நாடு முழுக்க எஃப்.எம். ரேடியோவுக்கு நல்ல டிமாண்டு. மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி என்று எல்லா ஊர்களிலிருந்தும் வந்து மொத்தமாக ஐந்நூறு ஆயிரம் என்று ஆர்டர் கொடுத்து, வாங்கிக் கொண்டு போகிறார்கள். கார்களில் பொருத்துவதற்கென்றே பிரத்யேக எஃப்.எம். மாடல்கள் விற்பனையும் அதிகரித்துள்ளது!'' என்கிறார் மொத்த விற்பனை நிறுவனம் ஒன்றின் மேனேஜர் குமார்.







* குமார்

தணிகாசலத்தின் கருத்து, சிந்திக்க வைக்கிறது. "நான் பிளாட்பாரத்தில் சினிமா பாட்டு கேஸட் விற்றுக் கொண்டிருந்தேன். எஃப்.எம். ரேடியோ வந்தவுடன் கேஸட்

வியாபாரம் படுத்துவிட்டது. பிழைக்க வேறு வழி? எஃப்.எம். ரேடியோ விற்க ஆரம்பித்து விட்டேன். சின்னச் சின்ன மாடல்கள். ரிச்சி தெருவில் உள்ள மொத்த விற்பனையாளர்களிடமே வாங்கி, அவர்களின் சில்லரை விலையைவிட, பத்துப் பதினைஞ்சு ரூபாய் குறைவாய் பிளாட்பாரத்தில் விற்கிறேன். பிழைப்பு ஓடுது" என்கிறார்.

எஃப்.எம். ரேடியோக்கள் விற்பனையால் கேஸட் விற்பனை எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது? இந்தக் கேள்வியை காஸ்மிக் மியூஸிக் நிறுவனத்தின் முத்துக்குமாரிடம் கேட்டோம்.



• பாபு

"எஃப்.எம். ரேடியோக்களின் வரவால், சினிமா ஆடியோ கேஸட் விற்பனை பொதுவாக பாதிக்கப்பட்டிருப்பது உண்மை தான். எல்லாத் துறைகளிலுமே பாதிப்பு, போட்டி எல்லாம் இருக்கிறதே! அவற்றை மீறித் தானே ஜெயிக்க வேண்டும்? சினிமா அல்லாத இசை, குறிப்பாக கர்நாடக இசை, ஃப்யூஷன் மியூஸிக் இவற்றுக்கெல்லாம் வரவேற்பு அதிகரித்து வருகிறது. அதை அதிகப்படுத்துவது பலனளிக்கும்.



"இன்னொரு கோணத்தில் எஃப்.எம். ஆல் பிரயோஜனமும் உண்டு. நாங்கள் டிசம்பரில் 'விசில்' பட கேஸட் ரிலீஸ் செய்தோம். விற்பனை டல் என்று மூட்டை கட்டி திருப்பி அனுப்ப விரும்பினார்கள் விளியோகஸ்தர்கள். ஆனால் அந்தப் படத்தின் 'அழகிய அசுரா' பாட்டை அடிக்கடி எஃப்.எம்.மில் ஒலிபரப்ப, விற்பனை பிக் அப் ஆகி, கேஸட் எல்லாம் விற்றுத் தீர்த்துவிட்டு, இன்னும் அனுப்புங்கள் என ஆர்டர் வந்தது! இதற்கு என்ன சொல்கிறீர்கள்?'' என்கிறார்.

- கௌதம் ராம்.

படங்கள் : ஸ்ரீஹரி



• முத்துக்குமார்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் : சீதா ரவி

ஆசிரியர் குழு : செ. ஏக்நாத் ராஜ், அனுராதா சேகர், ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்

தொலைபேசி : 22345622, 23, 24

தொலைநகல் : 044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited.
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

“நான் அதிர்ஷ்டசாலி! சினிமா சென்டிமென்ட் எனக்கு கரெக்டாக ஒர்க் அவுட் ஆகியிருக்கு! ஆமாம்! முதலில் எனக்கு நடிக்க வாய்ப்புக் கிடைத்தது 'என்ன சொல்லப்போகிறாய்?' என்ற படத்தில். அந்தப் படத்துல அறிமுகமானா, சினிமாவுல நல்ல பிரேக் கிடைக்கும்னு நினைச்சு ஓ.கே. சொன்னேன். துரதிருஷ்டவசமாக ஆளவந்தான் படத்தை முடித்து ரிலீஸ் பண்ணுவது தாமதமாகிக் கொண்டே போக, கடைசியில், 'என்ன சொல்லப்போகிறாய்?' படம் பூஜையோடு நின்னு போச்சு!'' என்று காயத்ரி ரகுராம் சொல்கிறபோது அவரது குரலில் வருத்தமில்லை.

''பிறகு சில மாதங்களுக்கு, வந்த வாய்ப்புகளை எல்லாம், முதல் படம் ரிலீஸ் ஆகட்டும்;



அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்னு சொல்லி தட்டிக் கழிச்சேன். ஒரு கட்டத்தில், அந்தப் படம் நின்னு போச்சுன்னு தெரிஞ்சதும், 'சார்லி சாப்ளின்' படத்துல பிரபு தேவாவுக்கு ஜோடியா நடித்தேன். அந்தப் படத்தில் நல்ல பேர் கிடைச்சு, தொடர்ந்து வாய்ப்புகள் வர ஆரம்பித்தன.''

''நடுவுல கொஞ்சம் நாள் படம் இல்லை போலிருக்கு?''

''அப்படி நினைக்கத் தோன்றுவது சகஜம்தான்! ஆனால் நிஜம் அது இல்லை. நான் இடைப்பட்ட காலத்துல மலையாளம், தெலுங்கு, கன்னடம்னு மொழிக்கு ஒரு படம் முடிச்சுட்டேன். மலையாளப் படத்துல கிராமத்துப் பொண்ணு கேரக்டர். கன்னடப் படத்துக்கு டைரக்டர் பிரபு தேவாவோட அப்பா சுந்தரம் மாஸ்டர்தான். அதுல மாடர்ன் பொண்ணு ரோல்! மலையாளத்துல வந்த நந்தவனம்கிற ஹிட் படத்தை, தெலுங்குல எடுத்தாங்க. அதுல அற்புதமான கேரக்டர் எனக்குக் கிடைச்சது. ஹீரோயின் சப்ஜெக்ட். வெறும் பாட்டு, டான்ஸ், அழுகைன்னு இல்லாம, நடிக்க நிறைய ஸ்கோப் கிடைச்சது. ரொம்ப இன்வால்வ் ஆகி நடிச்சேன். அந்தக் காலத்து பத்மினி, சாவித்திரிபோல நடிச்சிருக்கேன்னு எல்லாரும் பாராட்டினாங்க. அந்தப் படத்துக்காக ஆந்திர அரசோட நந்தி

அவார்டு எனக்குக் கிடைக்கும்னு நினைக்கிறேன்" என்கிறார் காயத்ரி தன்னம்பிக்கையுடன்.

"அது மாதிரி ஒரு படம் பண்ணிட்டு, அர்ஜுன் கூட வழக்கமான ஹீரோயின் ரோல் பண்ணியிருக்கீங்களே பரசுராம்ல?"

"எப்போதும் ஹீரோயின் சப்ஜெக்ட்டாகவே கிடைச்சிட்டிருக்குமா? இளம் ஹீரோயின்களுக்கு, பிரபல ஹீரோக்களோட நடிக்கவும் ஆசை இருக்குமில்லையா? அப்படி நடிச்சதுதான் பரசுராம். ஆனா, விசில்ல துறுதுறுப்பான காலேஜ் மாணவியா நடிச்சபோது ஜாலியா இருந்தது. நான் ஸ்கூல்ல படிச்சிக்கிட்டு இருந்த போது, நந்தா படத்துல நடிக்க டைரக்டர் பாலா கூப்பிட்டாரு. படிப்பை விடக் கூடாதுன்னு, காலேஜ் வாழ்க்கைன்னா எப்படி ஜாலியா இருக்கும்னு என்னால புரிஞ்சுக்க முடிஞ்சது. இப்ப நடிச்சுகிட்டு இருக்கிற 'ஸ்டைல்', 'விகடன்' படங்கள்ல கூட எனக்கு துறுதுறு கேரக்டர்தான்!

'விசில் அனுபவம் எப்படி?"

"திரில்லர் என்பதால், புது அனுபவம். காருக்குள் என்னை உட்கார வைத்து, கண்ணாடியை உடைக்கிற சீனில் நடித்த போது, ரொம்ப ரிஸ்க் எடுக்கிறோமோ, கண்ணாடி குத்தி விபரீதமாகிவிட்டால் என்ன ஆகும்? என ரொம்ப பயந்துபோனேன். ஒரு வழியாக எந்த அசம்பாவிதமும் இல்லாமல் காட்சியை எடுத்து முடித்தபோது, ரத்த தானம் ஏதுமில்லாமல் நல்லபடியாய் முடிந்த சந்தோஷம். ஏகப்பட்ட த்ரில், திகில்

கண்ணகியாகிறார் காயத்ரி?



நடிக்க மறுத்திட்டேன். ஆதர்ஷ் வித்யாலயாவுல பிளஸ் டூவுல நான் படிச்சது ஆடைகள் டிசைனிங். டான்ஸ் கோரியோகிராபர், காஸ்டியூம் டிசைனர் இப்படித்தான் சினிமாவுல ஒர்க் பண்ணணும்னு நினைச்சேனே தவிர, நடிக்க வருவேன்னு எதிர்பார்க்கவே இல்லை. நடிக்க வந்ததுக்கு என் அக்கா சுஜாதா தான் காரணம். சுஜா, கிருஷ்ணதாசி, சதுரங்கம்(தெலுங்கு)னு இரண்டு சீரியல்ல நடிச்சபோது, ஏகப்பட்ட சினிமா சான்ஸ் வந்தது. அவளுக்குக் கல்யாணம் பண்ணற ஐடியா இருந்ததால, சினிமா வேணாம்னு விட்டுட்டா. சுஜா இல்லாட்டி காயத்ரின்னு தான் எனக்கு வாய்ப்பு வர ஆரம்பித்தது.

'ஸ்கூல் முடிச்சுட்டு, நடிக்க வந்திட்டதால நான் காலேஜ் வாழ்க்கையை அனுபவிக்க சந்தர்ப்பம் கிடைக்கலை! அந்தக் குறை விசில் படம் மூலமா தீர்ந்து போச்சு! காட்சிகள் என்பதால், ஷூட்டிங்கின்போது, அவ்வப்போது, சிறுசிறு விபத்துகள், காயங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

"சரி, இப்படியே நடித்துக் கொண்டிருந்தால் போதுமா? நீங்களும் ஒரு பத்மினி, சாவித்திரி ஆக வேண்டாமா?"

"என்ன அப்படிக் கேட்டுட்டீங்க. நான் பணம் சம்பாதிப்பதற்காக மட்டும் சினிமாவுக்கு வரவில்லை! நன்றாக நடித்து, பேர் சொல்ல வைக்கணும்! என் லட்சியக் கதா பாத்திரம் எது தெரியுமா? கண்ணகி! ஆமாம்! ஐஸ்வர்யா ராய், ஷாருக்கான் நடித்து, பழைய 'தேவதாஸ்' கதையை இந்தக் காலத்துக்கு ஏற்ப எடுத்ததைப் போல, நம் ஊர் கண்ணகி கதையை எடுக்க வேண்டும்! அதில் நான் கண்ணகியாய் நடிக்க வேண்டும்!"

புரொடியூசர்கள் ரெடியா?

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

வட்டமேஜை

✉ ராணுவம் பொருளாதாரம் ஆகிய இரு முக்கியத் துறைகளிலும் இந்தியாவைவிடப் பல மடங்கு சீனா ஏற்கெனவே முன்னேறியிருக்கிறது. அந்த இரு துறைகளிலும் சீனாவை இந்தியா மிஞ்சும் காலம் வரும் வரையில், இதைவிடப் பெரிய சலுகைகளை எந்த இந்தியப் பிரதமராலும் பெற்றுத்தர முடியாது. 'சீன ஒப்பந்தம் சாதனையல்ல' என்கிற தலையங்கம் இதை உணர்த்தவில்லையே!

மதுரை, கே.எஸ்.பட்டாம்பிராமையர்

✉ பச்சை மிளகாயின் காரத்தோடு விறுவிறுப்பாய் இருந்தது இளங்கோவனின் பேட்டி!

திருவாரூர்,
ஆரூர். அரங்கநாதன்



✉ பெருந்தலைவர் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் கமிட்டியைப் புறக்கணித்து கோஷ்டி பிரிந்து அடித்துக் கொண்டதைக் கார்ட்டூனாக்கி, இவர்கள் எவருக்கும் பெருந்தலைவர் பெயரைச் சொல்லக்கூட அருகதையில்லை போலிருக்கிறதே, என்று வருத்தப்பட வைத்துவிட்டீர்கள்.

திருப்பரங்குன்றம்,
டி.கே.சுப்பிரமணியன்



✉ பிரதமரின் சீன விஜயம், 'இந்திய-சீன' நல்லுறவு வளர விதைக்கப்பட்ட விதை என்று நினைத்திருந்தேன். ஆனால், கல்கி தலையங்கம் படித்த பிறகுதான், அதில் உள்ள சிக்கல்களையும் புரிந்து கொண்டேன். அண்டை நாட்டு விஷயங்களில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்பது காலம் நமக்குக் கற்றுத் தரும் பாடம்.

மதுரை, என். பாலகிருஷ்ணன்

✉ அயோத்தி ராமர் கோயில் பிரச்னைக்குத் திரையுலகப் பிரமுகர்கள் கூறியிருந்த கற்பனை யோசனைகள் பலே ஜோர்!

ஆரூர், மு. மதிவாணன்

✉ அயோத்தி ராமர் கோயிலும், பாப்ரி மஸ்ஜித்தும்... வரலாற்றுச் சின்னம் என்பதையே மறக்கடித்துவிட்ட இன்றைய அரசியல்வாதிகள், ஸ்ரீ ஜெயேந்திரரின் சமரசத் தீர்வுத் திட்டத்திற்குச் செவிசாய்த்து விடுவார்களா, என்ன? அப்படியொரு சமரச அதிசயம் நிகழ்ந்துவிட்டால் ராமர் கோயிலையும், மசூதியையும் சேர்த்து நூற்றியெட்டு முறை வலம் வர நான் ரெடி!

நல்லத்துக்குடி, சூர்யா

எந்த விதத்தில் நியாயம்?

✉ தராசு கேள்வி பதில் பகுதியில் சன்டியர் பட ஸ்டில் அரைப்பக்கம் வெளியிட்டு பக்கத்தை வீணடித்தது எந்த விதத்தில் நியாயம்?

தருமபுரி,
ஸ்வீட் முருகன்

✉ கர்நாடக இசைக்கு 'கதக்' நடனம் விமரிசனக் கட்டுரையில் ஒவ்வொரு கலைஞரையும் தனித்தனியே விமரிசித்து பாராட்டியிருந்த விதம் அழகு!

திருச்செங்கோடு, டி.ஏ.சி. பிரகாஷ்

ARTHRITIS ✻ CALCANEAL SPUR
மூட்டுவலி ✻ குதிகால்வலி

✻ குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur) ✻ கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். ✻ கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். ✻ கழுத்து வலி (Cervical Spondylitis) ✻ நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) ✻ இடுப்பு எலும்பும் (Pelvic Bone) தொடை எலும்பு தலையும் (Femoral Head) சேருமிடம். ✻ குதிகால் இணைப்புகளில் வலி. முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்கவிளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் வியாதியஸ் தர்கள் வருகிறார்கள்.



Dear Director Mr. S. Purushothaman,

I am happy to say that my acute suffering from pain in hip joint and knee joints has been considerably reduced upto 85% in 25 days. The entire credit goes to you, to your Doctors, Masseurs, Physiotherapists, Nurses and Administrative staff and others. I find that your Hospital is service oriented. Wishing you and your center all success.

MJF. Ln. S. Balasubramanian, Former Chairman - Lions Blood Bank,
F-2, 47 - 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083

CANCER - புற்றுநோய்

ஆரம்ப நிலையில் உள்ள புற்று நோய்க்கு இயற்கையான முறையில், சிறப்பான, பக்க விளைவுகளோ, வலியோ, அசௌகரியமோ இல்லாத வகையில் சிகிச்சை அளிக்கின்றோம். புற்று நோயாளிக்கான பிரத்யேக உணவு வழங்கப்படும். அத்துடன் பிசியோதெரபி, யோகா, பிராணவாயு சிகிச்சை மற்றும் இரத்த ஓட்டத்தை சீராக்கக் கூடிய இயற்கை முறை சிகிச்சை அளிக்கப்படும்.

ரேடியேஷன், கீமோதெரபி எடுத்துக் கொள்ளும் புற்று நோயால் மிகவும் பாதிப்படைந்துள்ளவர்களுக்கு அதன் பக்க விளைவுகளை குறைக்கும்படியான (உதாரணமாக : முடி உதிர்தல், இரத்த சோகை, வாய்ப் புண் போன்றவை) இயற்கை முறை சிகிச்சையும், கேன்சர் வியாதியஸ்தர்களுக்கு தேவையான பாதுகாப்பான உணவு வகைகளும் வழங்கப்படும்.

ASTHMA - ஆஸ்துமா

1. Dyspnea *(மூச்சுத் திணறல்)* 2. Respiratory difficulties *(மேல்மூச்சு வாங்குதல்)* 3. Dry cough *(வறட்டு இருமல்)* 4. Cough with sputum *(சளியுடன் கூடிய இருமல்)* 5. Running Nose *(மூக்கில் நீர் வழிதல்)* 6. Nasal Block *(மூக்கடைப்பு)*

WEIGHT REDUCTION (உடல் பருமன்) for LADIES & GENTS

எங்களிடம் நாள்பட்ட இதர நோய்களுக்கும் ஆலோசனை கேட்கலாம்.

அடையார் இயற்கை வைத்திய மையம்

ADYAR NATURE CURE CENTER™ Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:2441 3399, 2440 2470. Tele Fax: 044-2491 6650 (காந்திநகர் பஸ் டெர்மினெஸ் எதிரில்)
www.adyarnaturecure.com E-mail: adyarnaturecure@yahoo.com,

குறிப்பு: சாதா, A/c தங்கும் அறைகள் கலர் டி.வி., போன் வசதியுடன் கிடைக்கும்.
பிராமணர்களால் தயார் செய்யப்பட்ட சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.

வி.வி.ஐ.பி.யின் மகனாக இருப்பதில் சங்கடங்கள், சௌகரியங்கள், சந்தோஷங்கள் என்று கலந்தே இருக்கும். அதுவும் அந்த வி.வி.ஐ.பி, இலட்சக்கணக்கான மக்கள் வணங்கும் தெய்வீக ஸ்தானத்தில் இருந்தால்...? அந்த வகையில் இங்கே தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறார், பங்காரு அடிகளாரின் மூத்த மகன் அன்பழகன்.

"'அன்பழகன்' என்று பெயர் வைத்ததற்குத் திராவிட இயக்கப் பற்று காரணமா?"

"அதெல்லாம் இல்லை. அப்பா 'அன்பு' என்றுதான் பெயரிட்டார். ஆனால் அம்மா அத்தோடு அழகனைச் சேர்த்து விட்டார். 'அழகன்' என்றால் 'முருகன்' என்றொரு பொருள் உண்டே!"

"சின்ன வயது ஞாபகங்கள் பற்றிச் சொல்லுங்களேன்"

"நிறையச் சொல்லலாம். அப்போது மருவத்தூர் சிறிய கிராமம். ஓரிரு டவுன் பஸ்களைத் தவிர வேறு எதுவும் நிற்காது. என் கையைப் பிடித்துக் கொண்டு அப்பா மாரியம்மன் கோயில்களுக்கு அழைத்துக் கொண்டு போவார். கிராம தெய்வங்களை வழிபடுவது எப்படியென்று சொல்லிக் கொடுப்பார். மதுராந்தகத்துக்கு சைக்கிளில் உட்கார வைத்து அழைத்துச் சென்றது பனிச்சென்று நினைவில் இருக்கிறது.

"ஆன்மிகப் பணி, குறி சொல்வது என்று ஈடுபட்ட பின் அப்பாவுக்கும் உங்களுக்கும் நடுவில் இடைவெளி ஏற்பட்டதா?

"அப்பா ஆசிரியர் பணியாற்றிக் கொண்டே ஆன்மிகப் பணியிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். மதுராந்தகம் தியேட்டரில் ஆட்டுக்கார அலமேலு, அன்னை ஓர் ஆலயம் போன்ற படங்களுக்கு அப்பா அழைத்துச் சென்றிருக்கிறார்.

என் சிறிய வயதில் ஒரு கால கட்டம் வரைதான் அப்பாவுடன் நெருங்கிப் பழக முடிந்தது. அதன்பிறகு ஆதிபராசக்தி அவரை முழுமையாக ஆட்கொண்ட காரணத்தால், இலட்சக்கணக்கான பக்தர்களால் வணங்கப்படும் தெய்வ நிலைக்கு அவர் உயர்ந்தார். அவருடைய தெய்வீகப் பணிக்கு எந்தக் குந்தகமும் வராமல் பார்த்துக் கொள்வது எங்கள் பொறுப்பாகி விட்டது. எனக்கு, என் தம்பிக்கு, இரண்டு சகோதரர்களுக்கும் தேவையான எல்லாவற்றையும் அம்மாதான் பார்த்துக் கொண்டார். எங்கள் தேவைகளை அம்மாவிடம் தான் சொல்லுவோம்."


"அப்பாவுக்கு எப்போது கோபம் வரும்?"

"பொய் சொல்வது அறவே பிடிக்காது. நண்பர்களுடன் ஊர் சுற்றுவது பிடிக்காது. ஆசிரியர் ஆயிற்றே! கம்பை எடுத்து விடுவார். ஆனால் இதெல்லாம் ஒரு கட்டம் வரைதான். அதன் பிறகு முழுக்க முழுக்க, அவர் கவனம் தெய்வீகப் பணியில்தான்."

"அப்பா இப்போது இலட்சக்கணக்கான பக்தர்களால் 'அம்மா' என்று பக்திப் பெருக்குடன் அழைக்கப்படுகிறார். நீங்கள் எப்படி அப்பாவை அழைப்பீர்கள்?"

"கடந்த பல வருடங்களாகவே அப்பாவைக் கண்டால் எனக்குப் பயம் கலந்த மரியாதைதான். அறையில் அவர் உட்கார்ந்திருந்தால், ஒதுங்கி, தலை வணங்கிச் சென்று விடுவேன். கல்வி நிலையங்கள், அறக்கட்டளை, கோயில் விவகாரம் என்று பல நிர்வாக அலுவல்களை அம்மா, நான், சகோதரர், சகோதரிகள் சேர்ந்துதான் கவனிக்கிறோம். அப்பாவைக் குறித்து மற்றவர்களுடன் பேசும்போது 'ஐயா' என்று

ஆன்மிக வாரிசு..?



தான் சொல்லுவேன். காரணம், 'அம்மா' என்று குறிப்பிட்டால் நிர்வாகத்தை கவனிக்கும் என் சொந்த அம்மாவுடன் தொடர்பு படுத்தி குழம்பக்கூடும். மற்றபடி அப்பா எனக்கும் ஆதிபராசக்தி அம்மாவே!

''ஆன்மிகப் பெரியவரின் மகனாக இருப்பதால், இளமைக்குண்டான குறும்புத் தனத்தை இழந்திருக்கிறீர்கள் என்று சொல்லலாமா?''

"அடிகளாரின் மகன் - அதுவும் மூத்த மகன் என்பதால் பொறுப்பும், பயமும் என் செயல்களைக் கட்டுப்படுத்துகின்றன என்பது உண்மைதான். நண்பர்களுடன் பேசும் போது கூட, ஓர் அளவுதான். அதன் பிறகு நண்பர்கள் பேசினாலும் நான் அமைதியாகி விடுவேன். நேரம் கிடைக்கும்போது குதிரை ஏற்றம், கிரிக்கெட் என்று பொழுதைப் போக்குவேன். எங்கள் இன்ஜினியரிங் கல்லூரியில் படிக்கும்போது சக மாணவர்களுடன் சேர்ந்து குறும்புகள் செய்ததுண்டு. ஆனால் ஆசிரியர்கள் என்னைக் கண்டிப்பதற்குக் கொஞ்சம் தயக்கம் காட்டுவார்கள் என்பதும் உண்மையே. அந்த நிலையைப் புரிந்து கொண்டு, நானும் ஒரு அளவோடு என் குறும்புத்தனத்தை நிறுத்திக் கொள்வேன்.

"அடிகளாரின் மகன் என்பதால் நிர்வாக விஷயமாகப் பல்வேறு இடங்களுக்குச் செல்லும்போது, எல்லாக் கதவுகளும் தானாகவே திறக்கும் என்று சொல்லலாமா?''

"அப்படிச் சொல்ல முடியாது. கதவுகள் மூடிக் கொண்ட சமயங்களும் உண்டு. ஆனால் எங்கும், எந்தச் சந்தர்ப்பத்திலும் அடிகளாரின் மகன் என்ற முறையில் சலுகைகளை எதிர்பார்க்காமல், முறைப்படியாகவே காரியங்களை முடித்துக் கொள்வேன்."

''உங்களை அடிகளாரின் ஆன்மிக வாரிசு என்றும் சொல்லலாமா?''

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது (பதறுகிறார்). இந்தத் தெய்வீக நிலைக்கு உயரும் முன்னர் அப்பா சந்தித்த சோதனைகள், சவால்கள், பேச்சுகள் ஏராளம். அவரை ஏளனம் செய்து, அவரது சிறப்புக்குக் களங்கம் ஏற்படுத்த நடந்த முயற்சிகள் நிறைய. ஆனால் இறுதியில் சத்தியமும், தர்மமும் ஆதிபராசக்தியின் அருட்பார்வையும் அப்பாவை, அடிகளாராக்கி, ஆன்மிகப் போராளியாக உயர்த்தியிருக்கின்றன. நான் அவரது மகனாகப் பிறந்ததே பூர்வ ஜென்மப் புண்ணியம். இந்த ஜென்மத்தில் அந்தச் சிறப்பே எனக்குப் போதும். அடிகளாரின் ஆசை, சமுதாயத்தில், அனைவருக்கும் உணவு, மருத்துவம், அறிவு ஆகிய தேவைகள் முற்றிலும் நிறைவேற்றப் படவேண்டும் என்பதுதான். அந்தப் பாதையில்தான் இன்று மேல்மருவத்தூர் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் மேல்மருவத்தூர் வாடிகனைப் போன்று ஒரு புனித நகராக விளங்க வேண்டும். ஜாதி, மத வித்தியாசமில்லாமல், மனித குலம் அனைத்தும் இங்கே சங்கமமாக வேண்டும். இந்த மண்ணை மிதித்தால் மன நிம்மதியும், ஆத்ம திருப்தியும் கிடைக்கும் என்பதை அனைவரும் உணர வேண்டும். இதுவே என் ஆசை.

''இறுதியாக... இன்றைய இளைஞர்களுக்கு ஆன்மிக உணர்வு மீண்டும் வந்திருக்கிறது போல் தோன்றுகிறதே''

"உண்மைதான்... ஆனால் ஆசை, தேவை, அடிப்படைகளின் பேரில் ஒரு எதிர்பார்ப்புகள் கூடிய ஆன்மிகத் தேடலாக இது இருக்கிறதோ, என்பது என் சந்தேகம். இதுவும் நன்மைக்கே! போகப் போக, முழுமையாக இறைத் தத்துவத்தை அடையும் ஆன்மிகப் பாதையில் இளைஞர்கள் ஐக்கியமாவார்கள். இது ஒட்டு மொத்த சமுதாயத்தையும் உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும்.

சந்திப்பு: ப்ரியன்
படங்கள்: ராஜன்



''எந்த நேரத்தில் 'எஸ்மா' பாயுமுன்னு சொல்லவே முடியலை...''

''உனக்குத்தான் அரசாங்க வேலையே கிடைக்கலையே... பின்னே எதுக்கு 'எஸ்மா'வுக்குப் பயப்படறே?''

''ஹி...ஹி... என் மனைவி பேரு 'எஸ். மாலதி'!''

- நாமக்கல் பாலு

ALOHA

MENTAL ARITHMETIC

(ABACUS LEARNING OF HIGHER ARITHMETIC)

• AUSTRALIA • CHINA • INDIA • INDONESIA • MALAYSIA • OMAN • PHLIPINES • SINGAPORE • THAILAND

International Training Programme Now in India.

Our Vision

Adding quality to children learning throughout India.

Challenge The Calculator! Balance The Brain !!




திறமை மற்றும் ஆர்வமிக்க பெண்கள் தங்கள் பகுதியில் எங்கள் கிளையினை ஆரம்பிக்க அனைத்து உதவி மற்றும் ஆலோசனை வழங்குகிறோம்.

5 - 13 வயது குழந்தைகளின் மூளையின் முழு திறன் வளர்ச்சிக்கு.

Without Calculator, Abacus, Pen and paper, your child can Solve

123 + 456 + 13 - 48 + 534 = ?
12 x 36 - 17 x 15 = ?
6288 + 24 - 13 x 17 = ?
in 5 seconds.




- ★ வாரத்தில் 2 மணி நேர பயிற்சி
- ★ கல்வி கற்கும் மாணவர்களுக்கு வரப் பிரசாதம்
- ★ கணிதம் மட்டுமின்றி எல்லா பாடம் / துறைகளிலும் முதன்மை பெறலாம்.
- ★ 3வது மாதத்திலேயே பலனை அறியலாம்!
- ★ அறிவுத் திறன், அபார ஞாபக சக்தி, தன்னம்பிக்கை விரைவில் கணக்கிடும்முறை, குழந்தைகளின் கவனம், சிந்திக்கும் சக்தி, படிக்கும் பழக்கம், எழுதுவதில் வேகம் / துல்லியம் ஆகியவை உறுதியாக மேம்பட

இந்தியா முழுவதும் தனி உரிமை கிளை *(Franchisee)* ஆரம்பிக்க தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

ALOHA MENTAL ARITHMETIC INDIA (A Division of KK ACADEMY (P) LTD)

32, 1st Main Road, R.A. Puram, Chennai - 600 028. Phone : 24613262, 24616268 Fax : 52108090
E-mail : kkacademy@vsnl.net Web : www.alohama.com

For Registration At Chennai :
Adyar : 9884190450, Anna Nagar (E) : 9841032238, Anna Nagar (W) : 9841126275, Avadi : 9841149527, Adambakkam : 9884198948, Ayanavaram : 9840225568, Chetpet : 28202991, Egmore : 31044055, Gopalapuram : 31044055, Nungambakkam : 31044055, Mylapore : 9841044889, Perambur : 9841258244, R.A.Puram : 24613262 / 6268, T.Nagar : 56114590, Thiruvanmiyur : 56107172, K.K. Nagar : 56117900, Jawahar Nagar : 26702018, Kilpauk : 26443090, Vadapalani : 9841258244, Valasarvakkam : 9840438689, Chrompet, Tambaram, C.I.T. Nagar, Ashok Nagar, **Other City :** Coimbatore - R.S.Puram: 2543173, Saibaba Colony & Tatabad : 2491434 & 9894126600, Rajapalayam : 9842156489, Virudhunagar : 9842121744, Tiruppur : 9843286985 **Other States :** Pondicherry : 9842322448, **Bangalore** : Richmond Town : 9845309396, Rajaji Nagar : 56706287, 3561287, Jaya Nagar : 9845309396, 6655156, Malleswaram : 9845587594, 9845124425, Indira Nagar : 9845309396, 31812723, Kammannahalli : 31812723, 5430960, Fraser Town : 9845042790, 51250739, Basaveshwar Nagar : 9845042790, R.T. Nagar : 9845124425, Vivek Nagar : 56680241, 31850347, Maciver Town : 51250739, **Hyderabad** : 7001354



விரைவாக நிலைநாட்டப்படும் அநீதி!

ஜஹிரா ஹபிபுல்லா ஷேய்க், பத்தொன்பது வயது இளம் பெண்மணி. இந்தியாவின் பார்வை இன்று இவர் பக்கம் திரும்பி யிருக்கிறது.

தமது குடும்பத்தினருள் பலர் குஜராத் கலவரங்களின் போது எரித்துக் கொல்லப்பட்டதாக முதலில் சாட்சி சொன்ன ஜஹீரா, விசாரணை என்று வந்த பிறகு, நீதிபதி முன்னிலையில் முற்றிலும் வேறு விதமாகப் பேசியிருக்கிறார். தாம் முதலில் அடையாளம் காட்டிய நபர்கள்தான் உண்மையில் பெஸ்ட் பேக்கரி எரிந்து கொண் டிருக்கையில் பல உயிர்களைக் காப்பாற்றினார்கள் என்று சொல்லி யிருக்கிறார்! குற்றம் சாட்டப்பெற்ற 21 பேர் விடுதலையாகி விட்டார்கள்.

குஜராத் விரைவு நீதிமன்றத்தில் இந்த அக்கிரமம் நடந்து இரண்டு தினங்களுக்குள் தேசிய மனித உரிமைக் கமிஷன் முன் தோன்றிப் பேசுகிறார் ஜஹீரா. தாம் நீதிமன்றத்தில் பேசியவை உண்மை அல்ல; அவ்வாறு பேசும்படி கட்டாயப்படுத்தினார்கள்; அவ்வாறு பேசாவிடில் என் மீது அவதூறு சுமத்துவதாக அச்சுறுத்தினார்கள் என்கிறார்!

சில தினங்களுக்குக் காணாமல் போயிருந்த ஜஹீராவை, வழக்கு விசாரணை நடந்த தினத்தில் நீதிமன்றத்துக்கு அழைத்து வந்தவர்




கல்கி



2003 ஜூலை 20
சுபானு ஆடி 4
மலர் : 61
இதழ் : 51

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஒரு பா.ஜ.க. எம்.எல்.ஏ.

இந்த எம்.எல்.ஏவும் வேறு சிலரும் தம்மை அச்சுறுத்தினார்கள் என்கிறார் ஜஹிரா. உண்மையைச் சொன்னால், தமது உயிருக்கும், தமது குடும்பத்தினர் உயிருக்கும் ஆபத்து என்ற நிலையில் பொய் பேசியதாக தேசிய மனித உரிமைக் கமிஷனிடம் இப்போது தெரிவித்துள்ளார்.


கோத்ரா சம்பவத்தைத் தொடர்ந்து மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தபோதே, இப்படித்தான் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. விரைவு நீதிமன்றம் விசாரிக்கும் குஜராத் கலவர வழக்குகள் நீர்த்துப்போகும்; வலுவிழக்கும் என்பது பலரும் ஊகித்ததுதான்.

இவ்வளவு சாட்சிகளை மிரட்டியும், சாட்சியங்களை அழித்தும், வழக்கைச் சரியாக நடத்தாமலும் ஆட்சியில் இருப்போருக்குச் சாதகமான தீர்ப்பை வரவழைப்பதில் குஜராத் மட்டுமல்ல, வேறு பல மாநிலங்களும் சாமர்த்தியமாகச் செயல்படுகின்றன. தமிழகமும் இதற்கு விதிவிலக்கல்ல.

விரைவு நீதிமன்றம் (Fast track Court) என்பது தாமதமின்றி நீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனால், சாட்சியங்களை அழிக்கவும் மாற்றவும் அரசுத் தரப்பிலேயே அதிவேக முயற்சிகள் நடைபெறுகிறபோது, விரைவாக நிலைநாட்டப்படுவது அநீதிதானே தவிர; நீதி அல்ல!

ஜெ. அரசின் டிஸ்மிஸ் சாதனை!

ஸ்டிரைக் செய்த தமிழக அரசு ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டது குறித்த நீதிமன்றத் தீர்ப்பு வலுவானதாக இல்லை. கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால், பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மாநில தீர்ப்பாயத்திடம் மனு செய்து



நியாயம் பெறவே முயற்சி செய்ய வேண்டும் என்று தீர்ப்பு கூறுகிறது. பிரச்னையின் தீவிரம் கருதி, தீர்ப்பாயம் விரைவில் விசாரணை நடத்தி முடிவு கூற வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. தீர்ப்பாயத்தின் முடிவு திருப்தி அளிக்காவிடில் ஊழியர்கள் நீதிமன்றத் திடம்தான் முறையிடுவார்கள். இறுதித் தீர்ப்பு எப்படி அமைந்தாலும் அது அரசை பாதிப்பதோடு ஊழியர்களையும் பாதிக்கும்.

அரசுக்கு ஆதரவான தீர்ப்பாயின், பணி நீக்கம் செய்யப்பட்டவர்களை பாதிக்கும். எதிரான தீர்ப்பு எனில் அவர்களுடைய இடத்தில் புதிதாக வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களை பாதிக்கும்!


லட்சக்கணக்கானவர்கள் 'வீட்டுக்கு அனுப்பப்பட்டதை' அறிந்து, அந்தக் காலியிடங் களுக்காக விண்ணப்பித்தவர்கள் மேலும் பல லட்சம் பேர்! அவர்களுள் இருபது வயதினரும் உண்டு; நாற்பது வயதினரும் உண்டு.

தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வளவுதூரம் தலைவிரித்தாடுகிறது என்பதையே இந்த நிகழ்வு எடுத்துக் காட்டுகிறது.

இந்தக் கஷ்டத்தைப் போக்கி, மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில் ஜெய லலிதா தலைமையிலான அரசு என்ன செய்திருக்கிறது? அ.தி.மு.க. ஆட்சி அமைத்த பிறகு எத்தனை புதிய வேலை வாய்ப்புகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன? அவ்வாறு வேலை வாய்ப் புகளை உருவாக்கும் வகையில் தனியார் தொழில் துறையினருக்கும் முதலீட்டாளர்களுக்கும் என்ன ஊக்கம் தரப்பட்டிருக்கிறது?...

இதையெல்லாம் செய்யாமல் 1053 ஜோடிகளுக்குக் கல்யாணம் நடத்தியதையும், ஆலயங் களில் அன்னதானம் செய்வதையும் சாதனைகளாகப் பறைசாற்றிக் கொள்ளும் அரசு, இப்போது அரசு ஊழியர் டிஸ்மிஸ் விவகாரத்திலும் புதியதொரு சிக்கலைத்தான் தோற்றுவித்திருக்கிறதேயொழிய, வேறு ஒன்றையும் சாதிக்கவில்லை. ○

2



கொதிக்க கொதிக்க சாப்பிடாதேடா பாவி!

யாராவது ரொம்ப நாஸ்திகம் பேசினால், அவர்களுக்கு மனித உடல் கூறைக் காட்டி ஏதாவது புரிய வைக்க முயற்சி செய்யலாம். சின்னதும் பெரிதுமான ஏகப்பட்ட கருவிகளைக் கொண்டு, மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட இயந்திரம்தான் மனித உடல்! உலகில் நாளுக்கொரு நுட்பமான கருவி வந்து கொண்டே இருக்கிறது. ஆனால் மனித உடல் போன்ற அற்புதமான கருவி எதுவும் அமைந்து விட வில்லை. காரணம், இதை வடிவமைத்திருப்பது ஏதோ ஒரு மகா சக்தி!

அதிலும் வயிறு இருக்கிறதே... அது ஒரு வியத்தகு விசேஷம்.

நெஞ்சுக் குழி முதல் அடிவயிறு வரை உள்ள கவன தேசம்தான் வயிறு. இரைப்பை, கல்லீரல், பித்தப் பை, கணையம், சிறுகுடல், பெருங்குடல், மலக்குடல் உள்ளிட்ட ஏழு பட்டத்து 'அரசர்கள், ஜீரண மண்டலப் பிரதேசத்தில் ஆட்சி புரிகிறார்கள். 'ஆட்சி புரிகிறார்கள்' என்று சொல்லப்பட்டது சும்மா ஐஸ் வைப்பதற்காகத்தான். உண்மையில் இந்த உறுப்புகள் எல்லாம் ஓய்வு ஒழிச்



டாக்டர் எஸ். அஷோக்

சலே இல்லாமல், மாங்கு மாங்கு என்று உழைக்கும் சேவகர்கள்தான்.

“சூடா என்ன இருக்கு?” என்று கேட்டு விட்டு ஒரு பிடி பிடிக்கிறோம். (அடுப்பின் மீது தவா சூடாக இருக்கும் போதே, சப்பாத்தியை அதன் மீதே வைத்துச் சாப்பிடுபவர்களும் உண்டு...) உண்மையில் இது தவறான பழக்கம். அந்தச் சூட்டையும் காரத்தையும் நாக்கு தாங்கலாம். ஆனால் உணவுக் குழாய் தாங்காது. எனவே... ரூம் டெம்பரேச்சருக்கு மிகுதியாக உள்ள சூட்டில் உணவு சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.)

இட்லியோ, வடையோ... இரண்டு கடி கடித்து சூடாக உள்ளே அனுப்பியாச்சு! அந்தச் சூடும் சுகமும் தொண்டையில் இறங்கும் வரை எவ்வளவு ஆனந்தம். ஆனால் உணவுப் பாதைக்கு எந்த ஆனந்தமும் இல்லை... சோலோவாய் சோக கீதம்தான்! கொதிக்கக் கொதிக்கக் காபி சாப்பிடாதேடா பாவி... என்னோடது சாதா பைப் லைன்டா! நான் வெந்து போய் கஷ்டப்படுவேன்” என்று உணவுக்குழாய் முனகிக் கொண்டே, இரைப்பைக்கு பார்சல் செய்கிறது.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா அரவை மிஷினில் பொருளைப் பார்த்து, அரிசி, கோதுமை, சீயக்காய் என மிஷினின் ஒடு டயரை மாற்றி மாட்டுவது போன்ற வேலை எல்லாம் கிடையாது. மெல்லீஸ் ரவையா? மாவா போன்ற கேள்வியும் இல்லை. வந்து விழும் உணவைத் துண்டுகளாக்கி, மாவு மாதிரி மசித்துக் குழைப்பதற்கான ஆயத்த வேலைகளை முடுக்கிவிடுகிறது.

“ஆனாலும் இந்த டாக்டர் தன் புது ‘கிளினிக்’குக்கு இப்படியா விளம்பரம் செய்யறது?”

“எப்படி பண்ணியிருக்கார்?”

“தந்தி நிலையம், பூ மார்க்கெட், சுடுகாடு இதுக்கெல்லாம் மிக அருகில் உள்ள கிளினிக்குன்னு விளம்பரம் பண்ணியிருக்காங்க!”

– கிரிஜா மணாளன்



மசித்து, பிசைந்து, குழைத்து என வேலை ஜரூராக நடக்கும்போதே, ஹைட்ரோ க்ளோரிக் அமிலம், பெப்ஸின் போன்ற கிங்கரர்களின் இரசாயனத் தாக்குதல்கள் நடக்கும்.

சிறு குடலின் முதல் பகுதியான முன் சிறுகுடல், மசித்த உணவை வரவேற்று, இடை சிறு குடலுக்கு அனுப்பும். பின் அங்கிருந்து கடை சிறு குடலுக்கு வரும். இங்கே தான் பிரித்தனுப்பும் வேலைகள் ஆரம்பமாகும். உணவில் உள்ள மாவுச்சத்து, சர்க்கரையாகவும், புரதச்சத்து, அமினோ அமிலமாகவும் மாற்றப்படும். கொழுப்புச் சத்து, கொழுப்பு அமிலமாக (லிபிட்ஸ்) மாற்றப்படும். பின் மிச்சமிருக்கும் சக்தியையும், கழிவும் பெருங்குடலுக்கு அனுப்பப்படுகிறது.

உணவிலிருந்து எடுக்கப்பட்ட அமினோ அமிலங்களும், சர்க்கரையும், கல்லீரலுக்குப் போகின்றன. கல்லீரலும் உணவு செரிமானத்துக்கு உதவுகிறது. ஆதார வைட்டமின்கள், மினரல்ஸ், கால்ஷியம், இரும்புச் சத்து, துத்தநாகம் போன்றவை சிறு குடலில் உறிஞ்சப்படுகின்றன.

இந்தச் சத்துகளில் தட்டுப்பாடு இருந்தாலும், சிறுகுடலால் உறிஞ்ச முடியாது போனாலோ, சிறுகுடலில் பிரச்னைகள் ஏற்படுகின்றன.

தனக்கு அனுப்பப்பட்ட உணவுக் கழிவிலிருந்து, பெருங்குடல் 75% சதவிகிதம் தண்ணீரை உறிஞ்சி எடுத்துக் கொள்கிறது. பெருங்குடலில் ஏதோ மிஸ்டேக் ஏற்பட்டு இப்படித் தண்ணீரை உறிஞ்சி எடுக்கத் தவறும்போதுதான், வயிற்றுப் போக்கு உண்டாகிறது.

பிறகு மிச்சம் மீதி இருக்கும் உணவுக் கழிவு மலக்குடலை அடைந்து, ‘விடுதலை’ பெற்று, ஆசன வாய் வழியாக வெளியேறி விடுகிறது.


தொண்டையில் விழும் ஒரு மினி மீல்ஸ், ஆசன வாய் வழியாக வெளியேறும்வரை, செரிமான மண்டலச் சாலை வழியாகப் பயணிக்க வேண்டிய தூரம் சுமார் முப்பது அடி. இதில் வளைந்து நெளிந்து செல்லும் சிறு குடல் பிரயாண நீளம் மட்டும் சுமார் இருபது அடி.

இந்தப் பயணம் சுகமாக அமைந்தால்தான், ஆரோக்கியமாக இருக்க முடியும். அடுத்த வாரம்... உணவுப்பாதைக்கு ஒரு விஸிட் அடிப்போம்... காத்திருங்கள்...

மூட்டு வலி! மூட்டு வலி! மூட்டு வலி!

பல வருட வேதனை
சில நாட்களில் பக்க
விளைவுகள் இல்லாத
முழுமையான ஆற்றல்

அசமந்த ஓமம்
(Celery Seeds)
ஆஸ்திரேலியாவின்
விஞ்ஞானப் புரட்சி
இப்பொழுது இந்தியக்
கூட்டு முயற்சி



Mr. K. V. Mahaadevan
Old No. 2, New No. 3,
1st Avenue, Ashok Nagar,
Chennai - 600 083.

ஆர்தோக்யூர்™



Product of
NATURE REMEDIES (P) LIMITED
CHENNAI-600 083

MARKETED BY:
KUREWEL PHARMA CHENNAI-600 083
PH: 044 2489 3013
044 2471 1719

இப்பொழுது தமிழகம் மற்றும்
*கர்நாடகம் எங்கும் கிடைக்கும்

*Super stockist for Karnataka:
ARIES MARKETING, Bangalore - 560010.
Ph: 3526356, Mobile: 9844152615.

STOCKISTS

Chinmaya Nagar	Vasantha Enterprises	24795251
Sowcarpet	Srinath Medical Agencies	25352799
Annanagar	Perfect Medical Enterprises	26150253
Teynampet	Prism Pharmaceuticals	24338456
Mylapore	S.V.S.Agencies	24941057
Perambur	Kumaran Pharma Agencies	26704265
Tiruvottiyur	Kumaran Agencies	25734336
Tambaram(W)	Sri Saravana Pharma	22263890
Nanganallur	Sunmoon Enterprises	22310186
Pallavaram	Ganesh Agencies	22402189
Pudukkottai	A.V.Medical Agencies	220181
Dindigul	Alagappa Agencies	2433914
Palani	Best Medical Agencies	245049
Mayiladuthurai	Chellas Enterprises	243272
Madurai	Dhanalakshmi & company	2621421
	Sri Pushpa Agencies	2630371
Nagapattinam	Eagammal Agencies	220983
Krishnagiri	Kuttappa Agencies	231211
Tirupur	Kumaran Pharma	2427193
Kanchipuram	Kanagavalli Pharma	220326
Karaikal	Maragatham Medicals	222079
Coimbatore	M.S.Agencies	2491554
	Selva Rathna Agencies	2397085
Thiruvallur	Medicare Agencies	264997
Arakonam	Murugan Pharma	224225
Tiruvannamalai	Mohana Agencies	[illegible]
Tiruvarur	Maharaja Traders	222894
Pollachi	Pharmaceutical Services	220435
Pondicherry	Pharm House	2212001
Cuddalore	Accat Agencies	230592
Tindivanam	R.R.Pharma	224313
Karur	Showraa Agencies	236573
Thanjavur	Sidharth Pharma	224024
Vandavasi	Srinivasa Medicals	225135
Chengalpattu	State Pharma Distributors	222159
Kumbakonam	Sri Bargavi Agencies	2426426
Ranipet	Sri Rajeswari Pharma	222788
Villupuram	Saraswathi Agencies	224224
Tirupattur	Srinivasa Pharma	227498
Tirunelveli	SRM Medical mart	2333801
Erode	Shri Ramana Medical Agencies	2253421
	ESS Jay Agencies	2268855
Chidambaram	Salamia Distributors	220871
Arni	Sri Guna & Company	226470
Nagercoil	Saravana Pharmaceutical	232341
Trichy	Uthra Marketing	2760542
	V.R.Agencies	2740933
Salem	Vinayaga Agencies	2266098
	Shri Ramana Medical Agencies	2336365

ஏவி.எம்.ஸ்டுடியோ ஏ.சி. ஹாலில் புது செட், பழைய காம்ப்யர்களுடன் 'ஆட்டம் கொண்டாட்டம்' நிகழ்ச்சி. அபர்ணா, ஸ்ரீஜா ஜான்பிரிட்டோ மூவரும் போட்டிககளுக்கு மேற்கிந்திய நடன அசைவுகளைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

"எல்லோருக்குள்ளேயும் டான்ஸ் பண்ணனுங்கற ஆசை இருக்கு. பரதம் படிக்கறதுக்கு அங்கங்க ஸ்கூல் இருக்கு. போய்ப் படிச்சுக்கலாம். வெஸ்டர்ன்னுக்கு அதிகமா ஸ்கூல் இல்ல. அதனால்தான், இந்நிகழ்ச்சி மூலமா இதையும் கொஞ்சம் டச் பண்றோம்" என்றார் ஜான்பிரிட்டோ.

'நிகழ்ச்சியை ரொம்பவே மாத்திட்டோம். இப்ப வாரம் ஒரு விருந்தினரைக் கூப்புடறோம். 'செட்'டை மாத்திட்டோம். டைட்டில் மியூசிக்கை கதிரி கோபால்நாத் மகன் மணிகாந்த் கதிரி பண்ணியிருக்கார். பாருங்களேன். கலக்கும்" என்றார் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சுகன் கலாபன்.

இதுவே எங்களுக்குக் கிடைச்ச வெற்றிதான்" என்கிறார்கள் இதன் ஸ்கிரிப்ட் ரைட்டர்கள் மோகன கிருஷ்ணனும் கவிதா ஜாபினும்.

'கனாகண்டேன் தோழி' தொடரில் மங்களமாக வரும் சூசன் எக்கச்சக்கச் சந்தோஷத்தில் இருக்கிறார்.

"என்னோட கேரக்டர் நெகடிவாகத்தான் இருந்தது முதல்ல. என்னுடைய நடிப்பை நிறையப் பேர் பாராட்டினாங்க. குட்டி பத்மினி மேடம் 'யாரிந்தப் பொண்ணு. நல்லா பண்ணுதே'ன்னு கேட்டிருக்காங்க. இது போதாதா? எனக்குப் பெரிய கிரெடிட் தானே? இப்படி நிறையப் பேர் கேட்கறதால என்னோட கேரக்டரை இப்ப கொஞ்சம் சாஃப்டா மாத்திட்டாங்க" என்கிறார்.

கதைய எதுவும் மாத்திடாதீங்கப்பா!

தமிழ்நாடு அசெம்ப்ளி மாதிரி



• அபர்ணா, ஜான் பிரிட்டோ, ஸ்ரீஜா



• ஆட்டம் கொண்டாட்டம்

அரிகிரி அசெம்ப்ளியிலும் ஏதாவது பிரச்னையா என்று விசாரித்தால், "அதெல்லாம் ஒண்ணுமில்ல, சிட்டிபாபு சினிமால ட்ரை பண்றார். அவரில்லாம என்னை மட்டும் வச்சு தனியா பண்ணச் சொன்னாங்க. தனியா பண்றது

வெறும்

"ஐம்பத்தி ஏழாயிரம் புகைப் படங்கள் கொண்ட நிகழ்ச்சி ஒரே திரைபடத்தில். இரண்டாயிரம் மைல்கள் நீளம் உள்ள படம். எல்லாம் வெறும் மூன்றணாவுக்கு.

தமது முதல் படத்துக்கு இப்படி விளம்பரம் கொடுத்தவர் யார்?

தாதா சாகேப் பால்கே!

- இப்படி சினிமா பற்றிய புதுத் தகவல்களுடன் வாரா வாரம் வருகிறது விஜய் டி.வி.யின் சினிமா காரம் காபி!

"டி.ஆர்.பி. ரேட்டிங்கில் நல்ல ரெஸ்பான்ஸ் இருந்ததால இப்ப இதோட நேரத்தை ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு மாத்தியிருக்காங்க.



• பாஸ்கி

• சினிமா காரம் காபி





• ருசி

நடிக்கும் நீலிமா ராணி ஆந்திராவில் சிறந்த டி.வி. நடிகைக்கான 'நந்தி' விருதைப் பெற்றவர்.

"கர்நாடக சங்கீதம் அழகா பாடறீங்களே, சங்கீதம் தெரியுமா?'' என்று கேட்டால், ''ஐயையோ தெரியாதுங்க. இந்தத் தொடர்ல யும், இன்னொரு தொடர்லயும் இதே மாதிரி யான கேரக்டர்கள்தான். சங்கீதம் படிக் கலையேன்னு ரொம்ப வருத்தமாப் போச்சு. சங்கீத வித்வான்கள் பக்கத்துல வந்து வாயை அப்படி அசைக்கணும், இப்படி அசைக் கணும்னு ஒரு மணி நேரமாவது சொல்லிக் கொடுக்கறாங்க. இவங்க சொல்லிக் கொடுக் கறதைப் பாத்துதான் நான் சீரியல்ல வாயசைக் கிறேன். நிறையப் பேர் 'அழகா பாடறேடி'ன்னு பாராட்டுறாங்க, நானே பாடுனா மாதிரி. சந்தோஷமாயிருக்கு'' என்கிறார் நீலிமா.

மூன்றணாவுக்கு...!

அவ்வளவு ஈசியில்லையே. முடியலை. அசெம்ப்ளிய நிறுத்திட்டாங்க'' என்கிறார் பாஸ்கி.

உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி யின்போது பண்ணிய 'டாக்ஷோ' மாதிரி காமெடியான டாக்ஷோ ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறாராம் பாஸ்கி. விரைவில் உங்கள் அபிமான சேனல்களில் இந்தக் காமெடியைக் கண்டு களிக்கலாம்!

'வணக்கம் தமிழகத்தில்' வரும் கௌரி, பாலு மகேந்திராவின் கதை நேரத்தில் உதவி இயக்குனராகப் பணியாற்றியவர்.

"இயக்குனராகணுங்கறதுதான் என்னோட ஆசை. இப்போ 'சொர்க்கம்' மற்றும் தெலுங்கு சீரியல்கள்ல நடிச்சுகிட்டு இருக்கேன். ஒட்டு மொத்தமா டீ.வி. தொடர்களைப் பார்த்தா, பெண்களை உட்கார வைக்கணுங்கறதுக்காகக் கண் ணீரைப் பிழியற மாதிரி எடுக்கறாங்க. இதைவிட இன்னும் நல்லா வித்தியாச மான பார்வையில் மக்களுக்குக் கதை சொல்லலாம்னு தோணுது. நான் இயக்குற சீரியல் கண் டிப்பா அப்படி இருக் கும்'' என்கிறார் கௌரி.

'ரெக்கை கட்டிய மனசு' தொடரில் செல்வி பாரதியாக



• கௌரி



• நீலிமா ராணி



• கவிதா ஜாபின்

- ஏக்ஜி

படங்கள் : ஸ்ரீஹரி

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

மனத்தில் பொறுமை; செயலில் சக்தி!

கடவுளிடம் வரம் பெறுவதற்குச் செல்வதாக வைத்துக் கொள்ளுங்கள். வரம் பெறுவது ஒன்றே உங்களுடைய குறிக்கோளாக உள்ளபோது, அது உங்கள் அவசரத்தைக் காட்டுகிறது.

இன்னொருவர், 'கடவுள் எனக்கு ஏற்கெனவே சொந்தம்' என்று அறிவார். அவர் எதற்காகவும் அவசரப்படாமல், எல்லையற்ற பொறுமையுடன் இருப்பார்.

கடவுளைச் சொந்தமாக்கிக் கொள்வது என்றால், கடவுளின் படைப்பு முழுமையும் உன்னுடையவை என்பதை உணர்வது. கடைக்குச் சென்று பொருள்களை வாங்கி வருவதில் அவசரம் காட்டுகிறாய். வேகமாக வீடு திரும்புகிறாய். உன் வீட்டிலேயே அத்தனை பொருள்களும் ஏற்கெனவே இருக்கும்பொழுது, உன்னிடம் அவசரம் இல்லை. நீ நிம்மதியாக இருக்கிறாய்.

உன் அவசரம், உன்னைச் சமநிலையில் இருந்து பிறழச் செய்கிறது. உன்னைச் சிறுமைப்படுத்துகிறது. அதனால், என்றென்றும், எந்நிலையிலும் பொறுமையாய் இரு. எல்லையற்ற பொறுமை கொள். அது கடவுள் உன்னுடையவர் என்பதை உனக்கு உணர்த்தும். உன் விழிப்புணர்வின் மூலமாகவும், சாதனையின் மூலமாகவும், நீ எல்லையற்ற பொறுமையைப் பெறலாம்.

நீங்கள் கடவுளின் நியதிக்கு உட்பட்டவர்கள் என்பதைப் புரிந்து கொண்டால், உரிமைக் கோரிக்கையை நிறுத்துகிறீர்கள். உங்கள் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

சாதாரணமாக, நாம் மனத்தைத் துரிதப்படுத்துகிறோம். செயலில் நிதானமாக இருக்கிறோம். பொறுமையின்மை என்பது மனத்தை அவசரப்படுத்துவது; மந்தம் என்பது தாமதமாகச் செயல்படுவது.

ஆனால், இதற்கு மாறாக, மனத்தில் பொறுமையும், செயலில் சக்தியையும் உந்து வேகத்தையும் கொள்வது சரியான வழியாகும்.



குருஜி

மிகச் சிறு வயதிலேயே குருஜி ஆன்மீக வாழ்வில்தான் ஈடுபடுவார் என்பதற்கான அறிகுறிகள் தெரிந்தன. அப்போதே பல சமயங்களில் அவர் தியானத்தில் இருப்பாராம். பதினேழு வயதிற்குள்ளேயே கல்லூரிக் கல்வியை முடித்து, வேத சாத்திரங் களையும் படித்துத் தேர்ந் திருந்தார்.

அவர் பிறந்தது மே 13. 1956. சங்கர ஜெயந்தி தினம். பிறந்த பதினோராம் நாள் நாமகரணம் செய்ய வேண்டும். அன்றைய தினமும் மிக விசேடமான நாள் : ராமானுஜர் அவதரித்த தினம். எனவே குருஜிக்குப் பெயர் சூட்டும்போது ரவி சங்கர நாராயணா என்றே பெயரிட்டார்கள்!

அவர் சாதாரணக் குழந்தை அல்ல என்பதைக் காட்டச் சில நிகழ்வுகள் இளமையிலேயே அமைந்தன. குழந்தை ரவி சங்கர் அம்மாவின் மடியில் வெகு நேரம் ஓர் ஊஞ்சலில்தான் இருப்பார். ஒரு நாள், குழந்தையை மட்டும் ஊஞ்சலிலேயே விட்டுவிட்டு அம்மா எழுந்து, வெளியேயிருந்து வந்த கணவருக்காகக் கதவைத் திறக்கப் போனார். அந்தச் சமயம், நான்கு புறமும் கனத்த இரும்புச் சங்கிலியோடு தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சல், குழந்தையோடு அப்படியே பொத்துக் கொண்டு பெருத்த ஓசையுடன் தரையில் வீழ்ந்தது. அம்மாவுக்கு அதைக் கண்ட அதிர்ச்சியில் மூர்ச்சையாகிவிட்டது; குழந்தைக்கு ஆபத்து என்ற நினைப்பில் மயக்கமாகிவிட்டாள். அப்பாவுக்கு அவர் கண்களை நம்பவே முடியவில்லை.

குழந்தை சிரித்தபடி கைகளையும், கால்களையும் உதைத்துக் கொண்டு ஒரு சிறு காயம்கூட இல்லாமல் பத்திரமாக இருந்தது. நான்கு பக்கச் சங்கிலிகளும் குழந்தையின்மீது படாமல் அப்படியே வெளியே விழுந்திருந்தன!

படம் : சௌரா

இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டில் யார் மிகப் பெரிய பணக்காரராக முடியும்?

"அதிகத் தகவல்களை (data, information and knowledge) வைத்திருப்பவர்களே நாளைய உலகை ஆள முடியும்" என்கிறார் பரபரப்பான எதிர்காலவியல் எழுத்தாளரான ஆல்வின் டாஃப்ளர்.

இதை எப்படிப் புரிந்துகொள்வது?

குறிப்பிட்ட 'பிராண்ட்'டின் நூறு கிராம் பற்பசை கேட்கிறார் வாடிக்கையாளர். கடைப் பையன் மூலை முடுக்கெல்லாம் துழாவி, கடைசியில் 'இருநூறு கிராம் பற்பசைதான் இருக்கு!' என்கிறான். பொறுமையாகக் காத்திருந்த வாடிக்கையாளர் வெறுத்துப் போகிறார். வேறொரு கடையில், மேசையில் உள்ள கம்ப்யூட்டர் பட்டனைத் தட்ட, நொடியில் ஸ்டாக் விவரம் தெரிவிக்கிறது. கூட்டம் எங்கே அலை மோதும் என்பது உங்களுக்கே தெரியும்.

ஆனால், நம்ம ஊர் மளிகைக்கடை அண்ணாச்சிகளுக்கு, கம்ப்யூட்டர் வேப்பங்காயாகக் கசக்கிறது. ஆங்கிலம் தெரிந்தால்தான் அதை இயக்க முடியும் என்பதுதான் வெறுப்பிற்குக் காரணம். தமிழிலேயே கம்ப்யூட்டரைக் கையாள முடிந்தால், அதுவும் குறைந்த செலவில் கிடைத்தால், தமிழ்நாடு முழுவதும் கம்ப்யூட்டர் மயமாகாதா...?

அத்தகைய ஒரு முயற்சிதான் 'தமிழ் பிசி' (Tamilpc) திட்டம். எழுத்தாளர் சுஜாதா தலைமையிலான குழு, இதற்காகப் படு சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது.

தமிழிலேயே கணக்குகளை எழுதுவது, ஆவணங்களைச் சேமிப்பது, பேலன்ஸ்-ஷீட் தயாரிப்பது, இவற்றுடன் இணையத்தில் தகவல்களைத் தேட உதவும் உலாவி, மின்னஞ்சல் கணக்கைத் தமிழிலேயே பராமரிப்பது ஆகிய பணிகளைச் செய்வதற்கானத் தமிழ் மென்பொருள்களை உருவாக்கும் முயற்சிகள் முன்பே நடைபெற்ற போதிலும், 'தமிழ் பிசி' இவற்றின் முன்னேறிய தொழில் நுட்பங்களைக் கொண்டிருப்பதுடன், இதனை குறைந்த செலவில் பெற முடியும் என்கிறார்கள் இத்திட்ட உறுப்பினர்களான ஜெயராதாவும் லீனாவும்.

இனி அவர்கள்...

"சுஜாதா சார் 'மைக்ரோ சாஃப்ட்' நிறுவனம் பற்றி எழுதிய கட்டுரை ஒன்றில் ஓபன் சோர்ஸ் (open source) இயக்கம் பற்றி குறிப்பிட்டிருந்தார். பணம் செலுத்தி லைசன்ஸ் பெற்ற பின்பே அந்நிறுவன மென்பொருள்களைப் பயன்படுத்த முடிகிறது. மாறாக, சன் போன்ற நிறுவனங்கள் மென்பொருள்களை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்குகின்றன. மைக்ரோ சாப்டின் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானது இந்த ஓபன் சோர்ஸ் இயக்கம். இதைப் பயன்படுத்தி தமிழ் மென்பொருள்களை உருவாக்கினால், குறைந்த செலவில் தமிழில் கம்ப்யூட்டரைப் பயன்படுத்த முடியும் என்ற அர்த்தத்தில் எழுதினார்.

"சுஜாதாவின் இந்த கருத்துக்கு அமோக வரவேற்பு. தினசரி நூற்றுக்கணக்கான மெயில்கள் குவிந்தன. நீங்களே ஏன் இந்த முயற்சியில் இறங்கக்கூடாது? என்று வாசகர்கள் தூண்டிவிட்




• சுஜாதா

• லீனா





• லீனாவுடன் ஜெயராதா





குறைந்த செலவில் தமிழ் 'பி.சி'

டனர். இப்படி உதயமானது தான் சுஜாதா சாரின் 'தமிழ் பிசி' ஐடியா.

"முதல் கட்டமாக சுமார் ஏழாயிரம் தமிழ் கம்ப்யூட்டர் சொற்களை அவர் மொழியாக்கம் செய்தார். இதில் பிரதி பலன் எதிர்பாராத தன்னார்வலர்களையும் இணைத்துக் கொண்டார். உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் இதில் பங்கேற்றனர்.

"அடுத்த கட்டமாக, திட்டத் தொழில் நுட்பக் குழு அமைக்கப் பட்டது. இதில் உள்ள யாருக்கும் ஊதியம் கிடையாது. பகுதி நேர அடிப்படையில் இக்குழு செயல்படுகிறது. சுஜாதா சார் தலைமையில் நான், எம்.ஏ. சிவக்குமார், சாந்த குமார், லீனா, தேசிகன் போன்றோர் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறோம்.

"ஓபன் சோர்ஸ் இயக்க அடிப்படையின்படி, தமிழ் பிசி திட்ட செயல்பாடுகள் வெளிப்படையானவை. ambalam.com/tamilpc.html என்ற முகவரியில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

"முதல் கட்டமாக அறிக்கைகள் தயாரிக்க, கடிதம் எழுத, கணக்குகளைப் பராமரிக்க, ஸ்டைல்களை உருவாக்கவெல்லாம் பயன்படும் open office மென்பொருளை, இணைய தமிழ் உலாவியை (browser), தமிழ் மின்னஞ்சல் வசதியை உருவாக்கும் வேலை நடக்கிறது.

"வேகமாக வளர்ந்து வரும் இந்த "தமிழ் பிசி' திட்டம் நிறைவு பெறும்போது, இதை இணையம் மூலம் இலவசமாகவே பெற்றுக் கொள்ளலாம். இணைய வசதி இல்லாதவர்கள் மிகக் குறைந்த ஒரு தொகைக்கு 'சிடி' வடிவில் இதைப் பெற்றுப் பயன் படுத்திக் கொள்ள முடியும். இந்த 'தமிழ் பிசி' மென்பொருளை 'லினக்ஸ்' கம்ப்யூட்டரிலேயே பயன் படுத்த முடியும்" என்கிறார் ஜெய ராதா.

"சரி, தற்போது பெரும்பாலும் மைக்ரோ சாப்ட்டின் விண்டோஸ் சார்ந்த கம்ப்யூட்டர்களே பிரபலமாக இருக்கும்போது, ஏன் லினக்ஸ் (Linux) ஐ தேர்வு செய்ய வேண்டும்?"

"ஓபன் சோர்ஸ் இயக்கத்தின் விளைவாக தற்போது, லினக்ஸ் உள்ளிட்ட பிற இலவச மென்பொருளில் செயல்படும் கம்ப்யூட்டர்களே பிரபலமாகி வருகின்றன. இந்தக் கம்ப்யூட்டர்களைத் தேர்வு செய்வதன் மூலம் அந்த வகையான அடுத்த தலைமுறை மென்பொருளையும் இலவசமாகப் பெற முடியும். ஒவ்வொரு முன்னேறிய வடிவத்துக்கும் பணம் கொடுக்கத் தேவையிருக்காது. எதிர்காலத்தில் 'லினக்ஸ்' போன்றவை தான் செல்வாக்குப் பெற உள்ளது" என்கிறார்கள் ஜெயராதாவும் லீனாவும்.

இத் திட்டத்திற்கு 'தமிழ் இணையப் பல்கலைக் கழகம்' வளர்ச்சி நிதி ஒதுக்க கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

'தமிழ் பிசி'யில் உள்ள வசதியால் விவரங்களைத் தமிழில் வேண்டுவோர், தமிழிலும், ஆங்கிலத்தில் வேண்டுவோர் ஆங்கிலத்திலும் பயன்படுத்தலாம். ஆனால், கணினித் திரை தொடங்கி, கட்டளைகள் வரை தமிழ் மயம்தான். கம்ப்யூட்டர் திரையே தமிழில்தான் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

குறைந்த செலவில் ஒரு பி.சி. அதுவும் தமிழ் பிசி!

அப்பணசாமி

படங்கள்: ஸ்ரீஹரி



தொலைதூர கிராமத்தில்
ஒரு குழந்தையின்
வாழ்க்கையை மாற்ற
நீங்கள் உதவ முடியும்.
எப்படி?

மார்ச் 22, 1954. ஒரு மங்கல நாள். அன்றைய தினம், காஞ்சிகாமகோடி பீடம் பரமாச்சார்யார் ஜகத்குரு **"ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்"** காஞ்சிபுரத்தில் ஓர் இளைஞரின் வாழ்க்கையை மாற்றி அமைத்தார். அன்றைய தினம், இவ்வாறு சன்யாச நெறிப்பாதைக்கு அறிமுகம் செய்யப்பட்ட இளைஞர் சுப்ரமணியம், ஜகத்குரு **"ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி"** ஸ்வாமிகளாக உருவெடுத்து தன்னுடைய கருணை வழிப் பயணத்தைத் துவங்கினார். இன்று எல்லோருடைய பக்திக்கும், மதிப்பிற்கும், அன்பிற்கும் உரியவராக ஸ்ரீ பெரியவர்கள் திகழ்கிறார்கள்.

அதைத் தொடர்ந்தது ஒரு தெய்வீக வரலாறு.

கடந்த அரை நூற்றாண்டாக, ஸ்ரீ பெரியவர்களின் பாதங்கள் நம்நாட்டில் படாத இடமே இல்லை என்று சொல்லும் அளவுக்கு பத்து லட்சம் கிலோ மீட்டருக்கும் அதிகமாக பயணம் செய்துள்ளார். 3000க்கும் மேற்பட்ட கிராமங்கள் நகரங்கள், பெருநகரங்களுக்கு வருகை புரிந்துள்ளார். லட்சக்கணக்கானோரை சந்தித்து ஆசி வழங்கியுள்ளார்.

ஸ்ரீ பெரியவர்கள், மக்களுக்கு நாம் இரு வழிகளில் உதவ வேண்டும் என்று உளமார எண்ணுகிறார். முதலாவது மக்களின் ஆன்மிக வளர்ச்சிக்கு உதவுதல். இரண்டாவதாக, மக்களின் கல்வி அறிவு, சுகாதாரம் மற்றும் சமூக நலம் ஆகிய துறைகளிலும் நம்முடைய உதவி முக்கியமானது. எனவேதான் தர்ம நெறித் தத்துவத்தை நாடெங்கும் பரப்புதல், பழைய கோவில்களுக்கு புத்துயிர் அளித்தல், வேத பாடசாலைகளை நிறுவுதல், வேத வித்தகர்களை ஊக்குவித்தல் ஆகியவற்றில் அவருடைய தளராத முயற்சிகளை தவிர தன்னுடைய பக்த கோடிப் பெருமக்கள் கிராமப்புற சுகாதாரம், கல்வி, குழந்தை நலம், முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்கள், தூய்மைப் பராமரிப்பு, ஊனமுற்றோருக்கு உதவி மற்றும் மறுவாழ்வு ஆகிய வழிகளில் தங்கள் முயற்சிகளை செலவிட வலியுறுத்துகிறார்.

ரூ.5000, ரூ.500, ரூ.50, எதுவானாலும் நீங்கள் பங்கேற்பதுதான் முக்கியம்.

ஸ்ரீ பெரியவர்களின் வார்த்தைகளில் கூறுவது என்னவென்றால் "ஏழைகள், ஆதரவற்றவர்கள், தாழ்த்தப்பட்டோர் ஆகியோரின் சேவையில் உணவு, இடம் மருந்துகள் மற்றும் கல்வி மூலம் நீங்கள் உதவும்போது நீங்கள் எனக்கே சேவை செய்கிறீர்கள்".

மக்களின் நலத்திற்காக ஸ்ரீ பெரியவர்களின் மனதில் தோன்றும் பல்வேறு திட்டங்களை ஆதரித்து அவற்றை நிறைவேற்ற, எவ்வளவு சிறிய அளவானாலும் சரி, நீங்கள் உங்கள் காணிக்கையை "குரு பாத காணிக்கை" க்கு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இன்றே செயல்படுங்கள். "குரு பாத காணிக்கை" என்ற பெயரில் உங்கள் செக் / டிமாண்ட் டிராப்டை அனுப்புங்கள். உறையின் மீது 'குரு பாத காணிக்கை' என்று குறிப்பிடுங்கள்.

விசேஷ பிரசாதங்கள் : உங்கள் காணிக்கையை இன்றே அனுப்பி ஆகஸ்ட் 12, 2003 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெறவுள்ள ஸ்ரீ பெரியவர்களின் 69வது ஜெயந்தி (பிறந்ததினம்) விழாவில் நடைபெறும் சமஷ்டி பாத பூஜையில் கலந்து கொண்டு ஸ்ரீ பெரியவர்களின் ஆசியுடன் பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இந்த நல்ல செய்தியை பரப்புங்கள். உங்கள் உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் இவ்வாறு கூடுமானவரை இந்த நல்லகாரிய செய்தியை பரப்புங்கள்.

உங்கள் காணிக்கையை 'குரு பாத காணிக்கை' என்ற பெயரில் அனுப்புங்கள். உங்கள் செக்/டிமாண்ட் டிராப்ட்களை 'ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிஜி பீடாரோஹண ஸ்வர்ண ஜெயந்தி மஹோத்ஸவ ட்ரஸ்ட்' என்று குறிப்பிட்டு தபால் செய்யுங்கள்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி :

காஞ்சிபுரம் : ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், 1, சாலைத் தெரு, காஞ்சிபுரம் –631502.

மும்பை : 1 மற்றும் 4, கைலாஸ் பவன், ப்ளாட் 258, சியான் ரோட், சியான் (மேற்கு), மும்பை – 400 022

அனைத்து காணிக்கைகளுக்கும் வருமானவரி சட்டத்தின் கீழ் 80ஜி வரி விலக்கு உண்டு.



குரு பாத காணிக்கை – மஹா குருவின் பாதங்களில் ஒரு சமர்ப்பணம்

“

மருக்கொழுந்தின் முடியைப் பற்றி இலை வெட்டும் கத்திரியால் கொண்டையை வெட்டினான். மருக்கொழுந்து கத்தி ஊரைக் கூட்டினாள்.

”

முழு நிலா துரிஞ்சி மரங்களின் மேல் நின்றிருந்தது. மாசிலான் தனியாக ஒரு பாறையின் மீது உட்கார்ந்து நிலவைப் பார்த்தபடி இருந்தான். வெம்மையில்லாத ஒருபகல்பொழுதில் உட்கார்ந்து கொண்டிருப்பது போல நிலவின் ஒளி அவனுக்குக் காட்டைத் திறந்துவிட்டிருந்தது. முன்பு போலவெல்லாம் இப் போது காட்டில் மரங்கள் கிடையாது. விறகுக்கும், வயிற்றுப் பாட்டுக்கு விற்பதற்கும், சாராயம் காய்ச்சவும், மரச்சாமான் களுக்கும் என்று வெட்டிவிட்டார்கள்.

மாசிலானுக்குப் புத்தி தெரிந்த நாளிலிருந்து இந்தக் காடும் அவன் கூட்டாளிகளில் ஒருவனைப் போல இருந்து வருகிறது. அவனுக்கு அதன் ஒவ்வொரு மரமும், பாறை முகடுகளும் தெரி யும். உயர்ந்த பாறைகளின்மேல் ஏறி நின்று வானத்தைத் தொட்டு விட்டதாய் பலமுறை பரவசப்பட்டிருக்கிறான். அங்கிருந்து தொலைவில் சிறுத்துத் தெரியும் ஊர்களைப் பார்த்து, அவை இத்தனை சிறியவைகளா என்று மலைத்திருக்கிறான். அருகிருந் தால் அவை காட்டும் பிரம்மாண்டம் எவ்வளவு பொய்யானது என்றும்கூட தோன்றியிருக்கிறது அப்போது.

அவையெல்லாம் ஒரு காலம். இப்போது காடு காடாகவே இல்லை. திடீரென அவனுக்குப் பாறைகளெல்லாம் பலூன்களைப் போல சுருங்கித் தெரிந்தன. மரங்கள் எல்லாம் தோட் டத்துச் செடிகள் போல உருமாறியிருந்தன. காட்டின் நடுவில் தனிமையிலே இப்படி உட்கார்ந் திருப்பது துக்கத்தைக் கிளறியது.



நாவல் மணம்

ஒரு துயரமானவனின் அருகில் அமர்ந்திருப்பதைப் போலிருந்தது.


கொஞ்ச தூரத்தில் பெரும்பாறையிலிருந்து கூச்சலும் கும் மாளமும். பொன்னுசாமியின் பீடி மண்டியிலிருந்து இருபத் தைந்து பேர்கள் காட்டைச் சுற்ற, அன்று மாலையில் தான் அங்கு வந்து சேர்ந்தார்கள். ஊர் அருகிலேயே இந்த மலையும் காடும் இருப்பதால் மாதத்துக்கு ஒருமுறையோ, சில மாதங்களுக்கு ஒரு முறையோ காட்டுக்கு வருவார்கள் அவர்கள்.

இரண்டு நாட்களுக்கு காட்டுக்குள்ளேயே

அழகிய பெரியவன்



மினிதொடர்



தங்கி, ஆக்கித் தின்று, சீட்டு விளையாடியோ, காட்டைச் சுற்றியோ கழிப்பார்கள். இரவு உணவு ஆனதும் ஆளாளுக்குப் பிரிந்து சீட்டாடிக் கொண்டும் பாடிக் கொண்டுமிருந்தார்கள். மாசிலானுக்கு யாருடனும் இருக்கப் பிடிக்கவில்லை. காடு பேரமைதியாக இருந்தது. சில வண்டுகளின் சப்தங்களும் அந்த அமைதியில் கரைந்துவிட்டன. தேன்மலையின் செங்குத்துப் பாறைகள் நிலவொளியில் வினோதமாய்த் தெரிந்தன. மாமரத் தேரியின் பக்கமிருந்து நரிகளின் ஊளை. மாசிலானின் கவனம் தடைப்பட்டுத் திரும்பியது. பெரும்பாறையிலிருந்து பாட்டுச் சப்தம். தன்ராஜ் அண்ணன்தான் பாடுவது.

'ஒருமுறை பார்த்தாலே போதும்
உந்தன் உருவம் என் மனதைவிட்டு
நீங்காது எப்போதும்.'

தன்ராஜ் அண்ணனுக்கு எப்போதும் பழையப் பாட்டுதான் பிடிக்கும். சீர்காழி, மகாலிங்கம் என்று உச்சஸ்தாயி குரல்களையே விரும்பிப் பாடுவார்.

'கருவிழிப் பார்வையில் மின்னல் வழிந்தோடும் கற்பனைக்கெட்டாத அற்புத சுரம் பாடும்'

மாசிலானுக்கு காதுகளும், நெஞ்சும் அடைத்துக் கொண்டன. இளஞ்சூட்டுடன் காதலின் நினைவுகள் உள்ளே குமிழியிடுகின்றன. கண்மணியை அவன் நினைத்துக் கொண்டான். வெயில் பூச்சிகளைப் போல் காடெங்கும் நிலவொளியில் பறந்தன அவள் முகம். காட்டிலே இரவின் தனிமையில் அமர்ந்து அவளை நினைப்பது மனத்துக்கு அண்மையாய் இருந்தது. இன்னேரம் தூங்கிக் கொண்டிருப்பாள். இலேசாக ஒருக்களித்து கைகளில் ஒன்றை நெற்றியின்மேல் படரவிட்டு, கொஞ்சமாகக் கோணியபடிதான் அவள் படுப்பது. உரோமங்கள் கொட்டிப் போன பிள்ளைத் தாய்ச்சியின் கெண்டைக் கால்களைப் போல் தெரியும் அவள் கால்கள். பகலெல்லாம் ஓயாது பேசிக் களைத்த களைப்பில் கொலுசுகளும் அவளோடு தூங்கிக் கொண்டிருக்கும். இரவுப் பூவொன்றின் வாசம் காற்றிலே பரவியது.

மேட்டுத் தெருவிலிருக்கும் மருக்கொழுந்துவிடம்தான் பீடி இலைகளை வெட்டக் கொடுத்திருந்தான். அப்போது

மாசிலான் இளம் வயசின் வேகத்தில் ஒரு நாளைக்கு மூன்றாயிரம் பீடிகளைக் கூட சுற்றிவிடுவான். காலையில் முறத்தில் புகையிலைத் தூளையும், வெட்டிய பீடி இலைக் கட்டுகளையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தால், பீடிகள் வேகமாய் உருளும்.

பறவையொன்றின் கூடுபோல் சணல்பையின் துண்டில் சுற்றப்பட்டிருக்கும் பீடி இலைகள் சீக்கிரம் காலியாகும். பீடி புன்னிகளை மூடும் பையனை அடிக்கடி மருக்கொழுந்து வீட்டுக்கு வெட்டிய இலைகளை எடுத்துவர அனுப்புவான்.

"ஒங்க மொதலாளி, வெட்டித்தர்ற எலையில என்னா பீடி சுத்தறாரா? இல்ல, சின்னப் பசங்க மாதிரி வெளாடி கிளிச்சிப் போடறாரா?"

பையன் ஒருமுறை மருக்கொழுந்து சொல்வதைச் சொன்னான். அவள் உடனுக்குடன் பீடி இலைகளை வெட்டித் தர முடியாமல் சலித்துக் கொள்கிறாள். மாசிலான் வேகமாய் எழுந்து அவள் வீட்டுக்குப் போனான்.

"இந்தா குடுத்தனுப்புறன்னனே! நீ என்னாத்துக்கு வந்த?" பேசிக் கொண்டிருந்த மருக்கொழுந்தின் முடியைப் பற்றி இலை வெட்டும் கத்திரியால் கொண்டையை வெட்டினான். மருக்கொழுந்து கத்தி ஊரைக் கூட்டினாள். பேச முடியாமல் வாயடைத்து நின்றிருந்த பெண்கள் கூட்டத்தில் கண்மணியும்கூட இருந்தாள். ஊர்ப் பஞ்சாயத்தில் மருக்கொழுந்தின் கொண்டைக்கு அபராதம் கட்ட வேண்டியிருந்தது.

இலை வெட்ட ஆள் கிடைக்காமல் சில நாட்களுக்கு அலைந்து கொண்டிருந்தான் மாசிலான். அவனே வெட்டி, பீடி சுற்றுவது சிரமமாக இருந்தது. அம் முரட்டு இலைகள் வெட்ட வெட்ட தீர்வதுமில்லை! பிறகுதான் கண்மணி இலைவெட்ட கிடைத்தாள். இலைவெட்ட கேட்பதற்கு அவள் வீட்டுக்குப் போயிருந்தான் மாசிலான். அவள் மிரட்சியுடன் நின்றாள். அவளைப் பார்த்ததும் அவனுக்கும் பேசவரவில்லை. அவள் அழகாய் இருப்பதாய் நினைத்தான் மாசிலான்.

"செய்யற தொழில போயி வெளையாட்டுன்னா யாருக்குத்தான் கோவம் வராது?"

வெகுளியாய்ப் பேசிக் கொண்டிருப்பவனை ஆச்சரியமுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அப்போது கண்மணி. மெல்லிய பிரியம் இருவரையும் பிடித்துக் கொண்ட

தும், இருவரும் சேர்ந்து பீடி மண்டிக்குப் போகத் தொடங்கியிருந்தனர். பீடிக் கட்டு களை அடுக்கிய கூடையை மிதி வண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு நடப்பான் மாசிலான். அவனை ஒட்டியமாதிரி பீடி லேபிள்களை ஒட்டிய கட்டுகளைக் கூடையில் சுமந்தபடி போவாள் கண்மணி. இரண்டு கைகளும் தலைச்சுமையைப் பற்றி யிருக்கும். காற்றுடன் போராடும் மாராப்பின் கூச்சத்தில் அவள் நெளிவதை ரசிப்பான் அவன். அவன் உடனிருக்காத சமயங்களில் பின் தொடர்ந்து சீண்டும் ஒருவனை நடுச்சாலையில் உதைத்தான் மாசிலான்.

'உன்ன ஒருத்தன் கேலி பண்றத பாத்துனு சும்மா இருக்கச் சொல்றியா?''

இல்லையென்று அவனை ஆழமாய்ப் பார்த்தபடி தலையசைத்தாள் கண்மணி. அவளின் நெஞ்சத்திலிருந்து இரு நட்சத்திரங் கள் கண்களில் வந்து சிமிட்டின அப்போது.

பறவைகள்தான் மாசிலானை எழுப் பின. சிலர் இன்னும் தூங்கிக் கொண்டிருந் தார்கள். பாறைக்கு அருகிலேயே காலை உணவுக்கு அடுப்பு மூட்டியிருந்தார்கள். பெரும்பாறையின் மறுகையில் தண்ணீர் சலசலப்பு தெளிவாகக் கேட்டது. ஏரியில் இறங்கி சிலர் குளிக்கத் தொடங்கிவிட் டிருந்தார்கள்.

இரவு எப்போது தூக்கம் வந்தது என்பதே தெரியவில்லை. வெறும் உடம்பில் ஈரத்துணி படிந்து குளிர்வதுபோல், ஈரப் பசுமையுடன் காடு மேல் கவிழ்ந்தது. காலையில் குளிரச் செய்யும் சிலுசிலுவென்ற காற்றுக்கு மரங் களும், செடிகளும் அசைந்து கொண்டிருந் தன. பறவைகளின் புதிய புதிய சப்தங்கள். எங்கிருந்தோ ஒரு காட்டு மாடு அடித் தொண்டையில் அழைக்கிறது. மாசிலான் உடம்பை முறுக்கியபடி எழுந்து கிழக்கில் பார்த்தான். அடிவானம் தோல் சீவிய செங்காய் பப்பாளி போலத் தெரிந்தது. அவன் பாறைகளுக்காய் இறங்கி நடந்தான்.


ஏரிக்கரைக்கு வந்து நின்றபோது சூரியனும் வந்திருந்தான். குணசேகரின் வானொலி பாறைமீது இருந்தபடி காலை செய்திகளைச் சொல்லிக் கொண்டிருந்தது. நீரில் இறங்கி ஒரு முழுக்குப் போட்டதும் பரவசம் அவனை தொற்றிக் கொண்டது. மல்லாந்து நீந்தியபடி வானத்தைப் பார்த் தான். மேகப் பிசிறின்றி இளம் நீலத்தில் நிரவியிருந்தது வானம்.

நீரிலிருந்து அவன் எழுந்துவிட நினைத் தான். கரையோரத்திலிருந்து நடு ஏரிவரை படர்ந்து பூத்திருக்கும் தாமரைப் பூக்கள் அவனைத் தடுத்தன. கண்மணிக்குப் பூக்கள் என்றால் உயிர். மாசிலான் ஏரியின் இதயங் கள் போல கூம்பியிருக்கும் தாமரை மொட்டு களை நோக்கி நீந்தினான். இரண்டு மார்பளவு தூரத்திலேயே அவனுக்கு நீர்க் கொடிகள் சிக்கித் தடுத்தன. இன்னும் நீந்திப் போய் சில பூக்களைப் பறித்தான். பூக்களை இறுகப் பிடித்துக் கொண்டு நீரிலிருந்து வர முடியாமல் அலறினான் மாசிலான். கரை யில் இருந்த சிலர் ஏரியில் குதித்தார்கள். ●

''உடம்புல ஏதோ கோளாறு இருக்கு டாக்டர்!''

''எதை வச்சு சொல்றீங்க?''

''மூணு சீரியல்களுக்கு மேல அழுகை வர மாட்டேங்குது!''



''கண்ணூ! நீ அம்மா செல்லமா? அப்பா செல்லமா?''

''வேலைக்காரி செல்லம், மாமா!''

- அம்பை தேவா





அத்தாட்சி

கூட்டைக் கட்டி ஆட்டத்தைவிட
கிருஷ்ணர் வேஷத்துக்குதான்
தாத்தாவுக்குத் தனி பிராபல்யம்.
ஆட்டத்தில் மயங்கி
ஒண்ணுக்கு மூணு
பொண்டாட்டியோடு
வாழ்ந்ததாகக்
கடைசிப் பாட்டிச் சொல்வாள்.
'கூத்தாடி பய பின்னாடி சுத்துவியா'
கோபம் தெறிக்க
அவள் அம்மா போட்ட
சூடு பற்றிய சுவாரஸ்யங்கள்
நிறைய சொல்லிக் கொண்டிருப்பாள்
எல்லாம் தாத்தாவைப்
பற்றியே இருக்கும்.
கிருஷ்ணர் வேஷத்துக்குச்
சுத்து வட்டாரத்துல யாருமில்லை
பேச்சில் பெருமை பூரிக்கும்
ஊதாத மூங்கில் குழாய் ஒன்றும்
உதிர்ந்த மயிலிறகு கிரீடமும்
கடைசி பாட்டியையும் தவிர
அவர் கூத்தாடியதற்கான
எந்த அத்தாட்சியுமில்லை!

செய்யாறு வி.பாலு

வர்றாரு பீஷ்மர்!

தேவயானி, ராஜகுமாரன் தம்பதிகளை அடுத்து ப்ரியா ராமன், ரஞ்சித் தம்பதியினர் 'பீஷ்மர்' என்ற படத்தைத் தயாரித்திருக்கின்றனர்.

"இந்த சினிமாதான் எனக்குப் புகழ் தந்தது. பணம் தந்தது; ஏன்? கணவரையும் தந்தது. எல்லோரும் கேட்டாங்க. சினிமால சம்பாதிச்ச பணத்தை 'சினிமாவிலேயே விடறீங்களே,' என்று. வேற என்ன பண்ண முடியும்? சினிமாதான் வாழ்க்கைன்னு ஆகிப் போச்சு" என்று படபடத்தார் ப்ரியா ராமன்.



• படப்பிடிப்பில் ப்ரியா ராமன்



• ரஞ்சித்

"பீஷ்மர் என்ன கதை?" என்றதும் அருகிலிருந்த ரஞ்சித், "போலீஸ் ஸ்டோரி. நிஜக்கதை மாதிரின்னு வச்சுக்கோங்களேன். 'தூசி'யில நடந்த சம்பவம்போல இன்னும் பல விஷயங்களைச் சேர்த்து, எப்படிச் கலை நயத்தோட சொல்ல முடியுமோ, அப்படி சொல்லியிருக்கேன். வழக்கமான சினிமாப் போலீஸ்காரர்கள் செய்யற மாதிரி இல்லாம, யதார்த்தமா எவ்வளவு முடியுமோ அப்படிப் பண்ணியிருக்கோம்" என்றார் ரஞ்சித்.

'வீட்டுக்குள்ளேயே ஹீரோயின் இருக்கும்போது தேவயாணியை நாயகியா போட்டிருக்கீங்களே!" என்றதும் ப்ரியா ராமன் ஆரம்பித்தார்.

"நான் முழுசா தயாரிப்பு சைடு பாத்துக்கிட்டிருக்கேன். ஒரே சமயத்துல இரண்டு பக்கம் கால் வைக்கிறது ரொம்ப டென்ஷனான் வேலை. அதான், நான் பண்ணலை" என்ற ப்ரியா ராமன், தயாரிப்பாளர் ஆனதில் நிறையத் தெரிந்து கொண்டாராம்!

"நான், ரஞ்சித் எல்லாம் ஆக்ட் பண்ணும்போது, ஒரு அரை மணி நேரம் லேட்டா ஷூட்டிங்குக்குப் போவோம். அரைமணி நேரம்தானேன்னு தோணும். ஆனா இந்த அரைமணி நேரத்துக்கான செலவை தயாரிப்பாளரா பார்க்கும்போது, வலி இருக்கு. கண்டிப்பா ஒவ்வொரு நடிகர் நடிகைகளும், ஒருமுறை படம் தயாரிச்சுப் பாருங்கன்னு சொல்றேன். அப்பதான் தயாரிப்பாளரின் அவஸ்தை புரியும்" என்றார் ப்ரியா ராமன்.

அருகில் கூல் டிரிங்ஸ் குடித்துக் கொண்டிருந்த ரஞ்சித்திடம் 'நீங்களே டைரக்ஷன் துறைக்கு வந்திட்டீங்களே?'' என்று வம்புக்கிழுத்தோம்.

"என்ன நானே... நான் வரக்கூடாதா? சினிமாவுக்கு வந்ததே இயக்குனர் கனவோடதான். சந்தர்ப்ப வசத்தால நடிகனாயிட்டேன். நடிகனானா... கார் வாங்கலாம், பங்களா வாங்கலாம், பணம் சம்பாதிக்கலாம். ஆனா மனசுக்குள்ள அந்த இயக்குனர் இருந்து அரிச்சுட்டே இருப்பான்.

"நானும் முப்பத்தைந்து படங்களுக்கு மேல நடிச்சுட்டேன். எனக்கு ஆரம்பத்துல இருந்ததைவிட, இப்ப அதிக சினிமா அனுபவம் இருக்கு. இதுபோதும்னு நினைச்சேன். இயக்குனராயிட்டேன்" என்றார் இந்த பீஷ்மர்!

- அப்பு

"ஸ்வர்ணாலாயா ஜூவல்லரியில் ஆடித் தள்ளுபடி"

'முதலிலேயே ஒரு முறை திரு. சுகுமாரன் சொல்லியிருக்கிறார்: "சரியான பதில் சொல்வதை விட, சரியான கேள்வி கேட்பது சிரமம்" என்று. அதனால் இந்த முறை ஸ்மார்ட்டாக கேள்விகள் கேட்டு பதில் வாங்கிப் பிரசுரிக்கணும்' என்று முணு முணுத்துக் கொண்டே தி. நகர் பசுல்லா ரோடு ஸ்வர்ணாலயா ஜுவல்லரிக்குள் நுழைந்தேன்.

திரு. சுகுமாரனும் அவரது மகன் கணேஷும் 'சாமி' படத்தில் விக்ரம் கெட்ட வார்த்தை பேசுவதைப் பற்றிச் சிரிப்புகளின் நடுவே விவாதித்துக் கொண்டிருந்தார்கள். "என்ன சார், பிசினஸ் மேன்கள் தங்களது மகன்களுடன் பேசிக் கொள்வது கூட அரிது என்பார்கள். ஃப்ரெண்ட்ஸ் மாதிரி பேசிக் கொள்கிறீர்களே?" என்றேன்.

இயல்பாகப் பதில் சொன்னார்: "Some parents finance the children's growth. They do not bring them up. இடைவெளி விழுந்து, பின்னால், 'வளர்த்து, ஆளாக்கி, பேராக்கி' – என்ற சோக டயலாக் எல்லாம் அதனால் தான் வருகிறது."

"சார், பல விளம்பரங்களில் 30, 40 பவுனில் ஒரே நெக்லஸாகக் காண்பிக்கிறார்கள். அது எதைச் சாதித்திருக்கிறது?" என்றேன்.

"பத்து வருடங்களுக்கு முன்பு வரை, கவிதைகள் தொங்கும் கொக்கியாக நிலவு இருந்தது. இன்னும் பத்து வருடங்களில் அதே நிலவு இன்னும் ஒரு ஏர்போர்ட்டாக மாற இருக்கிறது.

இந்த அசுர வேகத்தில், நிதானிக்க இடைவெளி இல்லாத வளர்ச்சி(?)யில் - 30 பவுனில் ஒரே நெக்லஸ் என்றும், அடுக்கடுக்காக ஆறு, ஏழு நெக்லஸ் என்றும் பெண்களை நகை தூக்கிகளாகக் காட்ட முயற்சிக்கும் விளம்பரங்கள் இன்றைய தினம் சாதிக்க முடியாத அணுகுமுறைகள். முதல்கள் முடங்கிப் போகும் அந்த மாதிரி பெரும் நகைகளை நாங்கள் ஸ்டாக் செய்வதில்லை.

ஒரு வளையல், ஒரு நெக்லஸ் என்றாலும் அழகுக்கு அழகு சேர்க்கும் நளினமான கலெக்‌ஷன்தான் எங்கள் ஸ்டாக். இரண்டு ஐட்டங்கள் ஒரே தினுசில் இருக்காது."

நான் கேட்டேன், "சார், பொருளாதாரப் பின்னடைவு கடந்த 1 வருடமாக எல்லா தொழிலையும் பாதித்திருக்கிறது. உங்கள் அனுபவம் எப்படி?"

"நகை வணிகம் விநோதமானது. ஒரு மாதம் சீசன்; இரண்டு மாதம் டல் சீசன் என்று ஒரு tantalizing swing இருக்கும். நான் டல் சீசனுக்குதான் Prepare பண்ணிக் கொள்வேன். அப்பப்ப என்று Adhoc விளம்பரங்கள் செய்வது, வாடிக்கையாளரை மையப்படுத்தாமல் பொருள்களை / நகைகளை மையப்படுத்தி விளம்பரம் செய்ய சிந்திப்பது, நமக்கு போட்டியாளர்கள் நம் தொழிலுக்கு வெளியேயும் இருப்பதை அறியாதது, நம் வலிமைகளையும் வாய்ப்புகளையும் மறந்து தொழில் ரிஸ்க்கையும், நிறுவன, மற்றும் ஸ்டாக் பலவீனங்களை நினைத்து மருகுவது – இதை எல்லாம் நான் செய்வதில்லை. RECESSION என்னைப் பாதிக்கவில்லை."

"ஆனால், சில கடைகள் அனுபவம் இருந்தும் தடுமாறுவது நடக்கிறதே" என்றேன்.

"உண்மைதான். சோகமான விஷயம். இரண்டு காரணங்கள் சொல்லலாம்.

ஒன்று: விளம்பரங்கள் செய்வதில், தொழிலைக் கொச்சைப் படுத்தாத சின்னஞ் சிறு தந்திரங்கள் வேண்டும். நமது இலக்கு சந்தையின் நடத்தை மற்றும் ரசனை வேறுபாடுகளை உணராமல், விளம்பரம் செய்வது வீண். இன்று என்பது, நாம் நேற்று தயாரித்த எதிர்காலம். அதனால், நாம்தான் பொறுப்பு. பலன் இல்லாத விளம்பரங்கள் எதிர்காலப் புதை மணல்.

இரண்டு: செலவு பாரங்கள், ஆடம்பர வாழ்க்கை, நிதானிக்காத வேகம் – இவை நம் நிறுவனத்தை முடமாக்குவதை அறியாமல் வாழ்வது, மூழ்கிக் கொண்டிருக்கும்

கப்பலில் முதல் வகுப்பு அறை போல ('Secure cabins in a sinking ship') சுதாரிக்கத் தெரியாமல் குருட்டுத் தைரியத்தில் இருப்பது.

இவை இரண்டும் தான் நல்ல வியாபாரம் இருந்தும் கடைகள் சிறிது சிறிதாக சரிவதன் காரணங்கள்'' என்று முகத்தில் அக்கறையுடன் சொன்னார்.



• சுகுமாரன்



• லலிதா

"உண்மைதான். ஆடி மாதம் வருகிறது..." என்று நிறுத்தினேன்.

"சிலர் ஆடி மாதத்தில் சுபகாரியங்கள் செய்ய யோசிக்கின்றனர். ஆனால் **ஆடிப் பதினெட்டு, ஆடிக் கிருத்திகை, ஆடி அமாவாசை, ஆடிப் பூரம், வரலக்ஷ்மி விரதம், காயத்ரி ஜபம், ஐந்து ஆடி வெள்ளிக் கிழமைகள் — கிட்டத்தட்ட 11 /12 நாட்கள் புனித நாட்களாக இருக்கும் ஒரே மாதம் ஆடி மாதம்தான்.**

என் வாடிக்கையாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் முழுவதும் தள்ளுபடி விற்பனைதான். மங்களகரமான பரிசுகள், ஜாக்கெட் பீஸ், லக்கி விநாயகர், எல்லா ஐட்டங்களிலும் டிஸ்கவுண்ட், 1 கிராம் SANGOLD வளையல்களில் 10% less, நகைகளில் கூலி இல்லை, குறைந்த சேதாரம், கல் விலையில் தள்ளுபடி, டயமன் விலையில் 2000 ரூபாய் ஒரு காரட்டுக்கு சலுகை என்று தருகிறோம்."

''உங்களுக்கு ஆடிமாதம் Peak சீசன் தான் ஒவ்வொரு வருடமும். சரி சார், ரீசன்ட்டாக நீங்கள் செய்த ஸ்பெஷல் டிசைன், ஆர்டர்... எதுவும்''... என்று இழுத்தேன்.

''அண்ணாமலை டெலி சீரியலுக்கு ராதிகா அணிந்திருக்கும் பெரிய முத்துப் பதக்கம் நான் செய்ததுதான். ''சூரியன்'' பத்திரிகை எடிட்டராக வரும் ராதிகா அதை பிரதிபலிக்கும் வண்ணம் செய்யச் சொன்ன ஆர்டர். விவரம் தெரிந்த அனைவரும் ஆர்டர்கள் கொடுத்த வண்ணம் இருக் கிறார்கள். அதற்கு முன் ராதிகா அந்த சீரியலில் போட்ட பட்டைச் செயின் வைரப்பதக்கமும் நாங்கள் செய்ததுதான். She has a rare taste" என்றார். (இன்று இரவு சீரியலில் பார்க்க வேண்டும்.)

''வணிகம் சோர்ந்து குழப்பத்தில் இருக்கும் சக வியாபாரிகளுக்கு நீங்கள் என்ன அறிவுரை சொல்வீர்கள்?''

சிரித்தார். ''அறிவுரை சொல்லும் அளவுக்கு எனக்கு அனுபவம் பத்தாது. ஆனால் சோர்ந்து போவது மட்டும் கூடாது. குதூகலம் Perfume வாசனை மாதிரி, கண்ணுக்குத் தெரியாத ஒரு கதிர் வீச்சு. குதூகலமாயிருங்கள். கவலை, சின்னப் பொருளுக்கும் பெரிய நிழலைத் தரும் ஒரு வளர்ச்சி விரோதி. தோல்வியும் கல்விதான். ஒரு செயலை முன்பை விட இன்னும் புத்திசாலித்தனமாகத் தொடங்க கிடைக்கும் ஒரே வாய்ப்பு தோல்விதான்."

"1998க்கு முன் பலப்பல வருடங்கள் லலிதா ஜுவல்லரியின் நிர்வாக இயக்குநராக இருந்தீர்கள். இப்போது 'ஸ்வர்ணாலயா' என்ற வித்தியாசமான அனுபவம்! எப்படி ஒப்பிடுவீர்கள்?"

"ம்ம்... மைக்கேல் ஷீமாக்கர் சொந்த FIAT TAXI ஓட்டுவது போல" என்று சிரித்தவர் தொடர்ந்தார். "அந்த 15 ஆண்டு அனுபவம் எனக்கு பெரும் Asset. நினைத்து, நினைத்து புன்னகைக்க வைக்கும் ஞாபகங்கள்..."

எப்போதும் சிரித்த முகமாக வலம் வரும் திருமதி லலிதா, திரு சுகுமாரன் தம்பதியிடம் விடைபெறும் போது சொன்னேன், "you serve with a smile."

உடனடியாக பதில் வந்தது.

"A man without a smiling face should not open a shop. And many a sale has been won - or lost - in the first three minutes"-என்றார்.

பேட்டி : சந்திரசேகரன்

பாரிமுனையின் காலை நேரம். நகரம் சோம்பல் முறித்தபடி மெல்ல தயாராகிக் கொண்டிருந்தது. நாள் முழுக்கச் சுமை தாங்க மாநகராட்சிப் பேருந்துகள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தன. லிங்கி தெரு, தம்பு தெரு முனைகளில், தங்கள் வடசென்னை தொழிற்சாலைகளுக்குச் செல்ல, அலுவலகப் பேருந்துக்காக அலுவலக அதிகாரிகள் காத்திருந்தார்கள். ஹிண்டு, எக்ஸ்ப்ரஸ் என்று நேற்றைய கவலைகளில் முகம் புதைத்தபடி பாதிப் பேரும், அலுவலக மேலதிகாரிகளை விமர்சித்துக் கொண்டு சிலரும், முந்தைய நாள் தொலைக்காட்சி கிரிக்கெட்டை அலசியபடி சிலரும் சின்னச் சின்னக் குழுக்களாய் நின்றிருந்தார்கள்.

சாமி, தம்பு தெருவிலிருந்து வெளிவந்து அந்த அலுவலக அதிகாரிகளை நோக்கி நடந்து வந்தான். ஓர் அலுவலகக் குழுவைத் தேர்ந்தெடுத்தான். அவர்கள் நடுவில் நின்று கொண்டு "அய்யா.. தர்மம் பண்ணுங்கய்யா.." நாணயங்களைப் போட்டு வைத்திருந்த தன் அலுமினியக் குவளையைக் குலுக்கி சப்தம் செய்தபடியே, தன் க்ஷீணமான கெஞ்சல் குரலில் யாசித்தான். பேப்பர் கனவான்கள் கவனிக்காமல் இருக்க, ஒரு நீலச் சட்டைக்காரர் அவனை ஒரு தடவை பார்த்துவிட்டு பேசாமல் இருந்தார். சாமி அவர் அருகில் சென்று கோரிக்கையை மறுபடி வைத்தான். நீலச் சட்டைக் கனவான் முகத்தைத் திருப்பிக் கொண்டு மெல்ல மறுக்கும் தோரணையில் தலையை ஆட்டினார். "ரெண்டு நாளா சாப்பிடல அய்யா..." என்று அனுதாபம் சேர்த்தான். அவர் அசையாமல் இருந்தார். அவரை எழுப்புகிறமாதிரி ஒரு தடவை குவளையை ஆட்டி சப்தம் செய்தான். மறுபடி "அய்யா' என்று குரல் எழுப்ப, அவர் திரும்பி 'சில்ற இல்ல போடா' என்றார், சற்று எரிச்சலுடன். சாமி கொஞ்சம் அவர் முன் நின்றுவிட்டு நகர்ந்தான்.

பாரிமுனை வரை சென்று திரும்பி தம்பு தெருவிற்கே வரும்போது, அந்த நீலச்சட்டைக் கனவான் தன் நண்பர் குழுவுடன் இன்னும் பேருந்து வராமல் நின்று கொண்டிருந்தார். அவரைக் கடந்து போகும்போது தான் அந்த ஆள் எதிர்ப்பக்கம் தென்பட்டான். வெள்ளைச் சட்டையும் சாம்பல் நிறக் கால் சராயும் அணிந்து, இரண்டு நாள் தாடியுடன் இருந்தான். தளர்வான நடை நடந்து வந்தான். தலை இலேசாகக் கலைந்திருந்தது. அந்த ஆள் அந்த அலுவலர்கள் மத்தியில் நின்று அந்த நீலச்சட்டை கனவானிடம் 'குட்மார்னிங் சார்' என்றான். யாருமே வணக்கம் சொல்லாத மதராசில் ஓர் அன்னியனிடமிருந்து வந்த திடீர் வந்தனத்தை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்ற தடுமாற்றத்தில், அவர் மெல்லத் தலையை மட்டும் அசைத்தார்.

"கேன் ஐ டிஸ்டர்ப் பார் டூ மினிட்ஸ் சார்?" - என்று ஆங்கிலத்தில் தொடர்ந்தான். "மை நேம் இஸ் செல்வம் சார். ஐ அம் அ கிராஜிவேட். மை நேடிவ் ப்ளேஸ் இஸ் காரைக்குடி.. ஒரு இன்டர்வியூ விஷயமா இங்க வந்தேன். இங்கதான் பூக்கடை பக்கத்துல தங்கியிருக்கேன்."

நீலச்சட்டையும் அவர் சகாக்களும் அவன் ஆங்கிலத்தால் கவரப்பட்டு அவன் சொல்வதை ஆர்வமாய்க் கேட்டார்கள்.



ஆனந்த் ராகவ்

அவன் தொடர்ந்தான். "இன்டர்வியூ முடிஞ்சு போச்சு. ஐ ஹவ் டன் வெல் சார். ஒரு மாசத்துல ஆர்டர் வந்துரும். ஊருக்குப் போய் எல்லா ஏற்பாடுகளும் செஞ்சிகிட்டு திரும்பி வரணும். ஆல் ஆப் அ சடன்.. நேத்து ராத்திரி யாரோ லாட்ஜ் ரூமுக்குள்ள புகுந்து என் சூட்கேஸ், பை... எல்லாத்தையும் திருடிக்கிட்டுப் போயிட்டாங்க சார். காலைல எழுந்து பார்த்தா, ஆல் மை பிலாங்கிங்ஸ் ஆர் மிஸ்ஸிங். ஐ அம் ஹெல்ப்லெஸ். இன்னைக்கு காரைக்குடிக்கு திரும்பிப் போகணும். கைல ஒரு பைசா இல்ல. என்ன பண்றதுன்னு தெர்ல."

மிஸ்டர் ஆங்கிலம்

'ஹிண்டு' வில் மூழ்கியிருந்த ஒரு கனவான் தலையைத் தூக்கி அவனைப் பார்த்தார். நீலச்சட்டை அவனின் நோக்கம் உணராமல் "போலீஸ் கம்ப்ளெயிண்ட் குடுத்திங்களா?" என்றார்.

"செஞ்சாச்சு சார். கம்ப்ளெயிண்ட் எழுதி வாங்கிகிட்டாங்க. ரெண்டு நாள் ஆவும் அப் பிடிங்கறாங்க. கைல காசு இல்லாம இங்க ரெண்டு நாள் தங்க முடியாது சார். பணம் சர்டிபிகேட்ஸ், துணி மணி எல்லாம் போச்சு. எனக்கு இப்ப ஊருக்குத் திரும்பிப் போகணும் அவ்வளவு தான்." கண்கள் கலங்கி இலேசாக அழுதான். "இப் யு ஹெல்ப் மி, ஐ வில் பி க்ரேட் புல் சார்."




நீலச்சட்டை அவன் பிரச்னை தன்னை பாதிக்கும் தீவிரம் தெரியாமல் தர்ம சங்கடத்தில் "நான் என்னங்க செய்ய முடியும்?" என்றார்.

"எனக்கு காரைக் குடிக்குத் திரும்பிப் போக பஸ் சார் ஜுக்கு பணம் கிடைச்சாக் கூடப்

போதும் சார்."

நீலக்கனவான் காரைக்குடி இருக்கும் இடம், பஸ் கட்டணம் ஆகியவற்றை யூகித்த வாறே என்ன செய்வதென்று தெரியாமல்... "போலீஸ்ல சொன்னீங்கன்னா ஹெல்ப் பண்ணுவாங்க" என்றார்.

அவன் விடாமல், "ஐ கான் அண்டர்ஸ் டான்ட் யுவர் ஃபீலிங்க்ஸ் சார். நான் உங்களை ஏமாத்தி பணம் புடுங்கறேன்னு நினைக்கிறீங்க இல்லையா? நீங்க செக் பண்ணுங்க சார். நான் இன்டர்வியூ வந்தது எம்.ஆர்.எல்ல. ஹெச். ஆர்.டி. மேனேஜர் பேரு மிஸ்டர் பாலகிருஷ்ணன். அவருகிட்ட பேசிப்பாருங்க. அவரு விசிட்டிங் கார்டு கூட வச்சிருக்கேன். இதப் பாருங்க."



நீலச் சட்டை தன்னிச்சையாய் அந்தக் கார்டை கையில் வாங்காமல் பார்த்தார்.

"ஐ ஆம் ஃப்ரம் அ டீசன்ட் ஃபாமிலி சார். எங்கப்பா நான் இது மாதிரி நான் காசு கேட்டு பிளாட்பாரத்துல பிச்சைக்காரன் மாதிரி அலையறேன்னு தெரிஞ்சா, அவ மானத்துல தற்கொலை பண்ணிக்குவாரு."

நீலம் "அதுக்கில்லீங்க..., நான் உங்களை சஸ்பெக்ட் பண்ணல" என்றார் பலஹீன மாக. அலுவலக நண்பர்கள் அவரைப் பார்த்துக் கொண்டிருக்க, வேறு யாராவது உதவிக்கு வருவார்களா என்று கண்ணால் தேடினார். பேப்பர் கனவான் 'நமக்கெதுக்கு வம்பு' என்று மறுபடியும் 'ஹிண்டு'வில் தலையைப் புதைத்துக் கொண்டார்.

அவன் மறுபடி தன் படிப்பு, குடும்ப விவரங்கள், தன் மதிப்பெண்கள், கல்லூரி யில் கோல்ட் மெடல் வாங்கியது என்று ஆங்கிலத்தில் அடுக்கினான். பேசி முடித்து இலேசாக விசும்பினான். நீலம், கொஞ்சம் சிந்தனைக்குப் பிறகு தன் பர்சை எடுத்து அதைப் பிரித்து, பத்து ரூபாய் நோட்டு ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அவன் விசும்பலின் தீவிரத்தால் கடைசி விநாடி மன மாற்றத்தில் இன்னொரு பத்து ரூபாயைச் சேர்த்து அவனிடம் நீட்டினார்.

அவன் அந்த இரண்டு பத்து ரூபாய் தாள்களை வாங்காமல் அழுகையினூடே சிரித்தான். அவரைக் கண்களுக்குள் பார்த்து, "சார், நான் பிச்சை கேக்கலை சார். ஹெல்ப் கேக்கறேன். எக்மோர்லந்து பஸ் சார்ஜ் மட்டுமே நூத்து அம்பது ரூபா ஆகும் சார். இல்லன்னா இந்த வாட்ச்சை வச்சிக்கங்க." என்று சடாரென்று கைக்கடியாரத்தைக் கழற்றினான்.

நீலச்சட்டை அடிபட்டவராய் "நோ, நோ, அதெல்லாம் வேண்டாம்" என்று பின் வாங்கினார். அவன் தன் ஆங்கிலப் புலம்பலைத் தொடர்ந்தான். கர்சிப் எடுத்து மூக்கைச் சிந்தி கண்களைத் துடைத்துக் கொண்டான். அவர் இன்னொரு தடவை பர்சைத் திறந்து உணர்ச்சிவசப்பட்ட நிலையில், ஒரு முழு நூறு ரூபாய்த் தாளை உருவி அவனிடம் தந்தார். அவன் இந்தத் தடவை அந்த நூறு ரூபாய்த் தாளை வாங்கிக் கொண்டு அவர் கைகளைப் பிடித்து அழுத்தினான்.

'காட் ப்ளெஸ் யூ சார். கிவ் மி யுவர் அட்ரஸ் சார். நான் போய் உங்களுக்கு ஒரு மனி ஆர்டர் பண்ணிடறன்"

நீலம் "பரவால்லங்க. அதெல்லாம் வேணாம்" என்றார். அவன் மனிதாபிமானம், கருணை என்றெல்லாம் கொஞ்சம் பிரசங்கம் செய்து விட்டு, அவருடன் இன்னொரு தடவை கைக் குலுக்கி நன்றி சொல்லிவிட்டு நகர்ந்தான்.

சாமி மனம் பதைபதைக்க பார்த்துக் கொண்டிருந்தான். அவன் சாமியைக் கடந்து போகையில் இருவர் கண்களும் ஒரு நொடி சந்தித்தன. அவன் அலட்சியமாய் சாமியிட மிருந்து கண்களை விலக்கி நடந்து போனான்.

சாமியின் அலுமினியக் குவளை அவ னைக் கூப்பிட்டது. குனிந்து பார்த்தான். யாரோ போட்ட ஐம்பது பைசா நாணயம் அவனைப் பார்த்துச் சிரித்தது. ●

"சீரியல் பார்த்து வழக்கமா விசும்பி விசும்பி அழுவே; இன்னிக்கு 'ஓ'ன்னு கதறிக் கதறி அழுறியே, ஏன்?"

"இது புது நகைச்சுவை சீரியலுங்க!"

- அம்பை தேவா

நடையில் சரளம், வடிவில் கச்சிதம்!



டாக்டர் திருப்பூர் கிருஷ்ணன்

கணிப்பொறித் துறைப் பின்னணியில் எழுதப்பட்டுள்ள சுவாரஸ்யமான குடும்பக் கதை. இத்தகைய நவீனப் பின்புலத்தில் புனையப்பட்ட புதினங்கள் தமிழில் குறைவுதான். ஒரு விபத்தினால் ஐந்து வருட கால ஞாபகங்கள் ராஜாவுக்கு மறந்து போகின்றன. ஒரு வகை அம்னீஷியா. ஆனால் நாவலின் இறுதியில் கதாநாயகன் மனத்திலிருந்து தொலைந்துபோன பாஸ்வர்ட், திடீரென அவனுக்கு நினைவு வருகிறது. 'பாஸ்வர்ட், பாஸ்வர்ட், பாஸ்வர்ட்' என்று நட்சத்திரச் சிமிட்டலாய் மானிட்டர் கண் சிமிட்டுகையில் விரல்கள் மனக்குகையில் புதையுண்டிருந்த அட்சரங்களை லாகவமாக அடிக்கின்றன. அவனது வெப்-பக்கம் விரிகிறது. கதையின் சிக்கலான முடிச்சு, இந்தப் புது உத்தி மூலம் சுலபமாக அவிழ்க்கப்படும் நேர்த்தி முற்றிலும் புதுமையானது.

பொய்யில் பூத்த நிஜம் ஒரு புதிய சாகுந்தலம். துஷ்யந்தனுக்குப் பதிலாக ராஜா. பரதனுக்குப் பதிலாக பரத். புதிய சகுந்தலா, பழைய சகுந்தலையைத் தன்னோடு ஒப்பிட்டுக் கொள்ளும் இடங்கள் நாவலுக்குத் தனி எழில் தருகின்றன.

வரிசைப்பல் டியூட்டி டாக்டர் போன்ற சின்னப் பாத்திரங்கள் கூட அழுத்தத்தோடு உருவாகியுள்ளன. அனுபவ முதிர்ச்சியோடு 'நறுக் நறுக்' என்று பேசும் சுவாரஸ்யமான பாட்டி இல்லாமல் வாஸந்தி நாவலா! இதிலும் ஒரு பாட்டி கதாநாயகியின் நினைவுகளில் சிந்தனையைத் தூண்டும் வாக்கியங்களை உதிர்த்துக் கொண்டே இருக்கிறாள்... 'அவனுக்குப் பேச்சுப் போட்டிக்கு முந்தைய தினம் காய்ச்சல் வரும். நாட்டிய நிகழ்ச்சிக்கு முன் கால் ஒடியும்... ரோஜா பூக்கும் நிமிஷத்தில் மாடு தின்றுவிட்டுப் போகும்... ரொம்ப கெட்டிக்கார ஸ்டூடண்டிடம் தான் வாத்தியார் கஷ்டமான கேள்வியைக் கேட்பார், அது மாதிரி ரொம்பப் பிரியமானவாளுக்குத்தான் பகவான் அதிக சோதனை கொடுப்பார்' என்பாள் பாட்டி.

உறவு முறியும் அளவு அப்பாவுக்கும் மகனுக்குமிடையே சண்டை ஏற்பட்டதற்கான காரணம், கடைசி அத்தியாயத்தில் தெளிவாகிற போது வாசகர்களுக்குச் சற்று சங்கடமான அதிர்ச்சி ஏற்படுகிறது. மனைவியைச் சந்தேகப்படும் எந்த சந்தேகக்கார அப்பாவும் கூட, பொய்யாகவேனும் இந்த அளவு பேசத் துணிவாரா என்பது சந்தேகமே.

அநாயாசமான லாகவத்தோடு ஜிலுஜிலுவென ஓடும் கதை. புத்தகத்தை எடுத்தால் கீழே வைக்க முடியாத அளவு தெளிவும், சரளமுமாய் வளரும் நடை. கச்சிதமான வடிவ நேர்த்தி. கதையோட்டத்தில் எங்கும் ஒரு சிறு தொய்வும் வராதவாறு செதுக்கிச் செப்பனிடப்பட்ட அத்தியாயங்கள். கல்கியில் தொடராக வந்து ஏற்கெனவே ஏராளமான வாசகர்களைக் கவர்ந்த இந்த நாவல், அண்மையில் வெளிவந்த படைப்புகளில் குறிப்பிடத்தக்க ஒன்று.

பொய்யில் பூத்த நிஜம், வாஸந்தி. கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017. பக்.310, விலை ரூ.70.



சிவகாமியின் சபதம்

பதினாறாம் அத்தியாயம்

அரண்மனைப் பூங்கா

திருநாவுக்கரசரின் மடத்தில் குலச்சிறையாரை மங்கையர்க்கரசி பார்த்து ஏறக்குறைய ஒரு வாரம் ஆயிற்று. இந்த ஒரு வாரம் செம்பியன் வளவனுடைய மகளுக்கு ஒரு யுகமாகச் சென்றது. பாண்டிய குமாரர் இன்று வருவார்; நாளை வருவார் என்று அரண்மனையில் பேச்சாயிருந்தது. நெடுமாற பாண்டியன் வரவைக் குறித்து மங்கையர்க்கரசிக்கு எவ்வித ஆவலும் ஏற்படவில்லையென்றாலும், பாண்டியனோடு அன்று தான் மடத்தில் பார்த்த வாலிபனும் வருவான். அவனிடம் அவனுடைய சிநேகிதனைப் பற்றி விசாரிக்கலாம் என்ற ஆவல் அவள் மனத்தில் பொங்கிக் கொண்டிருந்தது.

இரண்டு வருஷத்துக்கு முன்னால் கார் காலத்தில் விடா மழை பெய்து கொண்டிருந்த ஒருநாள் மாலை நடந்த சம்பவமும் மங்கையர்க்கரசியின் மனத்தில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. அன்று இந்தப் பாண்டிய வாலிபனும் இவனுடைய சிநேகிதன் ஒருவனும் மழையில் சொட்ட நனைந்த வண்ணம் செம்பியன் வளவனின் அரண்மனை வாசலில் வந்து நின்று இரவு தங்க இடம் கேட்டார்கள். விருந்தோம்புவதில் இணையற்ற செம்பியன் வளவனும் அவர்களை ஆதரவுடன் வரவேற்று உபசரித்தான். வந்த இளைஞர்கள் இருவரும் தங்களை வர்த்தகர்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். சிரிக்கச் சிரிக்கக் குதூகலமாய்ப் பேசினார்கள். அப்புராதன சோழ அரண்மனையில் அன்று வெகுநேரம் வரை ஒரே

அமரர் கல்கி

கோலாகலமாயிருந்தது.

மங்கையர்க்கரசியின் தந்தை அவளிடம் இரகசியமாக, "இவர்கள் வர்த்தகர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள் அல்லவா? வெறும் பொய்! நான் சொல்கிறேன், கேள்! இவர்கள் மாறுவேடம் பூண்ட பெரிய குலத்து இராஜகுமாரர்கள்!" என்று சொன்னார். இது மங்கையர்க்கரசிக்கும் மகிழ்ச்சி தந்தது. ஏனெனில், அந்த இளைஞர்களிலே ஒருவன் தன்னுடைய உள்ளத்தை எப்படியோ மெள்ள மெள்ளக் கவர்ந்து கொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள்.

மறுநாள் உதயமானதும் இளைஞர் இருவரும் பிரயாணமாயினர். ஆனால், போவதற்கு முன்னால் அவர்களில் ஒருவன், அதாவது குலச்சிறையின் சிநேகிதன், "மீண்டும் ஒருநாள் திரும்பி வருவோம்" என்று உறுதி கூறியதோடு, மங்கையர்க்கரசியிடம் நயனபாஷையில் அந்தரங்கமாகவும் சில விஷயங்களைச் சொன்னான்.

இந்தச் சம்பவத்தைப் பற்றிச் சில நாள் வரையில் தந்தையும் மகளும் அடிக்கடி பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு வெறுங் கனவு என்று எண்ணி மறந்தார்கள்.

அப்போது மங்கையர்க்கரசியின் மனங் கவர்ந்த அதே சுந்தர புருஷன்தான் இப்போது சில நாளாக அவளுடைய பயங்கரக் கனவுகளிலே தோன்றிக் கொண்டிருந்தவன். எனவே, தாய் தந்தையின் பாதுகாப்பற்ற அந்த அநாதைப் பெண் இப்போது பெரிதும் பரபரப்புக் கொண்டிருந்ததில் வியப்பு ஒன்றுமில்லையல்லவா?

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒருநாள் காஞ்சி அரண்மனை அல்லோலகல்லோலப்பட்டது. நெடுமாற பாண்டியன் அவனுடைய பரிவாரங்களுடன் காஞ்சிக்கு வந்து விட்டதாக மங்கையர்க்கரசி அறிந்தாள்.

வானமாதேவியின் நடுமாளிகையில் நெடுமாறன் தங்கியிருப்பதாகவும், அவனுக்கு இன்னும் உடம்பு பூரணமாகக் குணமாகவில்லையென்றும் பேசிக் கொண்டார்கள்.

ஆனால், குலச்சிறையைத் தனிமையில் சந்தித்து விசாரிக்க வேண்டுமென்னும் மங்கையர்க்கரசியின் மனோரதம் நிறைவேறும் என்பதாக மட்டும் காணப்படவில்லை.

புவனமகாதேவி தினந்தோறும் சிவபூஜை செய்த பிறகு தன் மருமகள் வானமாதேவிக்குப் பிரசாதம் அனுப்புவதுண்டு. மங்கையர்க்கரசி தானே பிரசாதம் எடுத்துக் கொண்டு போவதாகச் சொன்னாள். அம்மாளிகையில் இருக்கும் போது மங்கையர்க்கரசியின் கண்கள் நாற்புறமும் சுழன்று சுழன்று தேடியும் அந்த வாலிபன் காணப்படவில்லை.

ஒருநாள் மனத்துணிவை வரவழைத்துக் கொண்டு புவனமகாதேவியையே கேட்டாள். "அம்மா! அன்று சைவத் திருமடத்தில் ஓர் இளைஞரைப் பார்த்தோமே? அவர் பாண்டிய குமாரரோடு வந்திருப்பதாகத் தெரியவில்லையே?" என்றாள்.

அதற்குப் புவனமகாதேவி, "அதை ஏன் கேட்கிறாய், குழந்தாய்! பாண்டிய குமாரன் நிலைமை ரொம்பவும் கவலைக்கிடமாயிருக்கிறது..." என்பதற்குள், "அடடா! அப்படியா? அவருக்கு உடம்பு இன்னும் குணமாகவில்லையா? அதனால்தான் வானமாதேவி எப்போதும் ஒரே கவலையாயிருக்கிறார் போலிருக்கிறது. முன்னேயெல்லாம் நான் சிவபூஜைப் பிரசாதம் கொண்டு போனால் முகமலர்ச்சியுடன் வாங்கிக் கொண்டு என்னிடமும் அன்பாக வார்த்தையாடுவார். இப்போதெல்லாம் ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை!" என்றாள்.

"ஆமாம், குழந்தாய்! வானமாதேவி கவலைப்படுவதற்கு ரொம்பவும் காரணமிருக்கிறது. நெடுமாறனுக்கு உடம்பு இப்போது சௌகரியமாகிவிட்டது. ஆனால், அவனுடைய மனத்தைச் சமணர்கள் ரொம்பவும் கெடுத்திருக்கிறார்கள். அவனோடு பாண்டிய நாட்டின் புகழ் பெற்ற வீரமறவர் சைனியம் வந்திருக்கிறது. அந்தச் சைனியத்தைத் திருக்கழுக்குன்றத்தில் தங்கச் செய்திருக்கிறார்கள். இலங்கை இளவரசனும் நாம் அன்று பார்த்த குலச்சிறை என்ற வாலிபனும் திருக்கழுக்குன்றத்திலேதான் இருக்கிறார்களாம். குழந்தாய்! விபரீதம் ஒன்றும் நேராதிருக்க வேண்டுமே என்று அம்பிகைபாகனை அல்லும் பகலும் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். என்னைக் காட்டிலும் வானமாதேவியின் தலையில் பெரிய பாரம் சுமந்திருக்கிறது.

பாவம்! அவள் ஒரு வாரமாய்த் தூங்கவில்லையாம்!" என்றாள் மகேந்திர பல்லவரின் பட்டமகிஷி.

பாண்டிய குமாரனுடைய வரவினால் என்ன விபரீதம் ஏற்படக்கூடும், எதற்காக எல்லோரும் இவ்வளவு கவலையில் ஆழ்ந்திருக்கிறார்கள் என்பதெல்லாம் மங்கையர்க்கரசிக்குத் தெளிவாக விளங்கவில்லை. அதைப் பற்றி அவ்வளவாக அவள் கவனம் செலுத்தவும் இல்லை. அவளுக்குத் தன்னுடைய கவலையே பெரிதாக இருந்தது. குலச்சிறை என்று பெயர் சொன்ன வாலிபனை ஒரு வேளை தான் பார்க்க முடியாமலே போய் விடுமோ, அவனுடைய சிநேகிதனைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ள முடியாமற் போய் விடுமோ, என்ற ஏக்கம் அவள் உள்ளத்தில் குடிகொண்டு, வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் சிந்திக்க முடியாமல் செய்தது.

இத்தகைய மனோநிலைமையில் ஒரு நாள் மாலை நேரத்தில் அரண்மனைப் பூங்காவனத்தில் புவனமகாதேவியின் சிவ பூஜைக்காக மங்கையர்க்கரசி மலர் பறித்துக் கொண்டிருந்தாள். பன்னீர் மந்தாரை, பொன்னரளி, செவ்வரளி முதலிய செடிகளிலிருந்தும், சம்பங்கி, சாதி, மல்லிகைக் கொடிகளிலிருந்தும் அவளுடைய மலர்க் கரங்கள் புஷ்பங்களைப் பறித்துப் பூக்கூடையில் போட்டுக் கொண்டிருந்தன. ஆனால், அவளுடைய உள்ளமோ இரண்டு வருஷங்களுக்கு முன்பு விடாமழை பெய்த ஒருநாள் சாயங்காலம் தன் தந்தையின் புராதன மாளிகையைத் தேடி வந்த இளைஞர்களைப் பற்றியும் அவர்களில் ஒருவன் தன் உள்ளத்தைக் கொண்டு போனதைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தது. 'ஒரு நாள் உன்னைத் தேடிக் கொண்டு மறுபடியும் வருவேன்' என்று அவன் கூறிய வாக்குறுதி, நீரின் மேல் எழுதிய எழுத்துத்தான் போலும்! 'இந்த உலகில் எனக்கு ஒரே துணையாக இருந்த தந்தையும் போர்க்களத்துக்குப் போய்விட்டார். இனிமேல் என் கதி என்ன ஆகப் போகிறது?' என்று எண்ணியபோது மங்கையர்க்கரசியின் கண்களில் கண்ணீர் துளித்தது.

செடி கொடிகளின் வழியாக யாரோ புகுந்து வருவது போன்ற சலசலப்புச் சப்தம் கேட்டு, மங்கையர்க்கரசி சப்தம் வந்த திசையை நோக்கினாள். ஆம்; யாரோ ஒரு மனிதர் அந்த அடர்ந்த பூங்காவின் செடிகளினூடே நுழைந்து வந்து கொண்டிருந்தார். ஆனால், அவருடைய முகம் தெரியவில்லை.

அந்தப்புரத்துப் பூந்தோட்டத்தில் அவ்விதம் அலட்சியமாக வரும் மனிதர் யாராயிருக்கும்? மாமல்ல சக்கரவர்த்தியைத் தவிர வேறு ஆண்மக்கள் யாரும் அந்தத் தோட்டத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதென்று மங்கையர்க்கரசி கேள்விப்பட்டிருந்தாள். பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி அந்தப் பூங்காவனத்தைப் பராமரிப்பதற்குக் கூட ஸ்திரீகளே நியமிக்கப்பட்டிருந்தார்கள். அப்படியிருக்க, இவ்வளவு துணிச்சலாக அந்தத் தோட்டத்தில் நுழைந்து வரும் அந்நிய மனிதர் யார்?

யாராயிருந்தாலும் இருக்கட்டும். நாம் திரும்பிப் புவன மகாதேவியின் அரண்மனைக்குப் போய் விடலாம் என்ற எண்ணத்தோடு மங்கையர்க்கரசி சட்டென்று திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

அதே சமயத்தில், "யார் அம்மா, அது? இந்தப் பூந்தோட்டத்துக்குள் தெரியாத்தனமாகப் புகுந்து விட்டேன். திரும்பிப் போக வழி தெரியவில்லை. வானமாதேவியின் அரண்மனைக்கு எப்படிப் போக வேண்டும்? கொஞ்சம் வழி சொல்லு, அம்மா!" என்று யாரோ சொல்லுவது கேட்டது.

அவ்விதம் சொல்லிய குரலானது மங்கையர்க்கரசியின் தேகம் முழுவதையும் ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. அவளுடைய காலடியிலிருந்த தரை திடீரென்று நழுவிப் போவது போல் இருந்தது. அந்தப் பூங்காவனத்திலுள்ள செடி கொடிகள் எல்லாம் அவளைச் சுற்றி வருவதாகத் தோன்றியது. பக்கத்திலிருந்த மந்தார மரத்தின் கிளையைப் பிடித்துக்கொண்டு கீழே விழாமல் சமாளித்தாள். அவளுடைய இடக் கையில் பிடித்திருந்த வெள்ளிப் பூங்கூடை மட்டும் நழுவிக் கீழே விழ, அதிலிருந்து பல்நிறப் புஷ்பங்கள் தரையில் சிதறின.

"ஓஹோ! பயந்து போய் விட்டாயா என்ன? ஏதும் தவறாக எண்ணிக்

கொள்ளாதே, அம்மா! உண்மையாகவே வழி தெரியாததனால்தான் கேட்டேன். நான் இந்த ஊர்க்காரன் அல்ல; பாண்டிய நாட்டான். வானமாதேவியின் மாளிகை எந்தத் திசையிலிருக்கிறது என்று சொன்னால் போதும்; போய் விடுகிறேன். இந்தத் தோட்டத்தில் வேறு யாருமே காணப்படாமையால் உன்னைக் கேட்கும்படி நேர்ந்தது. நீ யார் என்றுகூட எனக்குத் தெரியாது" என்று அந்த மனிதன் சொல்லி வந்தபோது மங்கையர்க்கரசிக்குப் பூரண தைரியம் வந்து விட்டது. சட்டென்று தான் பிடித்திருந்த செடியின் கிளையை விட்டு விட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் நினைத்தது தவறாகப் போகவில்லை.

ஆம், அவன்தான்!

அன்றொரு நாள் விடாமழை பெய்த இரவு தன் தந்தையின் வீட்டுக்கு அதிதியாக வந்து தன் உள்ளங்கவர்ந்து சென்ற கள்வன் தான்!

மங்கையர்க்கரசியின் அதிசயத்தைக் காட்டிலும் பாண்டிய குமாரனுடைய அதிசயம் பன்மடங்கு அதிகமாயிருந்தது.

"ஆ!" என்ற சப்தத்தைத் தவிர வேறொரு வார்த்தையும் அவன் வாயிலிருந்து வரவில்லை.

பேச நா எழாமல் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் அடங்கா அதிசயத்தோடும் ஆர்வத்தோடும் பார்த்துக் கொண்டு கைதேர்ந்த சிற்பி அமைத்த கற்சிலைகளைப் போல் சற்று நேரம் நின்று கொண்டிருந்தார்கள்.

கடைசியாக, பாண்டிய குமாரன், உணர்ச்சியாலும் வியப்பாலும் கம்மிய குரலில், "பெண்ணே! உண்மையாக நீதானா! செம்பியன் வளவன் மகள் மங்கையர்க்கரசி தானா? அல்லது இதுவும் என் சித்தப்பிரமையா?" என்றான்.

மங்கையர்க்கரசி மறுமொழி சொல்ல விரும்பினாள். ஆனால் வாயிலிருந்து வார்த்தை ஒன்றும் வரவில்லை. கண்ணிலிருந்து கண்ணீர்தான் வந்தது.

உடனே பாண்டிய குமாரன் அளவில்லாத ஆர்வத்துடன் அவள் அருகில் வந்து "பெண்ணே! இது என்ன? ஏன், உன் கண்களில் கண்ணீர் பெருகுகிறது? ஏதேனும் நான் பெரிய பிசகு செய்து விட்டேனா? என்ன செய்து விட்டேன்?" என்று பரபரப்புடன் வினவினான்.

மங்கையர்க்கரசி, விம்மலுக்கிடையில், "ஐயா! அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த மங்கையர்க்கரசி நான்தான்!" என்றாள்.

"ஏன் இப்படி மனம் நொந்து பேசுகிறாய்? ஏன் இப்படிக் கண்ணீர் விடுகிறாய்? கொஞ்சமும் எதிர்பாராத விதமாய் உன்னை இங்கே பார்த்ததும், எனக்குச் சொல்லி முடியாத சந்தோஷம் உண்டாயிற்று. பிறவிக் குருடன் கண் பெற்றது போன்ற மகிழ்ச்சியடைந்தேன். கடல் கடைந்த தேவர்கள் அமிர்தம் எழக் கண்டதும் அடைந்த ஆனந்தத்தை நானும் அடைந்தேன். எவ்வளவோ மனக்குழப்பத்திலும் கவலையிலும் ஆழ்ந்திருந்தவன் உன்னைக் கண்டதும் அவையெல்லாம் மறந்து ஒருகணம் எல்லையற்ற குதூகலம் அடைந்தேன்! ஆனால், உன்னுடைய விம்மலும் கண்ணீரும் அந்த மகிழ்ச்சியையெல்லாம் போக்கி என்னை மறுபடியும் சோகக் கடலில் மூழ்க அடித்துவிட்டது. உனக்கு என்ன துயரம் நேர்ந்தது? ஏன் உன்னைத் துரதிர்ஷ்டக்காரி என்று சொல்லிக் கொள்கிறாய்? உன் துயரத்துக்கும் துரதிர்ஷ்டத்துக்கும் நான் எந்த விதத்திலாவது காரணம் ஆனேனா? ஏற்கெனவே நான் பெரிய மனத் தொல்லைகளுக்கும் சங்கடங்களுக்கும் ஆளாகியிருக்கிறேன். அவ்வளவுக்கும் மேலே உனக்கு எவ்விதத்திலாவது துன்பம் கொடுத்திருப்பேனானால், இந்த வாழ்க்கைதான் என்னத்திற்கு? உயிரையே விட்டு விடலாம் என்று தோன்றுகிறது."

இவ்வாறு நெடுமாறன் உண்மையான உருக்கத்தோடு சொல்லி வந்த போது, பேதைப் பெண்ணாகிய மங்கையர்க்கரசி பலமுறை குறுக்கிட்டுப் பேச விரும்பினாள். என்றாலும் அதற்கு வேண்டிய தைரியம் இல்லாதபடியால் விம்மிக் கொண்டே சும்மா நிற்க வேண்டியதாயிற்று. கடைசியில், பாண்டிய குமாரன் உயிர் விடுவதைப் பற்றிப் பேசியதும் அவளுக்கு எப்படியோ பேசுவதற்குத் தைரியம் ஏற்பட்டு, "ஐயா! தங்களால் எனக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படவில்லை!" என்றாள்.

"அப்படியானால் என்னைப் பார்த்ததும் நீ கண்ணீர் விடுவதற்கும் விம்மி அழுவதற்கும் காரணம் என்ன? இரண்டு வருஷ



காலமாக உன்னை மறு படி எப்போது பார்க்கப் போகிறோம் என்று ஓயாமல் சிந்தித்துக் கொண்டிருந்தேன். மீண்டும் உன்னைச் சந்திக்கும் போது சந்தோஷத்தினால் உன் முகம் எப்படிச் சூரியனைக் கண்ட செந்தாமரையைப் போல் மலரும் என்று கற்பனை செய்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் அதற்கு நேர்மாறாக என்னைப் பார்த்ததும் உன் முகம் அஸ்தமன அரக்கனைக் கண்ட தாமரையைப் போல் வாடிக் குவிந்தது. உன் கண்களும் கண்ணீர் பெருக்கின. ஏன் அப்படி?"

பாண்டிய குமாரனுடைய கேள்விக்கு மறுமொழி சொல்லாமல் மங்கையர்க்கரசி, "ஐயா! தாங்கள் சொன்னது உண்மைதானா? என்னைத் தாங்கள் அடியோடு மறந்து விடவில்லையா? என்னை மறுபடியும் சந்திக்கும் உத்தேசம் தங்களுக்கு இருந்ததா?'' என்று கேட்டாள்.

''அதைப் பற்றி உனக்கு ஏன் சந்தேகம் ஏற்பட்டது? மீண்டும் உன்னைச் சந்திப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஓயாமல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியில் அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. மதுரையிலிருந்து இந்த நகரத்துக்கு வரும் வழியில் அன்றொரு நாள் விடாமழை பெய்த இரவில் எனக்கு அடைக்கலம் தந்த செம்பியன் வளவன் மாளிகையை அடைந்தேன். அந்த மாளிகை பூட்டிக் கிடந்ததைப் பார்த்ததும் எனக்குண்டான ஏமாற்றத்தைச் சொல்லி முடியாது. உலகமே இருளடைந்து விட்டதாக எனக்குத் தோன்றியது. அப்புறம் குலச்சிறை உன்னை இந்த நகரில் பார்த்தாகச் சொன்ன பிறகு கொஞ்சம் மன அமைதி உண்டாயிற்று" என்றான் நெடுமாறன்.

"ஆகா! அவர் வந்து சொன்னாரா? அப்படியானால், தாங்களும் பாண்டிய குமாரரிடம் உத்தியோகத்தில் இருக்கிறீர்களா?'' என்று மங்கையர்க்கரசி கேட்டாள்.

நெடுமாறனுடைய முகத்தில் ஒருகணம் மர்மமான புன்னகை தோன்றி மறைந்தது. தான் இன்னான் என்பதை மங்கையர்க்கரசி



இன்னமும் தெரிந்து கொள்ளாமலே பேசுகிறாள் என்பதை அப்போதுதான் அவன் உணர்ந்தான். அந்தத் தவறுதலை இன்னமும் நீடிக்கச் செய்வதில் அவனுக்குப் பிரியம் ஏற்பட்டது.

"ஆம்! பாண்டிய குமாரரிடந்தான் நானும் உத்தியோகத்தில் அமர்ந்திருக்கிறேன். அதைப் பற்றி உனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லையே?" என்று கேட்டான்.

மங்கையர்க்கரசி, "எனக்கு என்ன ஆட்சேபம்? தாங்கள் நல்ல பதவியில் இருந்தால் எனக்குச் சந்தோஷந்தானே? தங்களுடைய சிநேகிதரைத் திருநாவுக்கரசர் மடத்தில் பார்த்தபோது என் மனத்திலும் அம்மாதிரி எண்ணம் உண்டாயிற்று. ஆனால் அதையெல்லாம் பற்றி இனி என்ன? என் குல தெய்வம் தங்களையேதான் என் முன் கொண்டு வந்துவிட்டதே?" என்று ஆர்வம் பொங்கக் கூறினாள்.

"ஆனாலும் உன் தெய்வம் என்னை உன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தியபோது நீ சந்தோஷப்பட்டதாகத் தெரியவில்லையே! உன்னைத் துரதிர்ஷ்டக்காரி என்று சொல்லிக் கொண்டு கண்ணீர் விட்டாயே?" என்று நெடுமாறன் விஷமப் புன்னகையுடன் கேட்டான்.

"சுவாமி! எதிர்பாராதபோது தங்களைத் திடீரென்று பார்த்ததில் பேசத் தெரியாமல் திகைத்து நின்றேன். தாங்களும் என்னைத் தெரிந்து கொள்ளாதது போல் ஒரு மாதிரியாகப் பேசவே, எனக்குக் கண்ணீர்



வந்துவிட்டது! என்னுடைய பேதைமையைப் பற்றிச் சொல்லிக் காட்டாதீர்கள்" என்று மங்கையர்க்கரசி கூறியபோது அவளுடைய கண்களில் மறுபடியும் கண்ணீர் துளித்தது.

"என் கண்ணே! என்னை மன்னித்து விடு! இந்த மூர்க்கன் உன் கண்களில் மறுபடியும் கண்ணீர் வரச் செய்தேனே?" என்று சொல்லிக் கொண்டு நெடுமாறன் தன் அங்கவஸ்திரத்தின் தலைப்பினால் அவளுடைய கண்ணீரைத் துடைத்தான்.

சற்றுப் பொறுத்து மங்கையர்க்கரசி, "சுவாமி! வெகு நேரம் ஆகிவிட்டது. பூஜை நேரம் நெருங்கிவிட்டது. நான் போக வேண்டும்" என்றாள்.

"கட்டாயம் போகத்தான் வேண்டுமா?" என்று நெடுமாறன் விருப்பமில்லாத குரலில் கேட்டான்.

"ஆம், போக வேண்டும், புவனமகாதேவி காத்துக் கொண்டிருப்பார்கள். ஒருவேளை நான் வரவில்லையேயென்று தாதியை அனுப்பினாலும் அனுப்புவார்கள்."


"அப்படியானால் நாளைய தினம் இதே நேரத்தில் இங்கு நீ வர வேண்டும்; தவறக் கூடாது. மேலே நம்முடைய காரியங்களைப் பற்றி ஒன்றுமே பேசவில்லையே?" என்றான் நெடுமாறன்.


மங்கையர்க்கரசி திடுக்கிட்டவளாய் நெடுமாறனை நிமிர்ந்து பார்த்து, "பாண்டிய குமாரர் வாதாபி யுத்தத்துக்குப் போனால் நீங்களும் அவரோடு போவீர்களா?" என்று

கேட்டாள்.

"ஆமாம், போக வேண்டியதுதானே? ஏன் கேட்கிறாய்? நான் போருக்குப் போவது உனக்குப் பிடிக்கவில்லையா?" என்றான் நெடுமாறன்.

"எனக்குப் பிடிக்கத்தான் இல்லை. யுத்தம், சண்டை என்பதே எனக்குப் பிடிக்கவில்லைஎதற்காக மனிதர்கள் ஒருவரையொருவர் துவேஷிக்க வேண்டும்? ஏன் ஒரு





அருள்வாக்கு

நமஸ்காரம் செய்வதைத் தண்டம் சமர்ப்பித்தல் என்பார்கள். தண்டம் என்றால் கழி அல்லது கோல் என்று அர்த்தம். கையில் பிடித்திருக்கிற ஒரு கோலை விட்டு விட்டால், அது அப்படியே தடாலென்று கீழே விழுந்து விடும். அப்படியே இந்தச் சரீரத்தை



நமதல்ல; இது ஈசுவரனுடையது என்கிற எண்ணத்துடன் கீழே போடுவதுதான் நமஸ்காரம். நம் சரீரம் வெறும் மரக்கோல்தான். உதவாத பொருளை 'அது தண்டமாகி விட்டது' என்கிறோம். அப்படி தண்டமான வஸ்துதான் நம் சரீரம். இதைத் தூக்கிப் பிடித்து நிறுத்தி வைத்து ஆட்டுகிற சக்தி ஈசுவரன் கொடுத்ததே ஆகும். இந்த உடம்பை ஏதோ நாமே தாங்கி நடத்துகிறோம் என்ற எண்ணத்தை ஒழித்துவிட்டு, அதாவது அகங்காரத்தை விலக்கி விட்டு அதற்கு அடையாளமாக, ஈசுவரன் முன் இந்த சரீரத்தைக் கீழே போட வேண்டும். அதுதான் தண்டம் சமர்ப்பிப்பது. ஜ்வரம் வந்தால் நம் சரீரத்தால் நிற்கவும் நடக்கவும் முடிகிறதில்லை. இந்த ஜன்மாவே பெரிய ஜ்வரமாக வந்திருக்கிறது. இதிலிருந்து நம்மைக் கடைத்தேற்றுவதற்காக, நமக்கு வந்திருக்கிற சம்ஸார ஜ்வரத்தைப் புரிந்து கொண்டு, அதற்கு அடையாளமாக ஸ்வாமியின் முன் தண்டாகாரமாக விழுந்து நமஸ்கரிக்க வேண்டும்.

'நாம் செய்கிறோம்' என்கிற எண்ணம் போய்விட்டால், அதுவே ஸதா கால நமஸ்காரம். அந்த அநுபவம் நமக்குச் சித்திக்காத போதிலும் ஈசுவர சந்நிதியிலாவது அப்படி பாவித்து வணங்கித் தரையோடு தரையாக, எளிமையாகக் கிடக்க வேண்டும். இங்கே வணங்கி விட்டால், அப்புறம் வெளியே எங்கேயும் வணங்காமல் இருக்கலாம். 'பொறுப்பை உன்னிடமே பூரணமாகப் போட்டேன்' என்பதற்கு அடையாளம் சரீரத்தைத் தரையில் போடுவது. கொஞ்சம் பொறுப்பை நமக்கு என்று வைத்துக் கொண்டால்கூட ஸ்வாமி தம் பங்கைக் குறைத்துக் கொண்டு விடுவார். இதில் அரைகுறைக்கு இடமே இல்லை. நம்முடைய நல்லது பொல்லாதது அவ்வளவும் அவர் விட்டபடி என்று சகல பொறுப்பையும் அவரிடம் தள்ளுவதற்கு வெளி அடையாளமாக உடம்பைத் தரையில் தள்ளி நமஸ்காரம் பண்ண வேண்டும். அப்படிச் செய்தால் நம் பாரம் அனைத்தையும் கிருபாசமுத்திரமான ஸ்வாமியே ஏற்று அநுக்கிரகிப்பார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

வரையொருவர் கொன்று கொண்டு சாக வேண்டும்? ஏன் எல்லாரும் சந்தோஷமாகவும் சிநேகமாகவும் இருக்கக் கூடாது?" என்றாள் மங்கையர்க்கரசி.

நெடுமாறன் மீண்டும் மர்மமான புன்னகை புரிந்து, "யுத்தத்தைப் பற்றி உன்னுடைய அபிப்பிராயத்தைப் பாண்டிய குமாரரிடம் சொல்லிப் பார்க்கிறேன். ஒரு வேளை அவருடைய மனம் மாறினாலும் மாறலாம். எல்லாவற்றிற்கும் நாளை மாலை இதே நேரத்துக்கு இங்கு நீ கட்டாயம் வர வேண்டும்; வருவாயல்லவா?" என்றான்.

"அவசியம் வருகிறேன். இப்போது ரொம்ப நேரமாகிவிட்டது. உடனே போக வேண்டும்" என்று கூறி மங்கையர்க்கரசி கீழே கிடந்த புஷ்பக் கூடையை எடுப்பதற்குக் குனிந்தாள்.

நெடுமாறனும் குனிந்து தரையில் சிதறிக் கிடந்த புஷ்பங்களைக் கூடையில் எடுத்துப் போட்டு, மங்கையர்க்கரசியின் கையில் அதைக் கொடுத்தான். அப்படிக் கொடுக்கும்போது பயபக்தியுடன் பகவானுடைய நிர்மால்யத்தைக் கண்ணில் ஒற்றிக் கொள்வது போல் அவளுடைய மலர்க் கரத்தைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

மெய்சிலிர்ப்பு அடைந்த மங்கையர்க்கரசி பலவந்தமாகத் தன் கையை நெடுமாறனுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு புவனமகாதேவியின் அரண்மனையை நோக்கி விரைந்து நடந்தாள்.

(தொடரும்)



• கோப்பையுடன் ரோஜர்

கணக்கைத் தொடங்குகிறது ஸ்விஸ்!

டென்னிஸ் சாம்பியன் அகாசி அப்படியொன்றும் சக டென்னிஸ் வீரர்களைப் பாராட்டி விட மாட்டார். இதனால்தான், ''அவர் நிஜமாகவே நன்றாக ஆடக்கூடியவர். மைதானத்தில் எப்படி பாய்ந்து படர்ந்து ஆடுவது என்கிற வித்தை நன்றாகவே தெரிந்திருக்கிறது அவருக்கு. வருங்காலத்தில் இன்னும் சிறப்பாக ஆடுவார் என்று நம்பலாம்'' என்று இரு வருடங்களுக்கு முன் கூறியது செய்தியானது.

இவரது நம்பிக்கை வீண் போகவில்லை. விம்பிள்டன் ஒற்றையரில் வெல்வதைவிட என்ன சிறப்பு வேண்டும்? ரோஜர் ஃபெடரர் இந்தச் சாதனையைச் செய்துவிட்டார்.

இவரும், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மார்க்ஸ் ஃபிலிபோவிஸும் சமீபத்திய விம்பிள்டன் இறுதிச்சுற்றில் மோதியபோது பார்வையாளர்கள் எந்த ஒருவருக்குமே ஸ்பெஷலாக ஆதரவு கரம் நீட்டிவிடவில்லை. காரணம் இருவருமே தேர்ந்த விளையாட்டு வீரர்கள் என்ற பெயரை சமீப காலத்தில் பெற்றிருந்தாலும், ''அட இவர்தாண்டா சாம்பியன்' என்று முடிவெடுக்கும் அளவுக்கு விளையாடிவிடவில்லை.

ஆனால் போட்டியின் போக்கு பார்வையாளர்களை மிரளவைத்தது. உம்மணாமூஞ்சியாகக் காணப்பட்டாலும் மைதானத்தில் பாயும் புலியாக வெளிப்பட்ட ரோஜரின் அசைவுகள் கண்ணுக்கு விருந்தாக அமைந்தன. இப்போதுதான் பலருக்கும் ''அட ஆமாம், 2001ல் பீட் சாம்ப்ராஸை இதே களத்தில் நான்காவது சுற்றில் தோல்வி காணச் செய்தவராச்சே இவர்'' என்பது நினைவுக்கு வந்திருக்கக்கூடும்.

போட்டி முடிந்து விம்பிள்டன் கோப்பை தமக்குதான் என்றானவுடன் இந்த உம்மணாமூஞ்சியின் கண்களில் ஆனந்தமழை! எமோஷனலாகிவிட்டார் மனிதர்.

தவிர சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஓர் ஆண்மகன் விம்பிள்டன் கோப்பையைக் கைப்பற்றுவது என்பது விளையாட்டுச் சரித்திரத்திலேயே இதுதான் முதல் முறை. (1997 கோப்பையை ஸ்விஸ் வீராங்கனை மார்ட்டினா ஹிங்கிஸ் வென்றிருக்கிறார்)

தீவிரப் பயிற்சியும் முயற்சியும் வெற்றி இலக்கை நிச்சயம் எட்ட வைக்கும் என்பதற்கு உதாரணம் ரோஜர் ஃபெடரர். ஆனால் சாம்பியன்கள் உருவாவது மரபணுவையும் பொருத்தது என்பதற்கான ஆதாரத்திற்கு இவரை உதாரணமாக எடுத்து கொள்ள முடியாது. ரோஜரின் அப்பா ராபர்ட், ரசாயன தொழிற்சாலையில் ஒரு விற்பனையாளர். அம்மா லினெட் அடிப்படையில் ஓர் தென்னாப்பிரிக்கர், தனியார் நிறுவனம் ஒன்றில் நிர்வாகச் செயலாளர்.

இந்தக் குடும்பத்தின் முதல் டென்னிஸ் மொட்டு ரோஜர்தான் என்று கூறிவிட முடியாது. இவரது சகோதரி டயனா ஸ்விட்சர்லாந்தின் நம்பர் ஒன் டென்னிஸ் வீராங்கனை. ஜுனியர் பிரிவுகளில் கோப்பையை வாடிக்கையாகவே பெற்று வருகிறார். இனி இவர்கள் வீட்டில் புதிதாக பல ஷோகேஸ்களை உருவாக்க வேண்டியிருக்கும்.

- ஜி.எஸ்.எஸ்





“பாரதிராஜா படத்தில் ஒரு பாடல் காட்சி என்றால் இருபது வெள்ளையுடை தேவதைகள் பின்னணியில் ஏன் வருகிறார்கள் என்பது, இந்தப் பழங்குடியின மக்களின் நடனத்தைப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. கூட்டமாக ஆடுவதுதான் தமிழின மரபு” என்று கவிஞர் அறிவுமதி சொல்ல, அந்தப் பழங்குடியின மக்கள் முகத்தில் பூரிப்பு.

முன்னதாகப் பேசிய கலை விமர்சகர் இந்திரன், “பழங்குடியின கலைகள், சமூகம் சார்ந்த சடங்கியல் ரீதியாக அமைந்ததால்தான் கூட்டம் கூட்ட



* இந்திரன் - அறிவுமதி - கணேசன்



* ஓசை அமைப்பினர்

ஆனைமலைக் காட்டுக்குள்ள...

மாக அவர்களது நடனம் இருக்கிறது'' என்றார்.

கோவையைச் சேர்ந்த 'ஓசை' என்ற அமைப்பும், வனத்துறையும் இணைந்து ஆனைமலைக் காட்டுக்குள் நடத்திய 'மலை விழா' வில் தான் இப்படிப் பேசினர் இருவரும்.

மலைகளைப் பாதுகாப்பதும், மலைகளை அழிக்காமல் இயற்கையோடு இணைந்து வாழும் மலையின மக்களைப் பாதுகாப்பதும், சுற்றுச் சூழல் விழிப்புணர்வும்தான் இந்த 'மலை விழா' வின் நோக்கம்.

"ஆனைமலையில் முதுவர், புலையர், காடர், மலசர், மலைமலசர், இரவாளர் என்ற ஆறு வகையான பழங்குடியின மக்கள் தனித்தனியாக வசிக்கிறார்கள். இவர்களை ஒன்றுபடுத்தி விழா நடத்துவது இது தான் முதன்முறை. இதுவே சாதனைதான்'' என்றார் இந்நிகழ்ச்சியை ஒருமைப்படுத்திய வனத்துறை அதிகாரி கணேசன் ஐ.எஃப்.எஸ்.

இவர் வனத்துறை அதிகாரி மட்டுமல்ல, தாவரவியல் ஆராய்ச்சியாளரும்கூட. இது வரை கண்டுபிடிக்கப்படாத புதுவகையான வாழை மர வகையைக் கண்டுபிடித்திருக்கிறாராம் இவர்.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாக இந்திரன், அறிவுமதி, எழுத்தாளர் நாஞ்சில் நாடன், பேராசிரியர் பஞ்சாங்கம் ஆகியோர் கலந்து கொள்ள, பழங்குடியின மக்களின் நடனங்கள், வாத்தியக் கருவி வாசிப்புகள், திருமண முறை மற்றும் இவர்களது வாழ்வியல் விஷயங்களைச் செய்து காட்டினர் அவர்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருந்தன.

வறுமையில் வாடும் இம்மக்களின் உணவு கிழங்கும், காட்டுப் பழங்களும்தான்.

ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வொரு வகையான பழங்களைச் சாப்பிடுகிறார்களாம். அவர்கள் குறிப்பிடும் பழ வகைகளில் பல, நாம் கேள்விப் பட்டிராதவை. (உதாரணத்துக்கு - ஐப்பசி மாதம் - காரப் பழம், ஆனி, ஆடி - குறிஞ்சிப்பழம், ஈரப் பழம், சித்திரை, வைகாசி - பொரண்டைப் பழம்?)

எல்லாம் சரி, இம்மாதிரி விழாக்கள் அவர்களது வயிற்றைக் கழுவுமா?

- கார்க்கி

படங்கள் : கவிதா

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்


? அடக்குமுறைச் சட்டங்களின் மூலம் ஓர் அரசு எவ்வளவு காலம் வெற்றிபெற முடியும்..?

! மிஞ்சி மிஞ்சிப் போனால் அடுத்த தேர்தல்வரை - அதாவது வாக்காளர் முதுகெலும்பு உள்ளவராக விளங்கினால்.


● ஆ. முத்து, வேலூர் - 1

? விக்ரமின் புயல்வேக வளர்ச்சிக்கு என்ன காரணம்..?

! கார் ரேஸில் ஆர்வமாகிவிட்ட அஜித்தும், சாஃப்ட் ரோலில் ஐக்கியமாகிவிட்ட மாதவனும்.



● ... காரணமும்!



● புயலும்...



● பொன்விழி, அன்னூர்

? அழகான பெண் யார்...?

! கணவன் பிடித்து வைக்கும் இரண்டு மூன்று குடம் தண்ணீரில் குளித்து, சமைத்து, துவைத்து, சமாளிப்பவர் உலகிலேயே அழகான பெண் என்கிறார் சென்னைவாசி... எனி அப்ஜெக்‌ஷன்?

● ஜே.டி.. ஆனந்தன், மதுரை

? ஒருவனின் வாழ்க்கைப் பயணத்தில் நல்ல துணையாக வருவது நண்பர்களா? உறவினர்களா..?

! 'அன்னையே தெய்வம்' என்று கடிதத்தைத் துவங்கிவிட்டு, வாழ்க்கைத் துணை நண்பரா? உறவினரா? என்று கேட்கிறீரே! தாய்க்குப்பின் தாரம் தானேய்யா வாழ்க்கைத் துணை!

● ஜி. குப்புசாமி, சங்கராபுரம் ★

? அரசு ஊழியர்களின் முகவரிகளைத் தேடிப்பிடித்து அவர்களை வீடு தேடிச் சென்று கைது செய்யும் காவல் துறையினர் பற்றி...?


! காவல் துறையை நோகாதீர்கள்; மேலிடத்து உத்தரவை நிறைவேற்றுகிறது; அவ்வளவுதான். உயர்நீதி மன்றத்தில் வழக்கை விசாரிக்கும் தலைமை நீதிபதியின் கேள்விகளும், அவர் வெளியிடும் கருத்துக்களும்தான் தற்காலிக ஆறுதல்.

● மல்லிகை மன்னன், மதுரை

? 'எத்தனையோ இனிமையான பாடல்களை அருமையாகப்பாடி அரிய பெரிய சாதனைகள் செய்து என்ன பிரயோஜனம்? தமிழ்நாடு எனக்கு எதுவும் பெரிதாகச் செய்யவில்லையே' என்று மனம் நொந்து போயிருக்கிறாரே டி.எம்.எஸ்.?

! எந்த ஒரு மனிதனும் எப்போதும் சிகரத்தில் இருந்துவிட முடியாது; இறங்கி வரத்தான் நேரும் என்ற வாழ்க்கை உண்மையைப் புரிந்து கொள்கிற மனப்பக்குவம்

● சோக கீதம்!





● பாதுகாப்பான தாக்குதல்!

❑ ரூ.100 பரிசு பெறுபவர் :
டி.வி. பாலகிருஷ்ணன்
பிளாட் எண்.382-2,
செக்டர் - 29, காந்தி நகர்,
குஜராத் - 382 029.

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
ஜி. குப்புசாமி
த/பெ, கோவிந்தன்,
41/169, பூட்டை ரோடு,
சங்கராபுரம் - 606 401.
விழுப்புரம் மாவட்டம்

இல்லாதவரின் விரக்திப் பேச்சு.

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப் பட்டி

? காவிரி நீர்ப் பிரச்னையை 'ஜெ' கை கழுவி விட்டார் என்கிறாரே ராமதாஸ்...?

! ஜெ. கை கழுவும் அளவுக்குக் காவிரியில் நீர் தமிழகத்துக்கு வருகிறதா என்ன..!

● கே.எஸ்.பட்டம்மா, மதுரை - 10

? கல்கி வார இதழின் குறிக்கோள் என்ன...? அது எந்த அளவுக்கு நிறைவேறி வருகிறது...?

! 'ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு' என்ற குறிக்கோளை ஒவ்வொரு இதழிலும் மூன்றாம் பக்கத்தில் காணலாம். கல்கி படிக்கும் போது நீங்கள் உயர்கிறீர்களா? தாழ்வுறுகிறீர்களா, என்பதை நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

● மஞ்சுதேவன், நவி மும்பை

? அயோத்திப் பிரச்னைக்குக் காஞ்சி சங்கராச்சார்யாரின் யோசனை...?

! அது யோசனையல்ல; சோதனை! இஸ்லாமியருக்கு வேதனை!

● என். சுஜாதா, சென்னை

? காலத்தின் கட்டாயம் என்று தற்பொழுது எதைச் சொல்லலாம்...?

! ஜெ. ஆட்சியை அனுபவிப்பது!

● டி.ஏ.சி.பிரகாஷ், திருச்செங்கோடு

? சிந்துபைரவியின் சின்னத் திரை தொடர்ச்சி 'சஹானா' பார்ப்பதுண்டா நைனா...?

! உண்டு. முதல் மார்க் : ஒய்.ஜி. மகேந்திராவுக்குச் சொல்லு! கடைசி மார்க் : 'ஸான்டால்... ஸான்டால்...!'' என்ற அலறலுக்குச் சொல்லு! நன்றி : அடிக்கடி இடம்பெறும் விளம்பரங்களுக்குச் சொல்லு! அந்த இடைவெளியில் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு பத்து மணிக்கு கொர் கொர்..! சொல்லு!


● டி.வி. பாலகிருஷ்ணன், காந்தி நகர் ❑

? நாளுக்கு நாள் பெருகிவரும் அரசின் அவதூறு வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றங்கள் உருவாகுமா...?

! அந்த நீதிமன்றங்கள் 'ஜெ'க்கு சாதகமான தீர்ப்பை வழங்காது போனால் அவை மீதும் அவதூறு வழக்கு வருமோ!

முல்லை வேந்தன் தாக்கப்பட்டுள்ளாரே...?





★ ... காவிரியும்!

● எஸ். இராமலிங்கம், ஆத்தூர்

? சிறைச்சாலைக்குள்ளேயே முல்லை வேந்தன் தாக்கப் பட்டுள்ளாரே...?

! தவளைக் கதையெல்லாம் சொல்லி 'எதிரணியினரைப் பாதுகாப்பதும் என் கடமை' என்று ஜெ. வீராவேசம் பேசும்போதே நினைத்தேன்; இப்படி ஏதாவது நடக்கும் என்று!

கையும்...



• விக்ரம்



சினிமாப் பித்தானேன்!

இயக்குனர் விக்ரமன், நடிகர் விக்ரமுக்குப் பிறகு இன்னொரு விக்ரம் தமிழ் சினிமாவில். அசப்பில் இந்திப்பட ஹீரோ மாதிரி இருக்கும் இந்த விக்ரம் 'அலை' பட இயக்குனர்.

"சின்ன வயதிலிருந்தே சினிமாவும் டி.வி.யும் பார்ப்பதுதான் எனக்கு விருப்பமாக இருந்தது. அப்பா கொண்டு வரும் பட கேசட்டுகளை விசிஆரில் போட்டுப் பார்த்து, சரியான 'சினிமாப் பித்து' ஆகிப்போனேன்.

"சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பி.எஸ்.ஸி. முடித்தவுடன் என் நண்பர்கள் எல்லாம் எம்.பி.ஏ. பண்ணப் போகிறேன் என்று புறப்பட்டபோது, நான் வேறு எதையாவது செய்வது என்று தீர்மானித்துவிட்டேன். என் சினிமா ஆசை என்னை முழுமையாகப் பிடித்து ஆட்டியது. எப்படியோ ப்ரியதர்ஷன் சாரிடம் போய்ச் சேர்ந்தேன். சினிமா தயாரிப்பு பற்றி எனக்கு அப்போது எதுவுமே தெரியாது!"

ப்ரியதர்ஷனின் 'சந்திரலேகா'தான் விக்ரமுக்கு முதல் திரைப்பட அனுபவம். மோகன்லால், சுகன்யா நடித்த இந்தப் படத்தில் தொடங்கி, சுமார் நாலு வருடங்கள் ப்ரியதர்ஷனிடம் பணி புரிந்திருக்கிறார் விக்ரம்.

தற்கொலை என்கிற பிரச்னையை மையப்படுத்தி நண்பர்களின் ஒத்துழைப்புடன் 'சைலன்ட் ஸ்க்ரீம்' என்ற குறும்படத்தை இயக்கி, தயாரித்தார் விக்ரம். காமிரா, இசை என்று எல்லாமே நண்பர்களின் உதவிதான்.

ஹைதராபாதில் நடந்த திரைப்பட விழாவில், இந்தியன் பனோரமாவில் திரையிடப்பட்ட இப்படத்துக்கு தேசிய விருது கிடைத்தது.

"இந்த விருதுதான் எனக்கு என்மீதே நம்பிக்கையைக் கொடுத்தது. அந்தச்

சமயத்தில் இது மட்டும் நிகழ்ந்திருக்கவில்லை யென்றால் நானும் எனது நண்பர்களைப் போல எம்.பி.ஏ. சேரப் போயிருப்பேன்!" என்கிறார் விக்ரம்.

பிறகு ஜோதிகா நடித்த 'சிநேகிதி' படத்தை ப்ரியதர்ஷன் இயக்கியபோதும் கூடவே இருந்தார்.

அப்புறம்தான் தெலுங்குப்படம் ஒன்றை இயக்க வாய்ப்பு வந்தது. ராமோ ஜிராவின் 'இஷ்டம்' சுமாராக ஓடியபோது, தன்னம் பிக்கை மறுபடி வளர ஆரம்பித்தது.

ஆனால் தமிழில் ஒரு படத்தை இயக்க வேண்டும் என்ற ஆவல் பூர்த்தியாகக் காத்திருக்க வேண்டியிருந்தது. இடையில் மாதவன் கதாநாயகனாக நடிக்க, ஒரு படம் இயக்க கிட்டத்தட்ட முடிவாகி, அந்த வாய்ப்பு இன்னும் தள்ளிப் போயிற்று. ஆனாலும் விக்ரம் சோர்ந்துவிடவில்லை.

"அதிர்ஷ்டசாலி என்ற அந்தப் படம் அப்படியேதான் இருக்கிறது. மாதவனுடன் தொடர்பு கொண்டேதான் இருக்கிறேன். திடீரென்று ஒரு நாள் படப்பிடிப்பு துவங்கும் என்று எதிர்பார்க்கிறேன்!"

'அதிர்ஷ்டசாலி இப்போதைக்கு இல்லை என்றதும், விக்ரம் வேறு கதையுடன், சிலம் பரசனை மனத்தில் ஹீரோவாக வைத்துக் கொண்டு, டி.ராஜேந்தரைப் பார்த்துக் கதையைச் சொன்னார். "நன்றாயிருக்கிறது. சிம்புவுக்கும் ஏற்றதாக இருக்கும்" என்று டி.ஆர். சொல்ல சிலம்பரசனிடமும் கதை சொல்லி, ஒப்புதல் வாங்கி விட்டார்; 'அலை' ரெடியாகிவிட்டது.

"சிலம்பரசனுடன் த்ரிஷா, விவேக், ரகுவரன், சரண்யா என்று தேர்ந்த நடிகர் நடிகைகள் இருக்கிறார்கள். மொத்தம் ஆறு பாடல்களில் இடைவேளைக்கு முன்பு மூன்று, பின்பு மூன்று என்று வைத்துக் கொண்டேன். இரண்டு பாடல்களை நியூஸிலாந்தில் படமாக்குகிறோம். இரண்டு நாளில் படப்பிடிப்புக்குழு புறப்படுகிறது!" என்றார் இயக்குனர் விக்ரம்.

ஹைதராபாதைச் சேர்ந்த தாமினி என் டர்பிரைசஸ் அதிபர் 'பத்மாலயா ஜி.வி.பிரசாத் தயாரிப்பாளர். அவரிடம் கதையைச் சொன்னபோது, அவருக்குப் பிடித்திருந்த தாம்.

"சினிமாத் துறை போராட்டம் நிறைந்தது என்று தெரியாதா?"

"போராட்டம் எல்லாருக்கும்தான் இருக்கிறது!" என்கிறார். அதற்காக இலட்சியத்திலிருந்து மாறிப் போய்விட அவருக்கு விருப்பம் இருக்கவில்லையாம்.

முன்பு ஆடியோ உரிமைகள், படம் வெளிவரும் முன்பே நிறையப் பணம் குவித்தன. இப்போது போலி காசட்டுகள் மலிவு விலைக்கு வந்து, அந்த வருமானத்தைப் பாதித்துவிட்டதாக வருத்தத்துடன் கூறுகிறார் விக்ரம்.

" 'அலை' வந்த பிறகு உங்கள் திரைப்பட வாய்ப்புகள் கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறதா விக்ரம்?"

"நிச்சயம் இருக்கிறது. பாடல்கள் எல்லாமே நன்றாக அமைந்துவிட்டன, வித்யா சாகர் இசையில். மிகக் கடுமையாக உழைத்து என் டைரக்ஷன் திறமையை எல்லாம் இதில் காண்பித்திருக்கிறேன். என் பக்கத்திலிருந்து நான் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றை முழுத் திருப்தியுடன் செய்திருக்கிறேன். இனி ரசிகர்கள் கையில் இருக்கிறது!"


• 'அலை'யில்


• ஷூட்டிங் ஸ்பாட்டில்

சந்திப்பு : **சாருகேசி**
படங்கள் உதவி : **ஜான்சன்**

யாரைத்தான் நம்புவதோ?

நிஷா, வித்யாவுக்குப் பிறகு மீண்டும் மீடியாக்களில் பரபரப்பாக அலசப்படுகிறது, வரதட்சிணைப் பிரச்னை.

திருவல்லிக்கேணி கல்கூரல் அகாடமி இதுகுறித்து ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது சமீபத்தில்.

அதில் கலந்து கொண்ட நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் "வரதட்சணையைப் பொறுத்த வரை சட்டத்தால் எந்த விடிவையும் கொண்டுவர முடியவில்லை. எழுத்தாளர்கள் தங்கள் கூரிய எழுத்துக்களின் மூலம் இந்த விஷயத்தில் ஒரு மாறுதலைக் கொண்டு வரலாம்" என்றார்.

'அது நடக்காத விஷயம்' என்றார் அடுத்துப் பேசிய எழுத்தாளர் வாசந்தி. "வரதட்சிணையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர இளைஞர்களைத் தான் இந்த விஷயத்தில் நம்புவேன்" என்றார்.

"எனக்கு அந்த நம்பிக்கையும் இல்லை' என்றார் அடுத்துச் பேசிய சமூக சேவகி ஜெயா அருணாசலம்.

ஆக பேச்சாளர்களிடையே பொதுவாக ஒருவித நம்பிக்கையின்மை புலப்பட்டது. அதற்குக் காரணம் வரதட்சணைப் பிரச்னையின் ஆழமான வேர்கள் என்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது.

நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் :

"நமது சட்டங்கள் பெண்களுக்கு ஆதரவாகத்தான் இருக்கின்றன. ஆனால் நடைமுறைதான் நேரெதிராக இருக்கிறது. உதாரணத்திற்கு, இந்து வாரிசு உரிமைச் சட்டம் பெண்களுக்கும் சமபங்கு சொத்து உண்டு என்கிறது. ஆனால் நடப்பது என்ன? தமிழகத்தில் பரவாயில்லை. ஆனால் அண்டை மாநிலங்களில் பரவலாக ஒரு அநியாயம் நடந்து வருகிறது. 'எனக்குப் பெற்றோரின் சொத்தில் எந்த உரிமையுமில்லை' என்று சகோதரிகளிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு, ஆண்களே முழுச் சொத்தையும் அனுபவிக்கிறார்கள்.

திருமணம் என்பது எதற்காக? அது ஒரு புனிதமான பந்தம் என்கிறார்கள் சிலர். ஆணும் பெண்ணும் இணைந்து இல்லறம் நடத்துவதற்கான அங்கீகாரம் அது. அப்படியிருக்க, இதில் வரதட்சிணை எப்படி வந்தது? கல்யாணம் ஒரு வியாபாரம் ஆனது ஏன்? தங்கள் அதிகாரத்தைக் காட்டவும், பிறர் சொத்துக்களைக் கவர்ந்திழுக்கவும் கல்யாணம் பயன்படுத்தப்படுவானேன்?

"நாலு பேர்" கருத்துக்கு நாம் அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுப்பதால்தான் இந்தப் பிரச்னை. மேலை நாடுகளில் எல்லாம் திருமண வாழ்வு தொடர்பான எந்த வழக்காக இருந்தாலும், கணவனும் மனைவியும்தான் நீதிமன்றத்துக்கு வருவார்கள். இங்கே கூடவே இருதரப்புப் பெற்றோர், சித்தப்பா, மாமா, அவர்களது குடும்பங்கள் என்று ஒரு படையே வருகிறது. பக்கபலம் என்கிற அளவில் சரி. ஆனால் ஆளாளுக்கு கருத்துக் கூறுவார்கள். அப்பாவே, "எப்பக் கல்யாணமாச்சோ அப்பவே நீ புகுந்த வீட்டுக்குத்தான் சொந்தம். எங்களோட வந்து இனிமே தங்கக்கூடாது" என்கிறார்.



• பிரபா ஸ்ரீதேவன்

• ஜெயா அருணாச்சலம்



எழுத்தாளர் வாஸந்தி :

"ஒரு காலத்தில் நானும் நம்பிக் கொண்டிருந்தேன் - எழுத்தினால் புரட்சி செய்து வரதட்சிணை போன்ற சமூகக்கேடுகளை வேரறுத்துவிட முடியும் என்று. அது முடியாத காரியம் என்று இப்போது தெரிகிறது.

இந்தியா உட்பட பல நாடுகளில், பழங்காலத்தில் அடிமை வியாபாரச் சந்தை இருந்தது. கல்வெட்டுகளில் இது குறித்துப் படித்தால் அரண்டு போகிறோம். ஆனால் இப்போதைய திருமண விளம்பரங்களைப் பாருங்கள் "உயரமான, சிவப்பான, ஒல்லியான மணமகள் தேவை' என்கின்றன. போதாக் குறைக்கு, அங்க அளவுகள்கூட குறிக்கப்படுகின்றன. இந்தக் கேவலத்தை நாம் இயல்பாக எடுத்துக் கொள்ளப் பழகிவிட்டோம்!

சுயமரியாதை, பெண்ணுரிமை போன்ற விஷயங்களில் பெரியார் அளவுக்குச் சாட்டையடி கருத்தைச் சொன்னவர்கள் மிகச் சிலர்தான். ஆனால் இன்றைய தமிழகத்தில் பெண்களுக்கு எந்த சுயமரியாதையும் இருப்பதாகத் தெரியவில்லை.

இன்றைய நிலையில் இளைஞர்களை நம்புவதைத் தவிர வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள்தான் மனம்மாறி இந்தக் கொடுமையை ஒழிக்க முன் வர வேண்டும்"

சமூக சேவகி ஜெயா அருணாச்சலம் :

''கெஞ்சினால் மறையாது இந்தக் கொடுமை. கோலெடுப்பதுதான் ஒரே வழி. குழந்தைகளை வளர்க்கும்போதே ஆண், பெண் என்று பேதம் பிரித்து வளர்க்கிறோம். வீட்டு வேலையைப் பெண்கள்தான் செய்கிறார்கள். இதற்கெல்லாம் எதிராக இயக்கம் தோன்ற வேண்டும்.

கலப்புமணத் திருமணங்கள்தான் வரதட்சிணைப் பேயை ஒழிக்க முடியும். என் நெருங்கிய உறவினர்களே அசாமியரையும், பஞ்சாபியரையும் விரும்பியபோது, சந்தோஷமாக ஆதரவு கொடுத்தேன். அந்தக் காலத்தில் நான் கலப்பு மணம் செய்துகொண்டபோது சந்தித்த பிரச்னைகள் ஏராளம். சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டேன். ஏழைகளைக்கூட ஒரு மாதிரி மாற்றமுடியும் போலிருக்கிறது. ஆனால் நடுத்தர மக்களிடம் மாற்றம் வருவதுதான் குதிரைக்கொம்பாக இருக்கிறது.

புரட்சி என்பதை தயவு செய்து உங்கள் வீட்டில் தொடங்குங்கள். உங்கள் வீட்டு ஆண்களுக்கு வரதட்சிணை எந்தவிதத்திலும் வாங்காமல் கல்யாணம் செய்யுங்கள். ஆடம்பரமான திருமணத்தைத் தவிர்த்து விடுங்கள்."

- ஆதர்ஷ்

படங்கள் : யோகா

• வாஸந்தி



ஜீவநதி

பிரபஞ்சன்

கௌரி: இன்னிக்குக் காலைல மனசுக்குக் கஷ்டமா சிலது நடந்தது. மத்தியானம் சிரிக்கிறேன். என்னைச் சந்தோஷப் படுத்திட்டேம்மா.

கீதா: என்னம்மா சங்கடம் உங்களுக்கு? சொல்லலாம்னா சொல்லுங்க.

கௌரி: நீ என்ன அசலா? குடும்பத்தில ஒருத்திதானே! கண்ணனோட அப்பா, இவன் பேரில கொஞ்சம் நிலம், வீடு, தோப்பெல்லாம் வாங்கி வச்சிருக்காங்க. அதை என் பெண்ணோட தேவைக்காக விற்க வேண்டியதாச்சு. இப்போ, கண்ணனுக்குக் காலணா சொத்து இல்லை.

கீதா: அதனால் என்னம்மா? சொத்தோட யார்தான் பிறந்துவர்றாங்க? பிறகு தானே சொத்து, சொந்தம், பந்தம் எல்லாம்? உங்க பிள்ளை, முன்னோர்கள் சொத்தை எதிர்பார்க்கிறவரா என்ன?

கௌரி: சரியாச் சொன்னே, கீதா. இந்த விஷயத்தைப் பேசத் தொடங்கின உடனே தங்கை சந்தோஷம்தான் என் சந்தோஷம்னு, கையெழுத்துப் போட்டுக் கொடுத்துட்டான். கொடுத்துட்டு, 'அப்ப்பா... இப்பதான் நிம்மதியா இருக்கு. இந்தப் பணம், சொத்து எல்லாம், என் தோள்ல உக்காந்து துன்புறுத்துச்சும்மாங்கறான்.

கீதா: சரிதானேம்மா... கண்ணன் அப்பா வாங்கி வச்சிருந்தாங்க, இல்லேன்னா? இதெல்லாம் சதமாம்மா? கல்வி, அறிவு, ஆரோக்கியம் இருந்தா போதாதா, கௌரவமாப் பிழைக்க? அது கண்ணன்கிட்ட இருக்கு. அவர், நூறு பேருக்கு உதவியா இருப்பார். அவருக்கு எதுக்கு சொத்து, பணம் எல்லாம்? கோடி வச்சிருந்தாலும், ரெண்டு சேலை கட்டி ரெண்டு ஃபிளவுஸ் போட முடியுமாம்மா?

கௌரி: அவனை மாதிரியே பேசறியே நீயும். சந்தோஷமா இருக்கு. இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குத்தான் எத்தனை தெளிவு? ஆனாலும், எங்களுக்கு உள்ள வருத்தம், குழந்தைக்கு ஒன்றும் செய்யலியே, இருக்கறதையும் பறிக்கிறோமேன்னு...

கீதா: அதெல்லாம் ஒண்ணும் இல்லம்மா. எங்க அப்பாகூட இப்படித்தான் பேசுவாங்க. எனக்கு எதுவும் சேத்து வைக்கலையேன்னு அடிக்கடி வருத்தப்படுவாங்க. எங்க அப்பா, தன் வாழ்நாள்ளே ஒரு பைசா லஞ்சம் வாங்கினது இல்லம்மா. இத்தனைக்கும் பணம் கொழிக்கிற அரசாங்கப் பதவியில, இலாகாவில இருந்தவங்க. எங்க அப்பாவுக்குக் கீழ வேலை பார்த்த 'கிளார்க்', 'சூப்பிரண்டன்ட்' வீடு, நிலம், பிளாட், ரொக்கம், வட்டின்னு வாழறாங்க. பென்ஷன் பணம் மட்டும்தான் இப்போதையே வருமானம். முப்பத்தெட்டு வருஷ சர்வீசுக்குப் பிறகு நேர்மையான அதிகாரின்னு ஓய்வு பெற்ற அப்பா மேல, எனக்குத் திருப்திம்மா. ஒரு லஞ்சம் வாங்கற அதிகாரியோட மகளா செழிப்பா வாழறதை விடவும், ஒரு நேர்மையான மனிதருக்கு மகளா, மரியாதையோடு இருக்கிறதுலதான் எனக்குப் பெருமை. எனக்கு எந்தக் குறையும் வைக்கலை அப்பா. இந்த வயசிலேயும், பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறாங்க, விரும்பி வந்து கேட்டுக்கிற பிள்ளைகளுக்கு. சம்பளத்துக்கு இல்லை, ஆத்ம திருப்திக்காக...

கௌரி: உங்க அப்பா கொடுத்து வச்சவரு.... கீதா. பெத்தவங்களைப் புரிஞ்சுக்கிற பிள்ளைகள்தான் எங்களைப் போன்றவங்களுக்கு ஆறுதல். உங்க அப்பா பாடுவார்னு சொன்னியே... நீ பாடுவியோ?"

கீதா: சுமாரா.

கௌரி: எனக்காக ஒரு பாட்டுப் பாடேன்...

(கீதா பாடுகிறாள்)

'பால் நினைந்து ஊட்டும்
தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த

செல்வமே சிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்
பிடித்தேன்
எங்கெழுந்த ருளுவது இனியே...!'

(பாடி முடிக்கிறான். அர்த்தம் பொருந்திய மவுனம் சூழ்கிறது)

காட்சி: 47
காலை/வீடு
பாத்திரங்கள்: தேவயானி, லாரன்ஸ்,
லாரன்ஸின் அம்மா அற்புதம் அம்மாள்



தேவயானி குளித்து முடித்து, காலை இளம் வெயிலில், கூந்தலை உலர வைத்துக் கொண்டிருக்கிறாள். அற்புதம் அம்மாள் சர்ச்சுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

அற்புதம்: தேவா, இட்லி வார்த்து வச்சிருக்கேன். சாப்பிடு. சூடா தோசை வேணாலும் வார்த்துக்கோ. தக்காளிச் சட்னி உனக்குப் பிடிக்குமே. போட்டுக்கோ... சர்ச்சுக்குப் போய், ஒரு எட்டுல ஓடி வந்துர்றேன்.

தேவயானி: சரி அத்தை. வெறும் வயித்துல போறீங்க. காபியாவது கலந்து சாப்பிட்டுப் போங்களேன்.

அற்புதம்: பசியும் பட்டினியுமாகத் தான் கோயிலுக்குப் போகணும். அப்பத் தான் மனசு திறக்குது.

தேவயானி: அத்தை, உங்களுக்கு சர்க்கரை நோய் இருக்கு. மறந்துடாதீங்க. திடீர்னு மயக்கம் வரப் போகுது.

அற்புதம்: அதெல்லாம் எனக்கு வராது. கர்த்தர் என் உடம்பைப் பார்த்துக்குவார்.

(லாரன்ஸ் சட்டையின் பட்டன் போட்டுக் கொண்டே வருகிறான்...)

லாரன்ஸ்: கர்த்தர் சாப்பிட மாட்டார், உனக்காக.

அற்புதம்: அவர் நினைப்பில்தான் இருக்கேன்டா. எனக்கு ஒன்றும் வந்துடாது.

தேவயானி: அத்தை, நீங்க, இப்படி இருக்கக் கூடாது. உடம்பைச் சுத்தமா மறந்துடறீங்க. நேற்று ராத்திரி இன்சுலின் போட்டுக்கிட்டீங்களா?

அற்புதம்: மறந்துட்டேன்டி. குழந்தை. படிச்சுட்டு இருந்தேன். அப்படியே தூங்கிட்டேன்.

தேவயானி: தெரியும். நான் வந்து லைட்டை நிறுத்திட்டு வந்தேன். டாக்டர் எங்களைக் கோவிச்சுக்கிறார். நான் இனி அந்தப் பொறுப்பை ஏத்துக்கிறேன்.

லாரன்ஸ்: கரெக்ட். நீ சொன்னாத் தான் அம்மா கேட்பாங்க.

அற்புதம்: நான் புறப்படறேன். சாப்பிடு. நான் வந்து சமையல் ஆரம்பிக்கலாம். சிரமப்படாதே.

லாரன்ஸ்: அடடா, மாமியா, மருமவ ஒத்துமை நம்ம வீட்டுலதான் பார்க் கணும்போல. ஒரு சண்டை இல்ல. ஒரு முகத்தைத் தூக்கி வச்சுக்கிறது இல்லை. குறை சொல்றது இல்லை. அழுகை இல்லை. எப்பமும் அமைதியாவே இருக்கு, வீடு. ஒரு நாளைக்குச் சண்டை போடுங்களேன்...

அற்புதம்: எதுக்குடா சண்டை போடணும். மருமவ, மாமியாருக்கு எதிரியா? மகதான்டா மருமக. மருமகளுக் கும் மகளுக்கும் என்ன வித்தியாசம்? நான் புறப்படறேம்மா.

தேவயானி: அத்தை, புத்தகத்தை மறந்துட்டீங்களே. *(வீட்டின் நடுவே* *இருந்த மாதா சொருபத்தின் கீழே வைக் கப்பட்ட பைபிளை எடுத்துக் கொடுக் கிறாள். அதை வாங்கிக் கொண்டு போகிறான் அற்புதம்)*

லாரன்ஸ்: ரொம்ப நிம்மதியா இருக்கு, தேவா.

தேவயானி: உம்:?

லாரன்ஸ்: ஓர் இந்துப் பெண்ணை, கிறிஸ்துவ மாமியார் எப்படி ஏத்துக்கு வாங்களோன்னு பயந்துகிட்டே இருந் தேன்...

தேவயானி: ஒரு நல்ல இந்துவுக்குக் கிறிஸ்துவத்து மேல மரியாதை இருக்கும். அது மாதிரி, ஒரு நல்ல கிறிஸ்துவர், இந்துவை மதிப்பார். தன் மதத்தைத்

''அந்த ஆபீஸில்கூட ஆடித் தள்ளுபடி கலாசாரம் பரவிடுச்சு!''

''என்ன?''

''அதாவது ஆடி மாசத்தில் கொடுக்கிற லஞ்சத்திற்கு 10% தள்ளுபடி உண்டாம்!''

- ஆர். ராஜகோபால்

தெரியாத மூடங்கள்தான் இன்னொரு மதத்தை மதிக்காம இருக்கும். அத்தை, ரொம்ப நல்ல மனுஷி. அதனாலதான், நான் சந்தோஷமா இருக்கேன். உங்களை விட நான் அதிகம் பயந்துகிட்டு இருந் தேன். எனக்காக அங்க சாப்பாட்டு முறையைக்கூட மாத்திக்கிட்டாங்க.

லாரன்ஸ்: நான்கூடத்தான் எத் தனையோ விட்டுக் கொடுத்துட்டேன். அதைச் சொல்ல மாட்டங்கறீயே?

தேவயானி: நீங்க மாத்திக்கிறதுக்கும், அத்தை மாத்திக்கிறதுக்கும் வித்தியாசம் இருக்கு.

லாரன்ஸ்: என்ன வித்தியாசம்?

தேவயானி: அத்தை, அதிகாரம் பண்ற இடத்தில இருக்கிறவங்க. அவங்க தன்னை எனக்காக மாத்திக்கிறது, பெருந்தன்மை, குழந்தைக்காக அம்மா மருந்து சாப்பிடறது மாதிரி. அதைத் தான் அருள்னு சொல்லுவாங்க.

லாரன்ஸ்: அப்போ, என் மாற்றத் துக்கு என்ன பெயர்?

தேவயானி: இது காதல், அன்பு, சிநே கம்னு சொல்வாங்க. *(சிரித்துக் கொண்டு)*

நீங்க கோயிலுக்குப் போறவர்... இதை யெல்லாம பேசுவாங்க...?

லாரன்ஸ்: நான் அடுத்த பூசைக்குப் போறேனே.

தேவயானி: சே...சே... அதெல்லாம் தப்பு. அம்மா தேடுவாங்க. அதோட திடீர்னு ஏதானும் ஆயிடப் போகுது. ஏற்கெனவே, சர்க்கல மயக்கம் வந்திருக்கு அவங்களுக்கு, புறப்படுங்க *(அவன் புறப்படுகிறான்)*

(தேவயானி, குழாயில் தண்ணீர் பிடித்துத் தோட்டத்துச் செடிகளுக்கு ஊற்றுகிறாள். டெலிபோன் மணி அடிக்கிறது... போய் எடுக்கிறாள். எதிர்முனையில் அவளுடைய அம்மா.)



தேவயானி: அம்மா, நல்லா இருக்கியா? அப்பா...?

அம்மா: எல்லாரும் சௌக்கியம்தான். நீ எப்படி இருக்கே?

தேவயானி: நல்லா இருக்கேன். சந்தோஷமா இருக்கேன். எடைகூட நாலு கிலோ அதிகமாயிடுச்சுன்னா பாத்துக்கயேன்.

அம்மா: மாமியார்...?

தேவயானி: அதைப் பத்திய கவலையே வேணாம்மா... உன்னைவிட என் அத்தை என்னை நல்லா வைச்சிருக்காங்க. வீட்டுல சும்மா இருக்கிறது சங்கடமா இருக்கு. பள்ளிக்கூடத்துல டீச்சர் போஸ்ட் காலியா இருக்குங்கறாங்க. பக்கத்துல இருக்கிற ஸ்கூல். போகலாம்னு இருக்கேன்... என்ன விஷயம்?

அம்மா: வர வெள்ளிக்கிழமை, நீ இங்க வரணும்... ஒரு வேண்டுதல். நீ உண்டானா, அம்மனுக்குப் படையல் போடறேன்னு வேண்டிக்கிட்டேன்.

தேவயானி: என்ன தேதி?

அம்மா: பன்னிரண்டு.

தேவயானி: ஐயோ, சாரிம்மா. அன்னைக்கு அத்தைக்கு செக்கிங் பண்ற நாள். அன்னைக்கு நான்தான் அவங்களை டாக்டர்கிட்ட அழைச்சுகிட்டுப் போகணும். அவருக்கு ஆபீஸ் இருக்கும். தனியா போகமாட்டாங்க. அவங்களைத் தனியாவும் அனுப்பக் கூடாது.

அம்மா: என்னடி இப்படிச் சொல்றே? இந்த நாளை விட்டா, அடுத்த மாசம்தான் போக வேண்டி இருக்கும்.

தேவயானி: அடுத்த மாசமே போகலாமே. என்ன அவசரம்?

அம்மா: சாமி நேர்த்திக் கடன். தள்ளிப் போயிடக் கூடாது. அதான்.

தேவயானி: சாமி புரிஞ்சுக்கும். நீ கவலைப்படாதே.

அம்மா: *(வருத்தமுடன்)* சரி. உன் இஷ்டம். வாயேன், நாலு நாளைக்கு இருந்துட்டுப் போகலாம்.

தேவயானி: பார்ப்போம். *(தொலைபேசியை வைக்கிறாள்.)*

காட்சி: 47

பகல்/மொட்டை மாடி

பாத்திரங்கள்: செல்வம், கீதா, கண்ணன், கபிலா.

வெயில் தாழ்ந்த மாலை நேரம். செல்வம், காவல்துறை அதிகாரியைச் சந்தித்து விட்டு வந்திருக்கிறான். அந்த அனுபவம், அவனுக்குள் ஏற்படுத்தி இருக்கும் சலனங்கள், அவன் பேச்சில் எதிரொலிக்கிறது... கீதா தண்ணீர் எடுத்து வந்து கண்ணன் வளர்க்கும் செடிகளுக்கு ஊற்றுகிறாள்.

செல்வம்: எஸ்.பி.பாவம். அவருக்கு உண்மை தெரியுது. இருந்தாலும் மேலிடத்து பிரஷர். விசாரணை பண்ணலேன்னு சொல்லணும். அதனால, கேள்வி கேட்பார்.

கண்ணன்: அந்த வில்லன்தான் இதற்குக் காரணம் இல்லையா?

செல்வம்: வில்லன்னு தனி நபர்களைச் சொல்றதைக் காட்டிலும், மனித சமூக குணாம்சங்களைத்தான் சொல்லணும். அந்த நாலாம் கட்டத் தலைவர் முதல் கட்டத் தலைவராக மாறணும். அதுக்குப் பணம் வேணும். ஏராளமான பணம் வேணும். தேர்தல், பண விளையாட்டுக் களமாயிடுச்சு. அதற்குச் சரியான வழியில பணம் திரட்ட முடியாது. என்னைமாதிரி ஆட்கள்கிட்ட இருந்து

அர்த்தமில்லாப் பாட்டு!

"அர்த்தமே இல்லாம என்னை ஒரு பாட்டு எழுதித் தர சொன்னார் டைரக்டர் ஷங்கர். நானும் 'மாரோ மாரோ'ன்னு ஒரு பாட்டு எழுதியிருக்கேன். அந்தப் பாட்டுல ஏதாவது அர்த்தம் இருந்தா நீங்க சொல்லுங்க. இந்த மாதிரி பாடல் எழுதத்தான் என்னைக் கூப்பிடறாங்க. இன்னைக்கு ஆங்கில கலப்போட அதிகப் பாடல்கள் வரதுக்குப் பிள்ளையார் சுழி போட்டவன் நான்தான். இப்ப எல்லாரும் அதைத் தொடர ஆரம்பிச்சிட்டாங்க. இளைஞர்களுக்கான படங்கறதால அப்படிக் கேக்கறாங்க. தொடர்ந்து ஐந்து படம் ஹிட் கொடுத்த இயக்குனர் பாரதிராஜா. அடுத்து ஷங்கர்தான். இவருக்கு 'பாய்ஸ்' ஆறாவது படம். இந்த ஆறாவது படமும் ஹிட்டாயிட்டா ஷங்கருக்குத் தமிழ் சினிமா வரலாற்றுல இடம் உண்டு"



- 'பாய்ஸ்' பட கேஸட் வெளியீட்டு விழாவில் கவிஞர் வாலி.

பூமியைப் பிடுங்கணும். பிளாட் போட்டு விக்கணும். புறம்போக்கைப் பட்டா போட, பெரிய சக்தி தேவை. அந்தப் பெரிய சக்தி இந்தச் சின்ன சக்திக்குத் துணையா இருக்கு. சட்டம் ஒழுங்கு பிரச்னை கவனிக்கிற சக்தி, எந்தக் காலத்திலும் அதிகார வர்க்கத்தோட ஏவலாளாகவே இருக்கு. மனித உயர்வு, பணத்தாலேயும் பதவியாலேயும்தான்னு ஆகிப் போச்சு. இதெல்லாம்தான் வில்லன்கள், நமக்கு.

கண்ணன்: *(ஒரு சிகரெட்டைப் பொருத்திக் கொள்கிறான்)* ஊழல், எல்லாக் காலத்திலும் இருக்கிற சங்கதிதான். வெள்ளைக்காரன் காலத்திலும் இருந்துச்சு. அதுக்கு முன்னாலும் இருந்தது. பின்னாலும் இருந்தது. இப்பவும் இருக்கு. ஆனா, எப்பவும் இல்லாத தீவிரம் இப்போ, ஊழலுக்கு இருக்கே. என்ன காரணம்?

கீதா: *(தண்ணீர் ஊற்றிக் கொண்டே)* என்ன சார், தீவிரமா எதையாவது சிந்திச்சா, சிகரட் கொளுத்திக்கிடணுமா, என்ன?

செல்வம்: *(சிரித்துக்கொண்டு)* ஊழல் எப்பவும் இருந்தது. கண்ணன். அது தலைவர்கள்கிட்ட இருந்தது. சில தனி மனிதர்கள்கிட்ட இருந்தது. அதிகார வர்க்கத்துக்கு, எப்பவுமே ஊழலுக்கு எதிராகவே இருந்திருக்கு. இப்பல்லாம், ஊழல் பெரிய விஷயம் இல்லைன்னு சமூகம் ஒப்புக் கொள்ளத் தொடங்கியது தான், பெரிய சாபக்கேடு. நம் தலைவர்கள் சமூகத்தையே ஊழலாக்கிட்டதுதான் பெரிய சோகம். தேன் எடுக்கிறவன் புறங்கையை நக்காமலா இருப்பாங்கிற கேள்வி, சாதாரண மனிதனிடம் இருந்து வந்ததுன்னா, அது எவ்வளவு பெரிய இழிவு?

கீதா: எங்க அப்பா சொல்லி இருக்காங்க. ஒரு காலத்துல, தனக்கு இரண்டாம் மனைவி இருக்கிற விஷயத்தையே மறைச்ச தலைவர்கள் உண்டாம். உண்மையா இருக்குமா?

கண்ணன்: நம்ப முடியலை இல்லையா? இதுதான் சமூகச் சீர்கேடு. இன்னொரு பக்கம், கண்ணகி சிலையா நிக்கிறா?

கீதா: எங்க நிக்கிறா? மியூசியத்து இருட்டுக் கிடங்குல கிடக்கிறா.

செல்வம்: என் கவலை வேற. நான் வாத்தியார். வள்ளுவரையும், இளங்கோ அடிகளையும், ஆண்டாளையும், வள்ளலாரையும் சொல்லிக் கொடுக்கிற பொறுப்பில் இருக்கிறவன். இதெல்லாம், காலத்துக்கு ஒவ்வொரு விஷயமா புரிஞ்சுக் கொள்ளப்படுமா? அல்லது, வள்ளுவரும், வள்ளலாரும் தேவை இல்லையா?

கண்ணன்: எனக்குக் காலேஜ்ல வரதராசன்னு ஒரு சினேகிதன் இருந்தான். அவன் புதுசா ஓர் ஆத்திசூடி எழுதி, ஆண்டுமலர்ல வெளியிட்டுட்டான். அது அப்போ பெரிய சர்ச்சையை உருவாக்கிடுச்சு...

கீதா: சொல்லு...கண்ணன் கேட்கணும் போல இருக்கு.

(தொடரும்)

விசில்

ஆக்ஷன் அடிதடியில் ரகளை பண்ணும் சமீபத்திய தமிழ் சினிமா ட்ரெண்ட்டுக்கு, முற்றிலும் மாறான கேம்பஸ் திரில்லர் விசில். இந்த நேரத்தில் இப்படியொரு படமெடுத்ததற்கு முதலில் உரக்க விசிலடிக்கலாம்.

பல வருடங்களுக்கு முன் நாகா என்றொரு பெண் உயிரோடு புதைக்கப்பட, அந்த இடத்தில் தான் கல்லூரியின் ஒரு பகுதி கட்டப் பட்டதாகவும், அந்தப் பகுதியில் நாகாவின் ஆவி இரத்த வெறியுடன் அலைந்து சிலரை உயிர்ப்பலி வாங்கியதாகவும், நாட்டுப்புறவியல் (Folklore) துறை பேராசிரியர் லிவிங்ஸ்டன் பாடம் நடத்துகிறார் மாணவர்களுக்கு. (இந்த ஒரு பாடத்தை மட்டுந்தான் திரும்பத் திரும்ப நடத்துகிறார் என்பது வேறு விஷயம்)



● ஜெர்ரி - ஜேடி



இந்த mythக்கு ஏற்றாற்போல மாணவர்கள் சிலர் தொடர்ந்து கொல்லப்பட, நமக்குத் திக்! இறுதியில் நாகா உண்மையா? இதன் பின்னணியில் இருந்து யாராவது கொல்கிறார்களா? என்பது சஸ்பென்ஸ்!

படத்தின் உயிர் அந்தச் சின்ன, அழகான ப்ளாஷ்பேக் காட்சி. இந்தக் காட்சிக்காகவும், யாரும் யூகிக்க முடியாத அசத்தல் கிளைமாக்ஸ் காட்சிக்காவும், இயக்குனர்கள் ஜேடி-ஜெர்ரிக்கு இன்னொரு முறை விசிலடிக்கலாம்.

கல்லூரி மாணவர்கள் திடீர், திடீரென்று பலியாகிவிட, போலீஸ் இன்வெஸ்டிகேஷன், மாணவர்களுக்குப் பீதி எதுவும் வேண்டுமே! ம்ஹூம்! இரண்டும் இல்லை. யாருக்கென்ன வந்தது என்பது போல் மாணவர்கள் போவதும் வருவதுமாக இருப்பது, எந்த வகையில் சேர்த்தியோ?

ஹீரோ விக்ரமாதித்யாவை பிரின்சிபல் சஸ்பென்ட் செய்து, 'இனிமே பரீட்சைக்குத்தான் வரலாம்' என்று கண்டிஷன் போட்ட பிறகும், கல்லூரி வாசலிலேயே அவர் அடிக்கடி அலைவது திரைக்கதை சறுக்கல்.

காயத்ரி ரகுராமும், ஷெரீனும் நிறைய இளமையோடு மனத்தை ஜில்லிட வைக்கிறார்கள். 'அழகிய அசுரா' பாடலில் மனத்தை நிறைக்கிறார் ஷெரின்.

'கரண்ட் ஷாக்'காகி, பெண்கள் மனத்தில் நினைப்பதெல்லாம் விவேக்குக்குக் கேட்க, அதை வைத்துக் கொண்டு அவர் பண்ணும் காமெடி - விவேக்கடி!

சில இடங்களில் காட்சிகள் கொடுக்காத திகிலை டி. இமானின் இசை கொடுத்து விடுகிறது. 'பௌசியாவின் கேமரா, சுஜாதாவின் வசனம், இரண்டும் மென்பஞ்சு அணைப்பு.

'இவர்தான் கொலைகாரரா?' என்று கடிகார முள் மாதிரி ஒவ்வொருவர் பக்கமாக நம் மனது சாய, 'இவங்கள்லாம் இல்லை' என்று ஒவ்வொரு முடிச்சும் கழன்று விழ, 'யாரு? யாரு?' என்று இதயத்தைப் படபடக்க வைக்கும் காட்சிகளுக்காக மீண்டுமொருமுறை.....

- மிஸ்டர் லீ

● அபவ் ஆவரேஜ்

வாழ்க்கையே இருக்குது வாழைப்பழத்திலே!

சுறுசுறுப்புக் குறைஞ்சு, சோம்பலா ஃபீல் பண்றீங்களா? எடுங்க ரெண்டு வாழைப் பழத்தை, உரிச்சு உள்ளே தள்ளுங்க - சோம்பல் படாம! இயற்கையான மூணு வகை சர்க்கரை - சுக்ரோஸ், ஃப்ரக்ட்ரோஸ், குளுகோஸ் இத்தோட, நார்ச்சத்தும் இதுல இருக்கு. அதனாலதான் 'இம்மீடியட் எனர்ஜி வேணுமா? இரண்டே ரெண்டு வாழைப்பழம் சாப்பிடுங்க'ன்னாங்க. சமீபத்துல பண்ணின ஆராய்ச்சியிலே, ரெண்டு வாழைப்பழம் சாப்பிட்டா தொண்ணூறு நிமிஷத்துக்குச் சுறுசுறுப்பா வேலை செய்யலாம்னு கண்டுபிடிச்சிருக்காங்க, தெரியுமா?

அட, அதை வுடுங்க. இன்னும் எத்தனையோ வகையிலே நோயாளிக்கு உதவுதாம் வாழைப்பழம். இருங்க, ஒவ்வொண்ணா சொல்றேன், நோட் பண்ணிக்குங்க.

அனீமியா (அதாங்க ரத்த சோகை): இரும்புச்சத்து இருக்கறதால, நிறைய ஹெமோக்ளோபின் இரத்தத்துல உற்பத்தி பண்ண ஹெல்ப் பண்ணுது.

பிளட் பிரஷர் (இரத்த அழுத்தம்தாங்க): இதுல பொட்டாசியம் நெறைய இருக்கு. ஆனா உப்புச்சத்து குறைச்சலா இருக்கு. அதுனால பி.பி.க்கும், ஸ்ட்ரோக்குக்கும் இது தாங்க சரியான உணவு, ஆமா!

ப்ரெயின் பவர் (மூளை வேலை செய்ய வேணாமா?): ஒரு பள்ளிக்கூடத்துல, பசங்க எல்லாம் பரீட்சை எழுதப் போகறதுக்கு முன்னால பிரேக்ஃபாஸ்ட்டுக்கு வாழைப் பழம், நடுவுல ரெஸ்ட்டின்போது வாழைப் பழம், லஞ்சுக்கு வாழைப்பழம்னு ஒரேயடியா வாழைப்பழமாவே கொடுத்து, அவங்க மூளை இன்னும் கூடுதலா வேலை செய்யுதான்னு பாத்தாங்களாம். பொட்டாசியம் இருக்குது பாருங்க இதுல, அது பசங்க கவனமா புரிஞ்சுகறதுக்கும் 'அலர்ட்டா இருக்கறதுக்கும் உதவிச்சாம். அட, உடான்ஸ் இல்லீங்க, ஆராய்ச்சி பண்ணிக் கண்டுபிடிச்சிருக்காங்க!

கான்ஸ்ட்டிபேஷன் (மலச்சிக்கல்தான்): நீங்க ஹெர்பல் மாத்திரை, பர்கோலேக்ஸ் எத்தையும் தேடி ஓட வேண்டாங்க. நார்ச்சத்து நெறைய இருக்கா, வாழைப்பழமே உதவும்.

('அட இன்னாய்யா, பரீட்சைக்குப் போற பசங்களுக்கு வாழைப்பழமா மூணு வேளையும் கொடுக்கச் சொல்றே. அப்பறம் மேப்படி சமாசாரத்தையும் சொல்றே. பசங்க பரீட்சை ஹாலுக்குப் போவாங்களா, பாத்ரூமுக்குப் போவாங்களா?'ன்னு கேக்கறியளா? ஹிஹி... கான்ஸ்ட்டிபேஷன்காரன்களுக்கும் காலைல நார்மலா உதவும்னு சொல்ல வந்தேனுங்க. நீங்க ஒண்ணு! ரெண்டையும் போட்டுக் கொழப்பிக்கிட்டு!)



டிப்ரஷன் (ஆமாங்க, மந்தமா இருக்குதில்லீங்களா? அதாங்க): வாழைப்பழத்துல 'ட்ரைபோடோஃபான்'னு ஒரு சமாசாரம் இருக்குதுங்க. அதுவும் ஒரு வகை ப்ரோடீன்தாங்க. அத நம்ம உடம்பு 'செரோடோனின்'னு மாத்தி உட்டுடுதுங்க. செரோடோனின் உடம்புல உற்பத்தியாச்சுன்னு வச்சுக்குங்க. ஒடம்பு சும்மாவா இருக்கும்? மந்தம் போய்டும். ரிலாக்ஸ்டா மாத்தும். உங்க 'மூட்' மாறும். ரொம்ப ஹேப்பியா ஃபீல் பண்ணுவீங்க.

ஹேங்க் ஓவர்ஸ்: (முந்தின நாள் ராத்திரி பார்ட்டிக்குப் போய்ட்டு வந்தவங்க, மறுநா



காலைல இருக்கற 'கண்டிஷன்'தாங்க!): உடனடியா 'ஹேங்கோவர்' போவணுமின்னா, வாழைப்பழத்தை உரிச்சுப் போட்டு ஒரு மில்க்ஷேக் பண்ணுங்க. கொஞ்சூண்டு தேன் ஊத்துங்க. வாழைப் பழம் வயித்தைச் சமாதானப் படுத்திடும். தேன் வந்து குறைஞ்சு போன ப்ளட் ஷுகர் லெவலை உசத்தும். பால் உங்க உடம்புச் சக்தியை ஒரே உசத்து உசத்திடும்!

ஹார்ட்பர்ன்/அல்சர் (நெஞ்செரிச்சல், ரணமான புண்): இயற்கையான ஆன்டாஸிட் எஃபெக்ட் வாழைப்பழத்துல இருக்குதுங்க. சாப்பிட்ட உடனே சும்மா குளு குளுன்னு ஆயிடும்.

மார்னிங் ஸிக்னஸ் (காலைல வயத்தைப் புரட்டிக்கிட்டு வாந்தி வருதில்லையா, புள்ளைத் தாய்ச்சிங்களுக்கு அதாங்க!): சாப்பாட்டுக்கு நடுவுல, அதாவது ரெண்டு சாப்பாட்டுக்கு நடுவுலங்க, பழத்தைச் சாப்பிடுங்க. ப்ளட் ஷுகர் லெவல் ஏறிடும். அப்புறம் மார்னிங் ஸிக்னஸாவது, ஈவினிங் ஸிக்னஸாவது!

மஸ்கிடோ பைட்ஸ் (கொசுக்கடி தெரியாதுங்களா? அதேன்): ஐயோ, அவசரப்படாதீங்க. கொசுவுக்குப் போய் வாழைப்பழத்தைக் கொடுக்கச் சொல்லுவேணுங்களா? பழத்தை நீங்க சாப்பிடுங்க. தோல் இருக்குது பாருங்க தோலு; அத்த எடுத்து கொசு கடிச்ச இடத்துல போட்டு நல்லாத் தேயுங்க. தோலு தடிக்காது. நமைக்கவும் நமைக்காது! கியாரண்டி. அட, வாழப்பழத்தோலு இல்லீங்க, உங்க தோலு!

நெர்வ்ஸ் (நரம்பு தாங்க): விட்டமின் பி நிறைய இருக்கறதுனால எப்பவும் அமைதியா வச்சுக்கும் நரம்புங்களை.

ஓவர் வெய்ட்டோட ஓர்க் பண்றவங்க அஞ்சாயிரம் பேரை ஆஸ்பிடல் ஆஸ்பிடலா தேடிப் போய் ஆராய்ச்சி பண்ணிருக்காங்க. இவங்க எல்லோருக்குமே 'ஹை-பிரஷர் ஜாப்'தான். கெடுபிடியான வேலைல இருந்திருக்காங்க. எப்பவாவது, எதையாவது சாப்பிடறதுக்குப் பதிலா, ப்ளட் ஷுகர் லெவலைக் குறைக்கிற மாதிரி, மாவுச்சத்து அதிகம் இருக்கிற வாழைப் பழத்தை இரண்டு மணி நேரத்துக்கு ஒரு தடவை இவங்க சாப்பிடலாம்னு அந்த ஆராய்ச்சி முடிவுல சொல்லியிருக்காங்க!

இப்பச் சொல்லுங்க, வாழைப்பழம் வாழ்க்கைக்கு ரொம்பத் தேவைதானே?

- 'க்ரூசிபின்' எடிட்டர் ஐயா,
ரொம்ப நன்றிங்க, டிப்ஸ் தந்ததுக்கு
- **சித்தார்த்**



பேப்பர்காரன்

“சிந்து... பேப்பர்காரன் வந்திருக்கான் பார். பேப்பர் வாங்கிண்டு வா..” என்று என் மகளிடம் சொல்லிவிட்டு, என் மனைவி கலந்து வைத்திருந்த காப்பியை எடுத்துக் கொண்டு திண்ணைக்கு வந்தேன். அந்தச் சூடான திரவம் சொட்டுச் சொட்டாய்த் தொண்டைக்குழியில் இறங்க, செய்தித் தாளின் ஒவ்வொரு பக்கத்தையும் புரட் டிப் புரட்டி தலைப்புச் செய்திகளைப் படிக் கும் சுகமே அலாதியானது.

நான் திண்ணைக்கு வந்த பின்பும், பேப் பர்காரப் பையன், என் வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருந்தது ஆச்சரியம் தந்தது.

நான் அகல விரித்த விழிகளோடு அவனை ஏற இறங்கப் பார்க்க, அவன் ஏதும் பேசாது என்னையே பார்த்துக் கொண்டிருந் தான். “என்னப்பா என்ன வேணும், எதுக்கு நிக்கற?” கேட்டுக் கொண்டிருக்கும் போதே எங்கள் வீட்டில் பால் கறப்பவர் சைக்கிளில் வந்திறங்கினார்.

“என்ன வர வர லேட்டாகிக்கிட்டே போவுது. கன்னுக்குட்டி என்ன கத்து கத்துது பாத்தீங்களா...?” என்று நான் அவரிடம் விசாரிக்க, அதற்கு அவர், “இன்னிக்குத் தான் கொஞ்சம் பிந்திடிச்சு..” என்ற படியே வாசலில் நின்றிருந்த பேப்பர்காரப் பையனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்து விட்டுப் பால் கறக்கும் சொம்புடன் மாட்டுக் கொட்டிலுக்குப் போனார்.

பையன் என்னிடம், “சார்... என்னை இனிமே பேப்பர்காரன்னு சொல்லாதீங்க சார்” என்றான்.

ஒரு நிமிடம் அவனது பேச்சில் அதிர் வான நான், சில நிமிஷ மௌனத்துக்குப் பிறகு. “ஏம்பா?” என்றேன்.

அதற்கு அவன், “சார்... நான் ஒரு மேல் நிலைப் பள்ளியில பத்தாங்கிளாஸ் படிக் கிறேன். இது எனக்கு ஒரு சைடு வேலைதான். நான் படிக்கிற பையன்” என்றான்.

அவனது பதில் எனக்குள் சிரிப்பை வரவழைத்தாலும், கோபத்தையும் என்னுள் உண்டுபண்ணியிருந்தது. இருந்தபோதிலும் நான் என் கோபத்தைச் சற்றே புறந்தள்ளி விட்டு, “அதுல என்னப்பா இருக்கு? சரி சரி போய்ட்டு வா” என்று அலட்சியப் பாவத் துடன் அன்றைய செய்தித்தாளில் மூழ்க யத்தனித்தேன்.

அங்கிருந்து நகராத அந்தப் பையன், “இல்ல சார்... என்னை நீங்க அப்படிக் கூப்பிடக் கூடாது” என்று மீண்டும் ஒருதரம் அழுத்திச் சொன்னான்.

பையனின் வீம்பு நான் புறந்தள்ளியிருந்த கோபத்தை வலிந்து இழுத்து வந்து என் தலைக்குள் ஏற்றி விட்டது.

“சர்தான் போடா... இதுல என்ன இருக்கு?” என்று நான் குரலுயர்த்த, பையன் மீண்டும் தீர்மானமான அழுத்தத்துடன், “நீங்க அப்படிக் கூப்பிட்டது தப்பு சார்” என்றான்.

அவன் என் செயலைத் தப்பு என்று இடித்துரைத்தது, என் ஈகோவைச் சற்றே



அசைத்து விட்டது போலும். நான் 'சட்' டென்று எழுந்து பையனின் அருகில் வந்து, "பேப்பர்காரப் பயலை, பேப்பர்காரன்னு தான் கூப்பிடுவேன். பின் என்ன ஆபீஸர்னா கூப்பிடச் சொல்ற... வெளிய போடா" என்று வன்மமாய் ஏச ஆரம்பித்து விட்டேன்.

என் ஆக்ரோஷமான முகமும், வன்ம மான ஏசலும் பையனை அதீத அச்சத்தில் ஆழ்த்தி விட்டது போலும். அவன் 'வெடுக்' கென்று திரும்பி சைக்கிள் ஸ்டாண்டை உதைத்து விலக்கி, சைக்கிளில் ஏறிப் போனான்.

இருபதடி தூரம் சைக்கிள் மிதித்தவன் என்னைத் திரும்பிப் பார்க்க, கேட்டின் மேல் விளிம்பில் கை வைத்தபடி அவன் போவ தைப் பார்த்துக் கொண்டிருந்த நான், அவன் என்னைத் திரும்பிப் பார்ப்பதைப் பார்த்த தும், என் நாக்கைக் கோணலாய் மடக்கி பற்களுக் கிடையில் கடித்துக் கொண்டு, "போடா பேப்பர்காரா..." என்று உரக்கக் கத்தினேன். மருண்டு விட்ட பையன், திரும்பி சீட்டினி ன்றும் எகிறி சைக்கிள் பெடலை வேகமாய் மிதித்தான்.

ஆனால், ஏனோ அதன் பிறகு செய்தித் தாளின் செய்திகளில் மனம் குவியவில்லை. ஆறிப் போன காப்பியை 'மடக்'கென்று தொண்டைக்குள் கொட்டிக் கொண்டு, பேப்பரை மடித்து எடுத்துக் கொண்டு உள்ளே போனேன்.

குளித்து முடித்து டிபன் சாப்பிட்டு ஆபீஸ் செல்லும் வரையில் மனசு ஏதோ சஞ்சலத்தோடு உறுத்திக் கொண்டே யிருந்தது. ஆனால் ஆபீஸ் சென்றதும் அங்கு வேலையில் முற்றாய் மூழ்கிய பின்பு காலை நிகழ்வுகள் காற்றோடு கரைந்து என் மனத்திலிருந்து மறைந்து போயின.

ஆபீஸ் விட்டு வீட்டுக்கு வந்ததும், ஆச் சரியமாய் என் பதினான்கு வயது மகனின் அழுகுரல் கேட்டுக் கொண்டிருந்தது. அவன் அழுகையினூடே என் மனைவியிடம் ஏதோ வார்த்தையாடிக் கொண்டிருந்தான்.

"மாட்டேன்.. போ.. முடியாது..." என்று எதற்கோ எதையோ மறுத்துக் கொண்டிருந் தான். என் மனைவி அவனுக்கு ஏதேதோ சமாதானம் சொல்லிக் கொண்டிருந்ததும், அவன் வீம்பாய் மறுத்துக் கொண்டிருந்ததும் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. நான் பேண்ட் சட்டையைக் கழற்றிக் கைலிக்குள் புகுந்து கொண்டு முகம், கை, கால் கழுவி விட்டு மனைவியிடம் மெல்ல விசாரித்தேன்.

"ஒண்ணுமில்லீங்க... ஒன்பதாவது படிக்கிற பையன் தேவையில்லாம அழுவு றான், அடம்பிடிக்கிறான்" என்றாள் என் மனைவி.

"சரி என்னன்னுதான் சொல்லேன். பய இது மாதிரியெல்லாம் முரண்டு பிடிக்க மாட்டானே..." என்றபடி அழுது கொண் டிருந்த அவனை இழுத்து என் பக்கத்தில் இருத்திக் கொண்டேன்.

"இன்னிக்கு ஸ்வாதி வீட்ல குழந்தைக்கு உடம்பு சரியில்லையாம். அவுங்க பால் வாங்க வரலை. ரெண்டு வீடு தள்ளிதானே இருக்கு, நீ போய்ப் பாலைக் குடுத்துட்டு வாடான்னு அனுப்பிச்சேன். அந்த வீட்டுப் பையன் இவனைப் பார்த்ததும், 'அம்மா... பால்காரன் வந்துருக்கான்'னு கூவினானாம். அது உங்க அழகுப் புள்ளைக்குப் பொறுக் கலை. இங்க வந்து கத்திட்டிருக்கான்" என்றாள்.

நான் மெலிதான புன்னகையுடன் என் மகனைத் திரும்பிப் பார்த்தேன். அவன் என் முகத்தை நேருக்கு நேராய்ப் பார்த்ததும் தலையைக் கவிழ்த்துக் கொண்டான். நான் அவன் தோளைத் தட்டிக் கொடுத்து, "இதுல என்னடா கண் இருக்கு. கூப்ட்டா கூப் டுட்டுப் போகட்டுமே..." என்று சமாதானம் சொன்னேன்.

அவன் விறைப்புடன், "நான் என்னப்பா தெனம் வீடு வீடாப் போய் பாலா ஊத் தறேன்? என்னைப் பார்த்து அந்தப் பய 'பால்காரன்'ங்கறான்?" என்றான்.

"அதனால என்னப்பா?" என்ற என் கேள்விக்கு அவன் கோபத்தோடு, "எனக்கு அது பிடிக்கலைப்பா" என்றான்.

"அதான் ஏன்...? அதனால என்ன குடி முழுகிப் போச்சு?"

"என்னமோ எனக்குப் பிடிக்கலை. காரணம் சொல்லத் தெரியலை."

"நம்ம வீட்டுல மாடு கறக்குது. பால் கொண்டு ஊத்தறோம். அது கேவலமா? நான் உன் வயசுல விராட்டி தட்டி வித்திருக் கேன் தெரியுமா. எங்க வீட்ல நிறைய முருங்கைக்காய் காய்க்கும். அதை வீடு வீடா கொண்டு போய் வித்திருக்கேன். இன் ஸ்பெக்ட் பத்தாவது படிக்கற வரைக்கும் முருங்கைக்காய் வியாபாரம்தான் என்னைப் படிக்க வைச்சது. இந்த வயசுல இந்த அனு பவங்களெல்லாம் எவ்ளோ சந்தோஷமானது தெரியுமா...!"

என் பேச்சுக்குப் பையன் பதில் சொல்லாமல் இறுக்கமாய் அமர்ந்திருந்தான்.

"நான் இனிமே எங்கேயும் பால் கொண்டுட்டுப் போக மாட்டேன்" என்றான்.

நான் மெலிதாகச் சிரித்துக் கொண்டு அவன் தலையை என் தோளில் சாய்த்துக் கொண்டேன். என் விரல்கள் அவன் முதுகை வருடியபடி இருக்க, "நீ ரொம்பத் தப்பு செய் றடா தம்பி" என்றேன். "எந்த வேலையையும் தரக்குறைவா நினைக்கறது உன் வாழ்க் கைக்கு நல்லதில்லைப்பா. எங்க வீட்ல நாலு மாடு இருந்துச்சு. அத்தனைக்கும் தெனம் தண்ணி காட்டி சீமப்புல் வாங்கிட்டு வந்து போட்டு...!" என் பேச்சு சில நிமிஷம் தொடர்ந்து கொண்டிருந்த போது, என் முதுகில் இரண்டொரு நீர்த்துளி சிந்தியது. பையன் என் விரல்களுக்குள் தன் விரல் களை கோத்துக் கொண்டு அழுத்தினான்.

பையன் விரல்களை அழுத்தியதும் 'சுருக்'கென்று என் மனசில் காலை நிகழ்வு கள் ஒரு கணம் மின்னிவிட்டு மறைந்தன.

சில நிமிஷம் மௌனமாய் யோசித்தேன்.

'போடா பேப்பர்காரா..!' என்கிற என் ஆங்காரக் கூச்சலும், அதைக் கேட்டு மருண்டு போன அந்த பேப்பர் பையனின் வெளிறிய விழிகளும், என் மூளைக்குள் ஒருவித அதிர்வை உண்டுபண்ணின.

ஏனோ தெரியவில்லை, ஐந்து மணிக்கே விழிப்புத் தட்டி விட்டது. மணி ஆறு, ஆறே கால், ஆறரை ஆகியும் இன்று செய்தித்தாள் வந்தபாடில்லை. ஏழு மணிக்கு செய்தித் தாள்களை சைக்கிளில் வைத்துக் கட்டிக் கொண்டு ஏஜெண்டே வீடு வீடாய்ப் போட்டுக் கொண்டு வந்தார்.

அவரின் சைக்கிளைப் பார்த்ததும் நான் வேகமாய் கேட்டருகே வர, என் கையில் பேப்பரைக் கொடுத்த ஏஜெண்ட், "என் னவோ தெரியலை சார்... பையன் இனிமே வரமாட்டேன்னுட்டான், அதான் லேட்" என்று சொல்லி விட்டு அடுத்த வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். ●



"பொண்ணுக்கு வரனோட அம்மாவை ரொம்பப் புடிச்சுப் போச்சு!"

"எப்படி சொல்றே...?"

"தனியா பார்த்து ஒரு அஞ்சு நிமிஷம் ஏச முடியுமானு கேட்கறா!"

- அம்பை தேவா

இறைவனுடைய திருக்கோயில் சாதுக்களினுடைய உள்ளக் கோயில்களாகும் !

முக்தி தரும் ஸ்ரீ அன்னபூரணி க்ஷேத்ரமான

காசியில் ஆடி அமாவாசை நாளில்

சாதுக்களுக்கு (சாது பண்டாரா) அன்னதானம் செய்வோம் வாருங்கள் !

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் புண்ணிய க்ஷேத்ரமான காசியில் ஆடி அமாவாசை நாளில் சாதுக்களுக்கு அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...

"ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" நடத்தும் 5 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து அன்னதான சேவை !

பேரன்புடையீர் ! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அன்னை தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம். கங்கை ஆறு உத்தரவாகினியாக ஓடுகின்ற காசியில் நடமாடும் தெய்வங்களாக இருக்கின்ற சாதுக்களுக்கு அன்னதானம் செய்தல் அது இறைவனுக்கு போய் சேருகிறது. காசியில் சுமார் 200க்கு மேற்பட்ட ஆசிரமங்கள் உள்ளன. இங்கு சந்நியாசிகள் துறவறத்தில் இருந்து கொண்டு பூஜை தவம், ஜபம், மந்திர உபதேசம் முதலிய தர்மங்களை செய்து காசியில் தொண்டாற்றி வருகிறார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த சந்நியாசிகளை காசியிலுள்ள அனைத்து ஆசிரமங்களிலிருந்து அழைத்துவந்து தோப்பில் செய்து பரிவட்டம், ருத்ராட்ச மாலை இவைகளை அணிவித்து அவர்கள் நெற்றியில் சந்தனம் வைத்து புஷ்பம் சாத்தி பட்டாட்டு முறைப்படி பல வகையான இனிப்பு வகைகள், பூரி, சப்ஜி, பாயசம் முதலியவைகளை மண் சட்டியில் வைத்து அவர்களுக்கு தீபாராதனை செய்து வணங்கி அவர்களை சாப்பிட வைத்து பாத காணிக்கை (தட்சணை) வைத்து அவர்கள் திருப்தியாகும் வரை கேட்கின்ற பதார்த்தங்களை "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" மூலம் காசி ஸ்ரீ குமாரசாமி மடத்தில் சாதுக்களுக்குப் படைக்க இருக்கிறோம். இதில் எல்லா சாதுக்களும் ஒன்றாக அமர்ந்து பரிமாறுகின்ற அக்காட்சிக்கு நிகரானது வேறொன்றுமில்லை. இந்த சாது பண்டாரா இறை பணிக்கு தங்களால் இயன்ற நன்கொடை வழங்கி சாதுக்களின் ஆசியையும், எண்ணற்ற செல்வங்களையும் பெற்று, இகபர சௌபாக்கிய வாழ்வுபெற அன்புடன் அழைக்கிறோம்.

தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ரூ.500- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

காசி, கயா, பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஆகிய இம்மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் புண்ணிய காரியங்கள், பித்ரு காரியங்கள், பிண்டம் போடுதல், தர்மங்கள், ச்ரார்த்தம், திவசம், தர்ப்பணம் போன்றவற்றை அவரவர் விருப்பப்படி அன்னதானக் கைங்கர்ய அன்பர்களுக்கு செய்து தரப்படும்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000-அனுப்பும் போது யாருக்கு ச்ரார்த்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பிண்ட பிரதானத்திற்காக ரூ. 5000- அனுப்பும் அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை ஆறு ஆண்டுகளுக்கு மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் எந்த இடத்தில் யாருக்கு ச்ரார்த்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு ச்ரார்த்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்கு பணம் அனுப்பும் அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான "அக்ஷய வடத்தின்" படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் ச்ரார்த்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர் தங்களுடைய வேண்டுதலையும், பிரார்த்தனையையும் தெரிவித்தால் அதுநிறைவேற நீங்கள் விரும்பும் அமாவாசை தினத்தில் காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ. 1000, ரூ. 5000 அனுப்பும் அன்பர்களுக்கு கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பு, காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

ரூ.5000 - அனுப்பும் அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் அமாவாசை தினத்தில் காசியில் அன்னதானமும், கங்கையில் தீபமேற்றும் பணியும் செய்து ஆறு வருடங்கள் ஆன்மீகம் மாத இதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் மங்களம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ. 5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள **ஸ்ரீமத் பகவத்கீதை** புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

அன்னதான சேவையிலும், கங்கைக்கு தீபமேற்றும் பணியிலும் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடை யை Cheque / D. D/ M. O. மூலம் Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4 என்ற பெயருக்கு எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். கலியுகத்தில் அன்னதான சமுதாயப்பணி மகத்தான தெய்வீகப்பணியாக காசி திருத்தலத்தில் தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.


Cheque / D. D/ M. O. அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street,(Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

TEL : 2495 9302, Fax : 2461 6466. E-mail:siva siva @ vsnl.net



"காசியில் சாதுக்களுக்கு(சாது பண்டாரா) அன்னதானமிடுவது வாழ்வில் பெரும் புண்ணியத்தைக் கொடுக்கும் "

சென்னை அரசு மருத்துவமனையிலிருக்கிறார் க. சுப்பு.

"கண்டு விரல்ல வந்த வலி. கெண்டைக்கால் வரை எடுக்க வேண்டிய நிலைக்கு வந்திருச்சு. முதல்ல இதய நோய் காரணமாத்தான் மருத்துவமனைக்குப் போனேன். கால் கண்டுவிரல்ல சின்னதா வலி. அப்புறம் என்னன்னு பார்த்தா பாதம் முழுவதும் இரத்த ஓட்டம் திடீர்னு தடைப்பட்டுப் போச்சு. டாக்டர்கள் எவ்வளவோ போராடிப் பார்த்தாங்க. முடியலை. கடைசியில கெண்டைக்கால் வரை எடுத்தாதான் பிழைக்க முடியும்னு சொல்லிட்டாங்க. வேற வழியில்லாம சரின்னு சொல்லிட்டேன். எத்தனை மேடைகள்ல ஏறிய கால். என்னைக் காப்பாத்த. அதை இழந்துட்டேன் என்று கண் கலங்குகிறார்.

"முதல்ல அப்பல்லோ மருத்துவமனையில் முதல்வர் ஜெயலலிதா சொல்லித்தான் சேர்த்தாங்க. என்னோட பொருளாதார நிலைமையில அங்கெல்லாம் போக முடியாது. அவங்களோட நல்ல உள்ளத்தைப் பாராட்டாம இருக்க முடியலை" என்று சொல்லும் க. சுப்புவுக்கு எந்த தலைமையுடனும் முழுமையாக ஒத்துப் போகாதவர் என்ற பெயர் உண்டு. இதற்கு அத்தாட்சியாக அனைத்துக்கட்சிகளிலும் இருந்திருக்கிறார் இவர்.





"தலைமைக்குக் கட்டுப்படாதவன்னு சொல்ல முடியாது. ஒவ்வொரு கட்சியிலும் அநியாயங்கள் நடக்கும்போது, அதைப் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியலை. ஒவ்வொரு கட்சியில இருந்தும் ஏன் வந்தேன்?

"ஆரம்பத்துல நான் தொழிற்சங்க வாதி. விருதுநகர் காலேஜ்ல படிக்கும்போது தொடர்ந்து மூன்று வருடம், மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் கோல்டு மெடல் வாங்கியிருக்கேன். அப்போ என்னோட ஜூனியர்தான், சபாநாயகர் காளிமுத்து. அவரும் அப்பவே நல்ல பேச்சாளர். மாணவப் பருவத்துலயே கம்யூனிஸ்ட் கட்சியில சேர்ந்துட்டேன். பாலதண்டாயுதம், மோகன் குமாரமங்கலம், கல்யாணசுந்தரம், நல்லகண்ணு, சுந்தரம் போன்ற தலைவர்கள் எல்லாம் 'நல்லா பேசக்கூடிய இப்படியொரு ஆள் தேவை'ன்னு என்னை வளர்த்தாங்க. கட்சிப் பணிக்காக ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அனுப்பினாங்க. மக்களுக்கானப் பிரச்னைகளுக்கு ஓங்கிக் குரல் கொடுத்தபோது அந்தப் பகுதியில எனக்குன்னு ஒரு செல்வாக்கு வளர்ந்தது. 1971 பொதுத்தேர்தல் வந்தபோது ராஜபாளையம் தொகுதியில என்னை நிற்கச் சொன்னாங்க. திமுக கூட்டணி. என்னை எதிர்த்து காங்கிரஸ் சார்பா பஸ் முதலாளி ஸ்ரீரங்க ராஜா நின்னாரு. இவருக்கு தி.மு.கவுல இருந்த தென்னரசு, மாதவனெல்லாம் ரொம்பப் பழக்கம்.

இவரை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தொகுதியை ஒதுக்கினால் தோத்துருவாங்கன்னு நினைச்சு ஒதுக்கினாங்க. தி.மு.க கூட்டணி என்னை இப்படிப் பழி வாங்க நிறுத்தியிருக்குங்கறது அப்ப எனக்குத் தெரியலை. யாரும் எதிர்பாராத விதமா இந்தத் தேர்தல்ல நான் ஜெயிச்சேன். இதை எதிர்பார்க்காத கட்சியில் ஒரு சிலர், என் மேல விரோதம் காட்ட ஆரம்பிச்சாங்க. ராஜபாளையத்துல எம்.எல்.ஏவுக்கான



"நான் உயிர் பிழைக்க அம்மாதான் காரணம்!"

* க. சுப்பு

அலுவலகத்தைக் கூட திறக்க முடியலை. அவ்வளவு எதிர்ப்பு. இந்த நேரத்திலே தி.மு.க.வின் நல்ல செயல்பாடுகளை ஒரு பொதுக்கூட்டத்துலே பாராட்டினேன்னு சொல்லி என்னை ராஜினாமா செய்யச் சொன்னாங்க. ஓர் அரசின் நல்ல செயல்பாட்டைப் பாராட்டுறவன்தானே நல்ல அரசியல்வாதி? கம்யூனிஸ்ட் தலைவர்களான பாலதண்டாயுதம், கல்யாணசுந்தரம் போன்றவர்கள் எல்லாம் கோபப்பட்டாங்க. உடனேயே ராஜினாமாவை எழுதிக் கொடுத்திட்டு வக்கீல் தொழில் பார்க்க சென்னைக்கு வந்துட்டேன். ப. மாணிக்கம், 'மறுபடியும் கட்சிக்கு வா'ன்னு கூப்பிட்டாரு. இந்த நிலைமையில கம்யூனிஸ்ட் கட்சி உடைந்தது. மணலி கந்தசாமி தலைமையில் ஏ.கே. சுப்பையா, வடிவேலு, என். மருதாசலம் இவங்கள்லாம் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சின்னு ஆரம்பிச்சாங்க. இவங்களோட சேர எனக்கு மனசு வரலை.

இந்த நேரத்துல கலைஞர்கூட எனக்கு தொடர்பு ஏற்பட்டுச்சு. தி.மு.க.வுல சேர்ந்தேன். மிசா கால கட்டம். நான் எந்த தப்பும் பண்ணலை. தி.மு.க.வுல இருந்தேன்கறதாலயே என்னையும் ஜெயில்ல போட்டாங்க. ஒரு வருஷம் ஜெயில்ல இருந்தேன்.

இதுக்கு இடையில பி.என்.சி தொழிற்சங்கத் தலைவரானேன். மத்திய அரசு வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்துச்சு. இதைக் கடுமையா எதிர்த்தோம். பெரிய அளவுல போராட்டம் பண்ணினோம். 'தி.மு.கவில் இருந்துகிட்டு இப்படிப் பண்ணுறியே; மத்திய அரசு எங்களைக் கேட்கறாங்க'ன்னு ஆட்சியிலிருந்த தி.மு.க என்னைக் கேட்டது. இது பொதுவான பிரச்னை. அடிப்படையில் நான் ஒரு தொழிற்சங்கவாதி. அதனால எதிர்த்தேன்னு சொன்னேன்.

1977ல் தேர்தல் வந்தது. வில்லிவாக்கம் தொகுதியில் வேட்பாளரா நிற்க, கட்சிக்குள்ளேயே போட்டி. நான் தற்செயலா கட்சி அலுவலகம் போனா, 'நீங்க ஏன் சண்டை போடறீங்க. பேசாம சுப்புக்குக் கொடுத்திடலாம்'னு கலைஞர் சொன்னார். அந்தத் தொகுதியில போட்டிப் போடணும்னு சொன்னாங்க. சரின்னுட்டேன். அந்தத் தேர்தல்ல ஜெயிச்சேன். ஜெயிச்ச பிறகு தான் கட்சிக்குள்ள பொறாமை வளர்ந்தது. சட்டசபையில், பொதுக்கூட்ட மேடையில் எனக்கு நல்ல பெயர் கிடைச்சது. இதைத் தாங்காத சிலர், 'அவர் ஒரு கம்யூனிஸ்ட். அவரை ஏன் நாம வளர்க்கணும்?'னு கட்சிக்குள்ள கேட்க ஆரம்பிச்சாங்க.

அடுத்த தேர்தல் வந்தபோது கட்சியின் தலைமைக்கும் எனக்கும் எதிர்ப்பு. வில்லிவாக்கம் தொகுதியைத் திரும்பவும்

தந்தாங்க. கட்சித் தலைமையிலிருந்த ஒரு சிலர் என்னைத் தோற்கடிக்கணும்னு எதிரா வேலை செஞ்சாங்க. நான் தோற்றேன். மனசுல வலியோட கட்சியில இருந்தேன். தி.மு.க தொழிற்சங்கப் பொதுச்செயலாளரா என்னை நியமிச்சாங்க. ஒரு பெரிய மாநாட்டையும் ஊர்வலத்தையும் நடத்திக் காண்பிச்சேன். இந்த மாநாட்டுக்கு ஏ.ஐ.டி.யு.சியின் தலைவரா இருந்த எஸ்.ஏ. டாங்கேயின் மகள் ரோஷா தேஷ்பாண்டேயைக் அழைத்து வந்தேன்.

இந்த மாநாட்டுக்குப் பிறகு கட்சிக்குள்ள பொறாமை அதிகமாகிவிட்டது.

அப்புறம் நான் தொழிற்சங்கவாதிங்கறதால 'செக்'ல நடந்த உலக சமாதான மாநாட்டுக்கு என்னை அழைத்திருந்தாங்க. நான் துரைமுருகன், புருஷோத்தமன், சி.பி. தண்டபாணி எல்லோரும் போய்ட்டு வந்தோம். வந்தபிறகு கட்சியில இருந்து என்னை வெளியேறச் சொன்னாங்க. ஏன் எதுக்குன்னு தெரியலை? இவ்வளவு சொன்ன பிறகு அங்கென்ன வேலைன்னு வந்துட்டேன்.

ஒரு விழாவுக்காக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆரைச் சந்திக்கப் போனேன். தி.மு.கவிலயிருந்து ஏன் வந்தேன்னு கேட்டார். சொன்னேன். எங்கூட வந்துருன்னு சொன்னார். நான் ஆடிப் போய்ட்டேன். எம்.ஜி.ஆரை அதிகமா விமர்சிச்சவன் நான்தான். அப்படி விமர்சிச்சவனை இவ்வளவு அன்போட அழைக்கிறாரேன்னு சேர்ந்தேன். என்னை ரொம்ப நல்லா வச்சிருந்தார் எம்.ஜி.ஆர். அங்கேயும் தொழிற்சங்கச் செயலாளராக என்னை நியமித்தார். அமெரிக்க மருத்துவமனையில் அவர் இருந்தபோது அப்போ நடந்த தேர்தலில் புரசைவாக்கம் தொகுதியில என்னை வேட்பாளராக நிறுத்தினார். அந்தத் தேர்தல்ல நான் தோற்றேன். அதுக்குப் பிறகு கட்சியின் துணைப் பொதுச்செயலாளராக நியமிச்சார். அவருக்குப் பிறகு கட்சி உடைஞ்சுது. எந்த அணியுடனும் இருக்கப் பிடிக்கலை.

இந்த நேரத்துல மூப்பனார் அழைத்தார். காங்கிரஸில் சேர்ந்தேன். அ.இ.மு.க கூட்டணியை எதிர்த்து காங்கிரஸ் உடைஞ்சுது. மூப்பனாருடன் த.மா.கா.வுக்குப் போனேன். த.மா.காவுக்குக் கொள்கை பரப்புச் செயலாளரா வலம்புரிஜான், ஹக்கீம் இவங்களோட என்னையும் நியமிச்சார். 'கட்சிக்கு இன்னும் கொள்கையே வகுக்கலை. அதுக்குள்ள ஏன் மூன்று கொள்கை பரப்புச் செயலாளர்?'னு கேட்டேன். இப்படிக் கேட்டதால கோபம். வெளிய வந்துட்டேன்.

அரசியலே வேண்டாம்னு இருந்த என்னை, திரும்பவும் தி.மு.க.வுக்குக் கூப்பிட்டாங்க. தங்கபாண்டியன் இறப்புக்குப் பிறகு அருப்புக்கோட்டை தொகுதிக்கு இடைத்தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தல்ல தங்கம் தென்னரசுவை ஆதரிக்கப் பேச, அந்தப் பகுதியில செல்வாக்கான ஆள் வேணுங்கறதால தான் என்னைக் கூப்பிட்டிருக்காங்கன்னு அப்புறம் புரிஞ்சுது. என்னைப் பயன்படுத்திட்டு கண்டுக்காம விட்டுட்டாங்க.

"மனசொடிஞ்சு போய் அ.இ.மு.க.வுல சேர முதல்வர் ஜெயலலிதாவுக்குக் கடிதம் அனுப்பினேன். என் கடிதத்தை ஏற்று அ.இ.மு.கவுல சேர்த்தாங்க. இப்ப நான் உயிர் பிழைச்சிருக்கறதுக்கும், பொது வாழ்க்கையில நீடிப்பதற்கும் அம்மாதான் காரணம்!

- ஏக்நாத்

படங்கள்: ஸ்ரீஹரி



"எதுக்கு காதுல பஞ்சு வெச்சுகிட்டு ஆபீசுக்குப் போறீங்க?"

"அவனவன் விடுற குறட்டையில என்னால சரியா தூங்கவே முடியலை!"

- புதுப்பட்டி ஜி.ஆர்.விஜய்

பஞ்ச துவாரகா யாத்ரா



GUJARAT  **TOURISM**

GUJARAT TOURISM

(A Govt. of Gujarat Undertaking)

Tourism Complex, Wallajah Road, Chennai - 600 002.

Tel No. 25366613 Res : 24794159 E-mail : gujarattourism@vsnl.net

12 நாள் கொண்ட புனித யாத்ராவில் பார்க்கும் புண்ணிய தலங்கள் - தாகோர் துவாரகா, துவாரகா, பெய்ட்துவாரகா, கங்கரோலி, ஸ்ரீநாத் துவாரகா , சோம்நாத், நாகேஸ்வர் , ஜோதிர்லிங்கங்கள், ராஜ்கோட், போர்பந்தர், உதயப்பூர் மற்றும் இதர இடங்கள். ஒரு நபருக்கு ஆகும் செலவு ரூ.6995/- (NAC டிரான்ஸ்போர்ட்) ரூ.7500/- (AC டிரான்ஸ்போர்ட்). (இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணம், சைவஉணவு, தங்கும் அறை வசதி, கைடு சர்வீஸ் மற்றும் சிறப்பு வழிபாடு வசதிகள் உட்பட)

சென்னையிலிருந்து யாத்ரா புறப்படும் தேதிகள் : 13.08.03, 6.10.03, 12.11.03

சென்னை - அகமதாபாத் மற்றும் திரும்புதல் நவஜீவன் எக்ஸ்பிரஸ் மூலம். அகமதாபாத் மற்றும் இதர இடங்கள் சுற்றிப் பார்க்க - குஜராத் சுற்றுலாத்துறை சொகுசு பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதர விவரங்களுக்கு Deputy Manager (Marketing) -ஐ மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

Amar Tours, Salem : Ph.2416647 or Cell : 9842713222 ★ Sree Sudha Travels, Bangalore : Ph.6529289



S.V.முதியோர் இல்லம்



Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED


Charitable Trust (Reg)

50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)
Arumbakkam, Chennai - 600 106 Tel. Off: 2475 5700, 2475 1356.
E-mail:svhome@vsnl.net

அபூர்வமாக நான்கு சொட்டுத் தூறல் விழுந்து மண் கிளர்ச்சியுற்றிருந்தது. நிகர் சொல்ல முடியாத அந்த வாசனையின் முழுமையைக் கைப்பற்ற, வீதிக்கு வந்து நின்றான் ஜக்கு. ஆச்சர்யம்தான். எத்தனையோ அபூர்வமான வாசனைகள் இருக்கின்றன. கற்பூரவல்லியின் சுகந்தம், பழனி சித்தனாதன் விபூதியின் வாசனை. ஸ்கூட்டருக்கு அப்பா போடுகிற அன்லெடட் பெட்ரோலின் வாசனை.

ஆனால், எதுவுமே இந்த மண்வாசனைக்கு நிகரில்லை. நிச்சயம் இல்லை என்று ஜக்கு நினைத்துக் கொண்டான். மூடி மூடி வைத்துக் கொள்கிற வரைக்கும்தான் அபூர்வங்கள் அபூர்வமாகவே இருக்கும் போலிருக்கிறது. அப்பாவின் டைரி மாதிரி.

கனவில் அவரது கால்கள் நீண்டு கொண்டே போய் பதினொன்றரை அடி உயரத்துக்கு ஆகி விட்டது.



ஜக்குவுக்கு ஒரு டைரியில் என்னென்ன விஷயங்கள் எழுதப்படும் என்று அதற்கு முன்பு தெரிந்திருக்கவில்லை. அவனது வகுப்பு டீச்சர் அழகான, பெரியதொரு டைரியை தினமும் கொண்டு வருவாள். பல நாட்களில் அதை ஸ்டாஃப் ரூமில் வைத்துவிட்டு வகுப்புக்கு வந்து, மாணவர்களைப் போய் எடுத்துவரச் சொல்லுவாள். நிறையப் பேப்பர்களும் மளிகைக்கடை, மருந்துக் கடை பில்களும் அடைக்கப்பட்டு, புடைத்துக் கொண்டிருக்கும் டைரி. வெறும் கணக்குகளாலான அதன் பக்கங்கள்.

ஒரு பள்ளிப்பாட நோட்டுகளோ புத்தகங்களோ டைரி அளவுக்கு ஏன் அழகாக இருப்பதில்லை? அவை அத்தனை முக்கியமில்லையா? அல்லது டைரியில் எழுதப்பட வேண்டிய அத்தனை முக்கியமான விஷயங்கள்தான் என்ன?

பா.ராகவன்


ஜக்கு வெகு நாட்கள் இதை யோசித்து வந்திருக்கிறான். உதாரணம் காட்டக்கூடிய டைரிக்குறிப்புகள் என்று ஏதாவது உண்டா?

மெல்லினம் 4

கணக்கு வழக்குகள் எழுதவும், கோலம் போட்டுப் பார்க்கவும், கேட்டு ரசித்தப் பாடல்களை எழுதி வைக்கவுமா டைரிகள்? அதன் தோற்றத்துக்கும் வடிவத்துக்கும் வனப்புக்கும் வேறு ஏதாவது நோக்கம் இருக்கக்கூடும் என்று அவனுக்குப் படும். அந்த நோக்கம்தான் என்ன?

அவன் தெரிந்து கொள்ள மிகவும் விரும்பினான். அவனது அப்பா டைரி எழுதுபவராக இருந்திருக்கிறார் என்பதே அவனுக்கு அன்றுதான் தெரிய வந்தது. பரணைச் சுத்தம் செய்ய நேர்ந்து அகப்பட்ட அவரது மிகப் பழங்காலத்து டைரியைப் பார்த்தபோது, அடடே என்று மனத்துக்குள் வியந்தான்.

அவன் புரட்டத் தொடங்கிய அப்பாவின் டைரியில் முதலில் மிகச் சாதாரணமான நிகழ்வுகள்தான் பதிவாகியிருந்தன. பஸ் பிரேக் டவுனாகி அலுவலகத்துக்கு அவர் தாமதமாகப் போக நேர்ந்திருக்கிறது. மதியத்துக்கென்று எடுத்துச் சென்ற தயிர் சாதம் புளித்துவிட்டது. பிறந்தநாள் சட்டையை அலுவலகத்தில் நியூஸ் எடிட்டர் மிகவும் பாராட்டியிருக்கிறார்.



டைரியைப் படிக்கலாமா கூடாதா என்கிற கேள்வி அவனுக்குள் இருந்தாலும் படிக்கத் தொடங்கியதும் அக் கேள்விக்கு அர்த்தமேதுமில்லை என்கிற தீர்மானம் வந்துவிட்டது. அடடே, அப்பாவும் டைரியின் அழகான பகங்களை கௌரவிக்கத் தெரியாதவராகத்தான் இருந்திருக்கிறார். ஒரு வேளை அதை அவரே உணர்ந்துதான் பிறகு எழுதுவதை நிறுத்திவிட்டாரோ என்னவோ.

அவன் வருஷம் பார்த்தான். அவன் பிறப்பதற்கு இரண்டு வருடங்கள் முந்தைய டைரி அது. எழுதாமல் விடப்பட்ட தாள்கள் எதுவும் இருந்தால் கிழித்து எடுத்துப் படம் வரைந்து பார்க்கலாம் என்று புரட்டினான். இன்னுமொரு பக்கம் அவனை நிறுத்திப் படிக்கச் சொன்னது. படிக்கப் படிக்க, அவன் முகம் விரிந்தது. புன்னகையின் இயல்பான மொட்டவிழ்தல். உம். இது விஷயம். பரவாயில்லை. எழுதி வைக்கக் கொஞ்சம் தகுதி வாய்ந்

ததுதான்.

அன்று அப்பா வினோதமான கனவொன்றைக் கண்டிருக்கிறார். கனவில் அவரது கால்கள் நீண்டுகொண்டே போய் பதினொன்றரை அடி உயரத்துக்கு ஆகிவிட்டது. கால்கள் மட்டும் பதினொன்றரை அடி. அதற்குமேல் உடம்பு, தலை, மொத்தமாக அவர் பதினைந்தடி உயரத்தில் இருந்திருக்கிறார். உட்கார்ந்து அரிசி உப்புமா சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது இப்படியாகிவிட்டது. சமையலறையிலிருந்து கையில் குழம்புப் பாத்திரத்துடன் வந்துகொண்டிருந்த பாட்டி இதை கவனித்துவிட்டு, "என்னடா குமார்? கூரையைத் தொட்டுண்டிருக்கே? இறங்கி வா. எப்படிச் சாப்பிடுவே?" என்று கேட்டாள்.

அப்போதுதான் அப்பா அதைக் கவனித்தார். கால் பதினொன்றரை அடியும் உடம்பும் தலையும் சேர்ந்து மொத்தமாகப் பதினைந்தடியும் வளர்ந்திருந்தாலும், கைகள் மட்டும் பழையபடிதான் இருக்கின்றன.

அடக்கடவுளே! பதினாலடி உயரத்திலிருந்து இரண்டடி மட்டுமே தொங்கும் கையைக் கொண்டு, மொத்தம் பதினைந்தடி தொலைவில் தரையில் இருக்கும் தட்டிலிருந்து எப்படி நான் அரிசி உப்புமாவை எடுத்துச் சாப்பிடுவேன்?

"ஐயோ, அம்மா, எனக்குக் கை எட்டலையே!" அப்பாவுக்கும் கண்கள் நிறைந்துவிட்டன.

"என்ன பண்றது? இப்படி வளர்ந்துட்டியே, பேசாம படுத்துண்டு சாப்பிடு" என்று பாட்டி சொன்னாள்.

அப்பா படுக்க முனைந்தபோது அறையின் இரு எல்லைச் சுவரும் இடித்தது. சாப்பிடத் தோதுப்படவில்லை.

"என்னடா இது? உனக்குப் பிடிக்குமேன்னு மணல் மணலா அரிசி உப்புமா பண்ணி வெச்சிருக்கேன். இப்படி சாப்பிட முடியாம ஆயிடுத்தே" துளி பதற்றமும் இல்லாமல் பாட்டி ஒரு டாகுமெண்டரி படத்தின் வருணனையாளர் தொனியில் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"சரி, போ, நாங்க சாப்பிடறோம்" என்று பாட்டியும் தாத்தாவும் உட்கார்ந்து அரிசி உப்புமா சாப்பிடத் தொடங்கியதும் அப்பா அப்படியே தவழ்ந்து வீட்டை விட்டு வெளியேறி எழுந்து நின்றார். வாசலில் காம்பவுண்டு சுவரைக்காட்டிலும் அவர் அப்போது உயரமாயிருந்தார். கடவுளே, நான் எப்படி இன்று ஆபீஸ் போவேன்? மெரினா கடற்கரையில் மாலை பொதுக் கூட்டம் இருக்கிறது. பிரதமர் வருகிறார். மாநில முதல்வர் வருகிறார். மிக முக்கியமான கூட்டம். சட்டம் ஒழுங்குப் பிரச்னை தீவிரமாயிருக்கிற காலம். ஏதும் அசம்பாவிதம் நடக்கலாம் என்று உளவுத்துறை ரகசியத்தகவல் வேறு அளித்திருக்கிறது. அசம்பாவிதம் நடக்காதிருந்தால் நாட்டுக்கு நல்லது. நடந்தால் பத்திரிகைகளுக்கு முக்கியச் செய்தி. நிறைய பிரதிகள் விற்கும்.

ஆனால் பதினைந்தடி உயர நிருபரை எப்படி காவல்துறையினர் கூட்டத்துக்கு அனுமதிப்பார்கள்?

கவலையுடன் அவர் அலுவலகத்துக்கு நடக்க ஆரம்பித்தார்.

ஜக்குவுக்கு டைரியின் இந்தப் பக்கம் மிகுந்த மனக்கிளர்ச்சியை உண்டு பண்ணியது. ஒரு கனவு. எத்தனை வினோதமானது! சட்டென்று ஒரு மனிதன் அத்தனை உசரம் கொண்டவனாக ஆகிவிட முடிந்தால் உண்மையில் எப்படி இருக்கும்? மிகவும் குள்ளமான மனிதர்களைப் பற்றி அவன் படித்திருந்த கதைகள் ஞாபகத்துக்கு வந்தன.

தாத்தாகூட கட்டை விரல் கவியபெருமாள் என்றொரு கதை சொல்லுவார்.

தாத்தா சொன்ன கதைகள் அனைத்துமே கனவுகளிலிருந்து எடுத்ததாகத்தான் இருக்கும் என்று நினைப்பான் ஜக்கு. அப்பா பதினைந்தடி உயரத்துக்கு வளர்ந்த கனவைக்கூட, ஒரு கதையாக மாற்றிவிட முடியுமே.

அவனுக்கு அந்த டைரியைப் படிப்பதில் சுவாரசியம் உண்டாகிவிட்டது. முழுக்கப் படிக்க வேண்டும் என்று நினைத்துக்



"அது ஸ்டார் ஹோட்டல்னு தெரியாம காப்பி சாப்பிட்டு நூறு ரூபா கொடுத்தேன்..."

"எவ்ளோ பாக்கி தந்தான்?"

"பாக்கியாவது ஒண்ணாவது. டிப்ஸ் அப்புறம் தரலாம். முதல்ல காப்பிக்கான காசைக் கொடுன்னு பில்லை நீட்டினான்!"

- ஆர். ரகோத்தமன்

கொண்டான்.

வாசலில் நிழலாடியது. குட்டிதான்.

"வா" என்று மலர்ந்து கூப்பிட்டான் ஜக்கு. அவனது சிறிய தோட்டத்தின் நடுவே கூடை நாற்காலியைப் போட்டு அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான்.

"நீ என்ன பண்ணிட்டிருக்கே? பாடமா படிக்கறே?" என்று கேட்டாள் குட்டி.

"உஷ்!" என்றான் ஜக்கு. "பாடம் இல்லே. இது எங்கப்பாவோட டைரி."

"என்ன எழுதியிருக்கார்?"

"படிச்சிண்டிருக்கேன். வெரி இன்டரஸ்டிங்!"

"இப்படி உக்காந்து படிக்கறியே. பார்த்தா திட்டமாட்டார்?"

"ச்சு. அப்பா, அம்மா, தாத்தா, பாட்டியெல்லாம் தூங்கறா. சண்டே ஸ்பெஷல்!" அவன் புன்னகை செய்தான்.

"நீ தூங்கலையா?"

"ம்ஹூம். தூக்கம் வரலை. குட்டி, உனக்கொரு கதை சொல்லட்டுமா? கதை இல்லை. நிஜமா நடந்த விஷயம்?"

"சொல்லு, சொல்லு" ஆர்வமுடன் அவனருகே வந்து செம்மண்ணில் உட்கார்ந்து கொண்டாள் குட்டி. ஒரு தாமரை பூத்தது மாதிரி அவளது பாவாடை அவளைச் சுற்றி புஸ்ஸென்று பூத்து நின்றது.

"நேத்து ராத்திரி ஒரு அதிசயம் நடந்தது. நீ யார்க்கிட்டயும் சொல்ல மாட்டேன்னா, சொல்றேன்."

"ப்ராமிஸா சொல்ல மாட்டேண்டா. சொல்லு" என்றாள் குட்டி. அவளுக்கும் அந்தப் பரபரப்பு தொற்றிக் கொண்டது. ஆனால் இந்த அதிசயங்களில் எது ஒன்றும் ஏன் தனக்கு நடக்க மாட்டேனென்கிறது? எல்லாமே ஜக்குவுக்கு மட்டுமே நடக்கிறது. அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவே தினசரி காட்சி அளிக்கிறான்.

"உம்! சொல்லுடா" அவசரமாகக் கேட்டாள் குட்டி.

"சொல்றேன். ஆனா யார்கிட்டயும் சொல்லிடாதே. அப்புறம் மேதமேடிக்ஸ்ல மார்க் குறைஞ்சுடும். ஓகே?"

"உம், சரி. சொல்லு."

நேத்து ராத்திரி தூங்கிண்டே இருந்தேனா? திடீர்னு ஒரு வெளிச்சம். கண் முழிச்சிப் பார்த்தா ஒரு ஏஞ்சல் என் எதிர்ல இருக்கா. மெதுவா என் காலைப் பிடிச்சி அமுக்கி விட்டுண்டிருக்கா. இதுல என்ன விஷயம்னா, அவ தொடும்போதெல்லாம் என் கால் நீண்டுண்டே போச்சு.



"எப்படிய்யா? விடைத்தாளைப் படித்த உடனே இதை எழுதினது சரக்கு மாஸ்டர் பையன்தான்னு கண்டுபிடிச்சே?"

" 'நெடுநல்வாடை' அப்படிங்கிற பதிலுக்கு 'நெடுநாள்வடை'ன்னு எழுதியிருக்கான்!"

- நா. ஹரிகிருஷ்ணன்

அட்லீஸ்ட் ஒரு ஃபிஃப்டீன் ஃபீட்டாவது பெரிசாயிருக்கும்."

"ஐயோ!"

"மிச்சத்தையும் கேளு! ரொம்ப பெரியவனாயிட்டேன். நின்ன இடத்துலேயிருந்தே எனக்கு பத்து கிலோமீட்டர் தூரம் வரைக்கும் தெரிய ஆரம்பிச்சுடுத்து. டென் மினிட்ஸ்ல இந்த ஊரையே ஒரு ரவுண்டு சுத்திட்டு வந்தேன்."

"ஆர்யு ஷ்யூர்?" என்று கத்தினாள் குட்டி.

"ஆமாடி. எனக்கே நம்ப முடியலை. ஜஸ்ட் ஒரு ஹாஃபனவர் இருக்கும். அப்புறம் பயமாயிடுத்து. அந்த தேவதையை மறுபடியும் கூப்பிட்டு, பழையபடியே மாத்திடுன்னு கேட்டேன்."

"நிஜமாவா?"

"ஆமா, ஆமா! அவளும் மறுபடி பழைய படியே மாத்திட்டா. ஆனா நான் எப்ப நினைச்சாலும் அவ்ளோ பெரியவனா ஆயிட முடியும்னு ஒரு சக்தியைக் குடுத்துட்டுப் போயிட்டா."

குட்டிக்குப் பேச்சற்றுப் போனது. கண்கள் இமைக்காமல் அவனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

"எப்போ நினைச்சாலும் உன்னால ஃபிஃப்டீன் ஃபீட்டுக்கு உயரமா ஆக முடியுமா?"

"ஆமா. முடியும். இன்னிக்கு நைட் பன்னெண்டு மணிக்கு நீ முழிச்சிண்டிரு. உங்க வீட்டுல. நான் ஃபிஃப்டீன் ஃபீட் ஜக்குவா வரேன் பார்!"

"அம்மாடி!" என்று கன்னத்தில் கை வைத்துக் கொண்டாள் குட்டி. இரவுக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

(தொடரும்)

பிட்ஸ் பஜார்!




சீனாவைச் சேர்ந்த வீ செங்கூ என்ற அக்குபங்சர் டாக்டர், தலை முழுவதும் ஆயிரம் ஊசிகளைக் குத்திக் கொண்டு விளம்பரம் தேடிக் கொள்கிறார்.



இந்த சர்தார்ஜியின் முண்டாசு எடை நாற்பது கிலோ. ஒரு சாதனைக்காக இத்தனைக் கிலோ முண்டாசை தலையில் சுமக்கிறாராம்.

வில்லவன் கோதை


வேற்றுக் கிரகவாசியோ, கிராஃபிக் படமோ அல்ல. ஒரு கண்காட்சியில் இப்படி அலங்காரம் செய்துக் கொண்டு எல்லோரையும் பயமுறுத்த, ஆடிப் போய் விட்டார்களாம்!



இது என்ன இவ்வளவு குழப்பமான சிக்னலா இருக்கே? என்று குழம்பாதீர்கள். வெறும் சிலைதான். இலண்டனில் சும்மா வைச்சிருக்காங்க!



'இது' சாட்டிலைட்டிலிருந்து எடுக்கப்பட்ட பூமியின் போட்டோ என்று ஏமாந்து விடாதீர்கள். இது துபாயில், கடலில் மனிதனால் உருவாக்கப் படும் உலக தோற்றத்திலான தீவுகள்.



தினந்தோறும் வாங்குவது போல அன்றும் வாங்கிக் கட்டிக் கொண்டான் தினேஷ். தன் மனைவியிடம் ஃபோன்பில் எக்கச்சக்கமாக எகிறுகிறதே, கொஞ்சம் ஃபோன் கால்களைக் குறைத்துக் கொள்ளலாமே, என்று இவன் அட்வைஸ் செய்யப்போக பிடிபிடி என்று பிடித்துக் கொண்டாள் அவன் மனைவி.

"ஏன் நான் ஃபோன் பண்ணும்போது தான் உங்களுக்குப் பெரிசா தெரியறதாக்கும். நேத்து நீங்க உங்க அம்மாவுக்குப் பேசலே... போன மாசம் நாலாம் தேதி உங்க அண்ணாகிட்டே ஆறு நிமிஷம் ஓயாமேப் பேசினீங்களே, அது மட்டும் எந்தக் கணக்குலே சேருமாம்...? எங்க அப்பா காஞ்சிபுரத்திலிருந்து தினமும் பண்றார். நீங்க கேட்டுண்டு தானே இருக்கீங்க...? அது என்ன, நான் பண்ணினா மட்டும் உங்களுக்குப் பொறுக்க மாட்டேங்குது..." மனைவியின் தாக்குதலைச் சமாளிக்க தினேஷ் இடைமறித்தான்.

"மீனா... உங்க அப்பா பைத்தியக்காரத்தனமாகப் பண்றார்னா, நீயும் பண்ணணுமா என்ன? அவர் ரிடையர் ஆயிட்டு, பொழுது போகாமே தவிக்கறார். பென்ஷன் பணத்தையெல்லாம் ஃபோன் பில்லாக் கட்டினாக் கூட அவரைப் பாதிக்காது. அப்படி ஒரு சொத்து சேர்த்து வைச்சிருக்கார். அவர் தினமும் ஃபோன் பண்றார்னு நீயும் இப்படிப் பண்ணினா கட்டுப்படி ஆகுமா? யோசனை பண்ணு."

தினேஷின் சமாதானம் எடுபடவில்லை.

"இதிலென்ன பைத்தியக்காரத்தனம் இருக்கு... நான் என்ன தினம் புடைவை, நகைன்னு உங்களை நச்சரிக்கிறேனா என்ன... அல்பம் ஃபோன் பண்றதுக்கு இத்தனை பேச்சு கேட்க வேண்டியிருக்கு... எல்லாம் என் தலையெழுத்து" என்று திடுதிப்பென்று ஒரு ரெடிமேட் விசும்பலுடன் மூக்கைச் சிந்திக் கொண்டு, பொலபொலவென கண்ணீர் வடிக்க ஆரம்பித்து விட்டாள்.

தினேஷுக்குத் தாங்கவில்லை. "சரி அழாதே! டெலிஃபோன் பில் ஆயிரம் ரெண்டாயிரம்னு ஏறிட்டுப் போறதேன்னு சொன்னேன்... நீயும் கொஞ்சம் குறைச்சுக்கப் பழகிக்கோ..."

"இதை முதல்லேயே சொல்லித் தொலைச்சா குறைஞ்சா போயிருப்பீங்க?" என்று சிணுங்கிக் கொண்டே உற்சாகமாக தினேஷின் மனைவி டயல் செய்தாள்.

"ஹலோ..."

"ஹலோ சொல்லுங்க... யார் பேசறது?"

"நான் தாங்க மாங்காடு மீனா பேசறேன்."



"ஓ 'மாங்காடு மீனா'வா... கடுகு எஃப்.எம். காலைக்கடன் நிகழ்ச்சியோட முதல் நேயர் நீங்க தாங்க... நேத்து 'இம்சை இரவு' நிகழ்ச்சியின் கடைசி நேயரும் நீங்கதாங்க... சரி, என்ன பாட்டு போடணும் சொல்லுங்க..."


"களிமண் வாசனை படத்திலிருந்து 'மண்ணாங்கட்டியே என் மனதைத் தொட்டாயே' பாடலைப் போடுங்க... எங்க அப்பா, அதான் உங்க நேயர் காஞ்சிபுரம் கனகசபைக்கு அதை டெடிகேட் பண்றேன்... ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருக்குங்க..."

ஃபோன் பில்லால் சந்தோஷத்தை இழந்திருந்த தினேஷ் தலையில் அடித்துக் கொண்டான்.○

அகிலா கார்த்திகேயன்




மேஷம் : உடல் ஆரோக்கியம், தெய்வ பலம் இருக்கும் போது உற்சாகமான மன நிலைக்குக் கேட்கவா வேண்டும்! எதிர்பாராத பயணம் அமைந்தால் சந்தோஷப் படுங்கள். அந்தப் பயணத்தால் உங்களுக்குச் சாதகமான அனுகூலம் உண்டாகும். தற்போது இருக்கும் பணியில் சிக்கல்கள் ஏற்பட்டாலும் உடனுக்குடன் பிரச்னை தீரும். மாணவர்களுக்கு மிகவும் சாதகமான வாரம்.



ரிஷபம் : உங்கள் தேவைக்கு ஏற்ப பண வசதி, துணிவு, தன் நம்பிக்கை, பயணங்களில் அனுகூலம் ஆகியவை வந்தடையும். இதுவரை இருந்து வந்த எதிர்ப்புகள் காணாமல் போகும். ஏழரை ஆண்டு சனி இரண்டாவது சுற்று நடைமுறையில் உள்ளவர்களுக்கு இது ஒரு பிரகாசமான வாரம். பதவி உயர்வு, இடமாற்றம் வரும். புதிய உத்தியோக முயற்சி வெற்றி தரும்.




மிதுனம் : சுயதொழில், வியாபாரத்தில் குரு 2ல் தனஸ்தானத்தில் இருப்பதால் முன்னேற்றமான சூழ்நிலை நிலவும். பழைய கடன் பாக்கிகள் படிப்படியாகக் குறையும். புதிய தொழில் முயற்சி வெற்றிதரும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது.




கடகம் : எடுத்த காரியத்தைத் திட்டமிட்டபடி செயல்படுத்தி வெற்றிகரமாக முடிப்பீர்கள். இதனால் உயர் அதிகாரிகள், சக ஊழியர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். கணவன் - மனைவி உறவு நிலை சீராக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். கைவிட்டுப் போன பொருள், சொத்து விவகாரங்களில் எதிர்பாராத அனுகூலம் கிடைக்கும்.

நடக்குமென்பார்; நடக்கும்!



பாடலாசிரியர் யுகபாரதிக்கு (மேஷம்) எதிர்பாராத பயணம் இருக்காமே!



சிம்மம் : இதுவரை தாமதமாகிவந்த காரியங்கள் மளமளவென்று நிறைவேறும். எல்லா விஷயங்களிலும் சுதந்திரமாகச் செயல்படுவீர்கள். எந்தத் தொழில் செய்து கொண்டிருந்தாலும் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பொன், வெள்ளி, நவ ரத்தினம், ஆபரணம் ஆகிய இனங்கள் அதிக லாபம், நன்மை தரும். குல தெய்வ பிரார்த்தனை நிறைவேறும்.



கன்னி : தெளிவான சிந்தனையும் தாராளமான பண நடமாட்டமும் உங்களைச் சந்தோஷத்தில் வைத்திருக்கும். வேலை விஷயமாக வெளிநாடு போகக் கூடிய வாய்ப்பு உண்டாகும். ஏற்றுமதி - இறக்குமதி தொழில்கள், ரியல் எஸ்டேட் பிஸினஸ் ஆகியவை நல்ல லாபத்தைத் தரும். சிலர் புதிய வீடு வாங்கவோ கட்டவோ செய்வார்கள். நண்பர்கள், உறவினர்கள் உதவுவார்கள். பெண்

களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.



துலாம் : சட்டம், காவல், இராணுவம் ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அமோகமான வாரம். கோர்ட் வழக்குகளில் வெற்றி உங்களுக்கே. இதுவரை தாமதமடைந்து வந்த திருமணம் உடனடியாக நடக்கும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வார்கள். மாணவர்களுக்கு மிகவும் சாதகமான வாரம். பாங்க், நிதி நிறுவனங்களிலிருந்து எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.



விருச்சிகம் : உத்தியோகத்தில் எதிர்பாராத சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் உடன் நிவாரணம் கிடைக்கும். எதிரிகளால் பிரச்னைகள் ஏற்பட்டாலும் குருவின் பலத்தால் சாதுர்யமாகச் சமாளித்து வெற்றியும் அடைவீர்கள். புதிய பொறுப்பு வந்து சேரும். பெண்கள் நினைத்த காரியங்கள் சுலபமாக நிறைவேறும். புதிய பொருள் சேர்க்கை, உல்லாச பயணம் போன்றவை அமைவதால்




கும்பம் : இந்த ராசிக்காரர்களுக்கு சரளமான பண வசதியும், பயணங்களில் அனுகூலமும் ஏற்படும். புதியவர்கள் அறிமுகம் கிடைக்கும். அலுவலக வேலை நிமித்தம் வெளியூர், வெளிநாடுகளுக்குச் செல்லக் கூடிய வாய்ப்பு ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள் மிகவும் அனுசரணையாக நடந்து கொள்வார்கள். கொடுக்கல், வாங்கல் விவகாரங்கள் தக்க சமயத்தில் கை கொடுக்கும்.

மீனம் : சுய தொழில் வியாபாரத்தில் எல்லா வகையிலும் முன்னேற்றம் ஏற்


ஜூலை 16 முதல் 22 வரை

அக்னிசர்மா பக்கம்

சந்தோஷமான மனநிலை உண்டாகும்.




தனுசு : மருத்துவம், கெமிக்கல்ஸ், உலோக வகைகள், தோல் பொருட்கள் சம்பந்தமான தொழில்கள் வேகமாக முன்னேறும். கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்குப் பெயர், புகழ், பணம் கொட்டும். பூர்வீக சொத்து விவகாரங்களில் உங்கள் எண்ணம் நிறைவேறும். மக்கள் நலம் சீராக இருக்கும். பெண்களுக்குத் தெளிவான மனநிலை உண்டாகும்.



மகரம் : எதிர்ப்புகள் மறையும், எதிரிகள் அடங்கிப் போவார்கள். எடுத்த காரியத்தில் ஜெயம் நிச்சயம். உங்கள் வாழ்க்கையில் அதிர்ஷ்டமான திருப்பம் ஏற்படப் போகும் வாரம் இது. புதிய தொழில்கள் துவங்க ஏற்ற வாரம். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் கூடி வரும். திருமணம் ஆனவர்களுக்குக் குழந்தை பாக்கியம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.

படும். வரவேண்டிய பணம் வந்து சேரும். கடன் தொல்லைகள் நீங்கும். மக்களால் மகிழ்ச்சி உண்டாகும். வெளிநாட்டிலிருந்து மகனோ, மகளோ வருகை புரிவார்கள். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வார்கள். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம். சகல விதத்திலும் மேன்மை அடைவார்கள். மாணவர்கள் வெற்றிநடை போடுவார்கள்.



வையக வாழ்வும்

விதேக நாட்டின் மாமன்னர் ஜனகர். அவரிடம் கல்வி பயில வந்தார் வேதவியாசரின் திருக்குமாரரும் கருவிலேயே திருவுடையவருமான சுகர். மாணாக்கரின் வருகைக்காக தன் அரண்மனை மண்டபத்தில் காத்திருந்தார் குரு.

மிதிலை மாநகருக்குள் நுழைந்து, வழி நடந்து ஆசிரியர் வீற்றிருந்த அரங்கடைந்தார் அந்த மாணாக்கர். சிஷ்யரின் திறத்தைக் கண்டறிய வேண்டாமா குரு? இதையே நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டார் ஜனகர். "வா சுகா! வழிப் பயணம் வசதியாக இருந்ததா? மிதிலைக்குள் வந்தாயே! என் நகரில் என்ன கண்டாய், சொல் பார்க்கலாம்!" - ஜனகர் கேட்டதுதான் தாமதம் - படபடவென பதில் கொட்டியது. சுகர் திருவாய் மலர்த்திய விடை இதுதான். - "சர்க்கரையால் செய்யப்பட்ட கோட்டைக்குள் நுழைந்தேன். சர்க்கரைக் கோட்டை வாயிலை இரண்டு சர்க்கரை பொம்மைகள் காவல் காத்தன. சர்க்கரை வீதிகளில் நடந்தேன். வழி நெடுகிலும் சர்க்கரை பொம்மைகள் ஆண்களாகவும், பெண்களாகவும் உடை அணிந்து சிரித்துப் பேசிக் கொண்டு போவதைக் கண்டேன். சர்க்கரையாலான அரண்மனையை அடைந்தேன். சர்க்கரை பொம்மைகள் வழி காட்ட, சர்க்கரைப் படிக்கட்டுகள் மேலேறி இந்தச் சர்க்கரை உப்பரிகையை அடைந்தேன். இதோ, எதிரிலுள்ள சர்க்கரை பொம்மையோடு அளவளாவுகிறேன்."


விடையைச் செவிமடுத்த மன்னர் கூறினார். "இனி நீ கற்க வேண்டியது யாதொன்றுமில்லை. சர்க்கரை மகனே!"

சர்க்கரை - எல்லாம் சர்க்கரை! ஆணும் பெண்ணும் சர்க்கரை. கோட்டையும் கல்சுவரும் சர்க்கரை. வீதியும் விளக்கும் சர்க்கரை. படியும் படிப்பும் சர்க்கரை!

டாக்டர்
சுதா சேஷய்யன்

ஆசார்ய விநோபாபாவே அடிக்கடி மேற்கோள் காட்டிய இந்தப் புராதனச் சம்பவத்திற்குள், ஆயிரமாயிரம் தத்துவங்கள் அடையாளம் காணலாமென்றாலும், இவற்றுள் இரண்டு கொள்கைகள் மிக முக்கியமானவை. ஒன்று, அண்ட பகிரண்டத்தில் உள்ள அனைத்தும், அது அஃறிணையாயினும், இல்லை, உயர்திணையாயினும், ஆண்டவனின் வெளிப்பாடுகள். இன்னொன்று எல்லாமே பரம்பொருளின் கூறு என்பதை முழுமையாய்ப் புரிந்து கொள்வதே மெய்யான கல்வி.

எல்லாமே, எல்லோருமே இறைவனின் வெளிப்பாடு என்று சொன்னால், அதன் உடனடி எதிர்



தெய்வீக வாழ்வும்!

வினை ஒன்றுண்டு. என்ன தெரியுமா? ஒவ்வொரு உயிரும், முயன்றால், தனக்குள் இருக்கும் உண்மையை எட்டி, இறைவனோடு இரண்டறக் கலந்துவிடலாம். உள்ளிருக்கும் உண்மையை அடையாளம் காண்பது. அந்த உண்மையின் உயர்வை எட்டித் தொடுவது - இவையே சனாதன தர்மம் ஒவ்வொரு உயிருக்கும் தரக்கூடிய வளர்ச்சிப் படிகளாகும்.

இறைமையை, இணையற்ற உண்மையை நோக்கிய ஆன்மப் பயணம். இதில் அந்தந்த ஆன்மா, அதனதன் வேகத்தில் பயணப்படலாம். சில ஆன்மாக்கள், பயணத்தைப் பல பிறவிகளுக்கும் தொடரலாம்.



"யாவும் இறைமை. எங்கும் எதுவும் எல்லாமும் இறைமை" என்பதில் எள்ளளவும் சனாதன தர்மத்துக்குச் சந்தேகமில்லை. சிலந்தி சிவலிங்கத்துக்கு விதானம் அமைக்கும். எறும்பு எல்லாம் வல்லானை வணங்கி வழிபடும். பாம்பு பதவிசாய்ப் பிரதட்சிணம் செய்யும். கை நீட்டி யானை கலச பூஜையே பண்ணும். இவை எல்லா உயிருக்குள்ளும் இறைவன் என்பதைக் காட்டுபவை மட்டுமல்ல. எவ்வுயிரும் இறைநிலையை அடையலாம் என்பதை உணர்த்துபவையும் கூட.

காக்கையும் குருவியும், கடலும் மலையும் எல்லாமும் எவ்வுயிரும் ஒருயிர் என்னும் ஒத்துரிமை கொண்டாலும், இதில் மனிதப் பிறவிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. பிறவற்றால் செய்ய முடியாத முயற்சிகளை மனிதனால் செய்ய முடியும். மற்ற உயிர்கள் தங்கள் தங்களின் இயல்புகளால் வாழ்க்கையைத் தள்ளினால், மனிதனோ தன்னுடைய அறிவாலும் ஆற்றலாலும் வாழ்வினை மேம்படுத்திக் கொள்ளமுடியும். அதனால்தான், அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது!

விலங்குகளைக் 'கால்நடை' என்றழைக்கிறோம். சாதாரண மனிதனும் கால்கள் கொண்டு நடப்பவன்தானே! (வேண்டுமானால், தலையால் கைலாயம் நடந்த காரைக்கால் அம்மையாரை இந்தப் பட்டியலிலிருந்து நீக்கிவிடலாம்). இல்லை. மனிதனின் உடல், கால்கள் கொண்டு நடந்தாலும், அவனுடைய வாழ்வும் வாய்ப்பும் வசதியும் கருத்துக்களால் நடத்தப்படுபவையன்றோ! அப்படியானால், மனிதனைக் கருத்துக்களால், எண்ணங்களால் சிந்தனைகளால் நடப்பவன் என்று

இந்த நூற்றாண்டில் இந்து மதம் 15

வகைப்படுத்தலாம்தானே!

அறிவின் பாதுகாப்பும், சிந்தனையாற்றலின் அரவணைப்பும் கொண்ட மனிதன் எப்படி இறைநிலை அடையமுடியும்?

ஓர் எளிமையான வழியைச் சொன்னார் நம்மாழ்வார். கல்வியின் மூலம் உயரலாம் என்றார். ஆனால், 'எது கல்வி' என்பதில் திட்டவட்டமான வரை முறையைக் கொடுத்தார். அது என்ன? 'கற்பார் இராம பிரானை அல்லால் கற்பரோ?'' என்றே தன் பாடத்திட்டத்தைப் பறை சாற்றினார். வாழ்க்கைக்கான சிலபஸ், இராமனுடைய கதை என்றால் என்ன பொருள்?

இராமனைப் பற்றி இலக்குவன் வாயிலாகப் பேச வைப்பார் வான்மீகி மஹரிஷி. ''ஸத்யஸந்தன், ஜிதேந்த்ரியன், நரோத்தமன்'' - உண்மையாளன், புலன்களைக் கட்டுப் படுத்தியவன், மனிதர்களில் உத்தமன்.

வான்மீகி மஹரிஷியின் படைப்பில் நரோத்தமனான இராமன், வணக்கத்துக்கும் வழிபாட்டுக்கும் உரிய இராமபிரானாக, ராம நாம தாரகத்தின் நாயகனாக மேம்பட்டதன் பின்னணி என்ன? அறம் தலைநிறுத்த அயோத்தி வந்த ஐயனின் கதை கூறும் சாரம் என்ன? நல்வாழ்க்கை நெறி, ஒரு மனிதனையும் மகான் ஆக்கும். மகானையும் மகேசன் ஆக்கும்.

மனிதனை மகானாக்கி மகேசனுமாக்கக் கூடிய வழிமுறையைத்தான், நம்மாழ்வார், சீதாராம கதையைப் பரிந்துரைப்பதன்மூலம் காட்டினார். இராமனின் வாழ்க்கை தரக் கூடிய பாடங்களை, நமக்கான போதனைகளாகக் கொண்டால் மேன்மையை அடையலாம் என்றார்.

வள்ளுவப் பேராசானோ, இதனை இன்னமும் எளிமைப்படுத்தினார். அற வாழ்க்கை வாழ்ந்தால், ஆண்டவனை அடையலாம் என்று அறுதியிட்டார்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்பது அவரின் அநுபவச் செந்நெறி.

உள்ளம் பெருங்கோயில். ஊனுடம்பு ஆலயம். உள்ளுறைவதோ சாட்சாத் நாதப் ரும்மம். ஒவ்வொரு உயிரும் என்றாவது ஒரு நாள் தெய்வீகத்தைத் தொட்டுவிடும் என்பதையே, சனாதன வேதாந்தம் ஆன்மசாதனமாக அறிவுறுத்துகிறது. இந்தக் காரணம் பற்றியே, 'நிலைத்த உண்மையைக் காட்டும் விஞ்ஞானம்'' என்று வேதாந்தத்திற்கு விளக்கம் கூறினார் சுவாமி சிவானந்தர்.

இறைநிலையை நோக்கிய ஆன்மப் பயணத்தில் விரதம், நியமம், பூஜை, சரியை, கிரியை, யோகம், பக்தி, ஆத்மநிவேதனம் போன்றவை வழிமுறைகளாம். யார் யாருக்கு எந்தெந்த வழி சுலபமோ, வசதியோ, அந்தந்த வழியை அவரவர் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

பாதை போட்டால் போக வேண்டிய இடத்திற்குப் போகலாம் என்பது, வழித் தடத்திற்கு வேண்டுமானால் சரி. வாழ்க்கைத் தடத்திற்கு?

ஹோமப் பறவை

ஓர் இளைஞன்; ஏதேச்சையாக அவனிடம் சில வைரக் கற்கள் கிடைத்தன. அவனுக்கு அவற்றின் மதிப்புத் தெரியவில்லை. 'சரி, இவற்றை விற்று விலை பெறலாம்' என்று நினைத்தவன் வியாபாரியைத் தேடிப் போனான். முதலில் .அவன் சந்தித்தது ஒரு துணி வணிகரை - அவர் கற்களை வாங்கிப் பார்த்தார். உருட்டி உருட்டிப் பார்த்தார். பின்னர் சொன்னார்: ''இரண்டு கஜம் துணி தருகிறேன்; வாங்கிக் கொள்''. இளைஞன் இன்னும் கூடுதல் விலை தருமாறு வற்புறுத்தினான். அவரோ 'உனக்காகத் தருகிறேன்; மொத்தம் மூன்று கஜம் வாங்கிக்கொள்' என்றார்.

அடுத்து இன்னொருவரிடம் போனான் அந்த இளைஞன். அவர் ஒரு பருப்பு வியாபாரி. ''வேண்டுமானால் அதிகபட்சம் இரண்டு மூட்டை பருப்பு தருகிறேன்'' என்றார் அவர்.

இவரும் வேண்டாமென்று நினைத்தவன், அடுத்தொரு சர்க்கரை வியாபாரியிடம்


ஓர் அரசன். அவனுக்கு ஒரு அழகிய மகள். தன் தலைநகருக்குப் பக்கத்திலிருந்த நாட்டில் தவம் செய்து கொண்டிருந்த சாதுக்களில் ஒருவருக்குத்தான் இளவரசியைத் திருமணம் செய்து கொடுக்க தாம் தீர்மானித்திருப்பதாக அரசன் அரசியிடம் சொல்லிக் கொண்டிருந்ததை, ஒரு திருடன் ஒட்டுக் கேட்டுவிட்டான். ''ஆஹா! அதிர்ஷ்டம். நாம் போய் சாதுவாக உட்கார்ந்துவிட்டால், இளவரசியை மணக்கலாம். பின்னர், வாழ்க்கை முழுவதும் சுகமாக இருக்கலாம்'' என்று திட்டம் போட்டான் திருடன். சாது வேஷம் போட்டு உட்கார்ந்தான். அரசனின் பணியாளர்கள், 'இளவரசியை மணக்கச் சம்மதமா' என்று ஒவ்வொரு சாதுவாகக் கேட்க, எல்லோரும் முடியாது என்று தலையாட்டினார்கள். கடைசியில் அமர்ந்திருந்த (திருட்டுச்) சாது மட்டும் வேகவேகமாகச் சம்மதம் சொன்னார்.

போனான். அவரோ மூன்று முட்டைகளுக்கு மேல் கொஞ்சம் கூடத் தர முடியாதென்றார்.

அலுத்துச் சலித்துப் போய், இங்குமங்கும் அலைந்தவனை, ஒரு பெரியவர் தடுத்து நிறுத்தினார். "ஏனப்பா இப்படித் தடுமாறுகிறாய்? என்ன வேண்டும்?" எனக் கேட்டார். கையிலிருந்தவற்றைக் காட்டி, இவற்றை விற்க இடம் தேடுகிறேன்' என்றான் அவன். நகைக் கடைக்குக் கை காட்டினார் பெரியவர். அந்த அரிய பெரிய வைரங்களைக் கண்ட நகை வணிகரோ, அவனை அப்படியே ஆரத் தழுவிக் கூத்தாடினார்.

கையிலிருக்கும் வைரமான வாழ்க்கை, உள்ளுக்குள் பிரகாசிக்கும் இறைமை, இவற்றைச் சரியான பாதையில் செலுத்தாமல், எங்கெங்கோ விலை பேசினால் சரியா?

வேதங்களில் ஹோமப் பறவையென்று ஒன்று. அது உயர உயரப் பறக்குமாம். அப்படிப் பறக்கும்போதே முட்டையிடுமாம். முட்டை கீழே கீழே வரும். பாதி வழி வரும்போதே முட்டை பொரிந்து பறவைக் குஞ்சு வெளி வரும். இன்னும் கீழே வர வர, பறவைக் குஞ்சுக்குக் கண்கள் திறக்குமாம். உடனே ஒளியை அடையாளம் காணுமாம். இன்னும் கீழே வரும் குஞ்சு, பூமியைப் பார்க்கும். பின்னர் தலையைத் திருப்பி, இங்கும் அங்கும் பறக்குமாம். கடைசியாகத் தாய்ப் பறவை மேலே பறப்பதைப் புரிந்து கொண்டு, தானும் மேலே மேலே போகத் தொடங்குமாம். தனக்குள் இருக்கும் இறைமையை ஹோமப் பறவைக் குஞ்சு உணர்ந்து விட்டதா? தாயாம் இறைமையை அடைய எல்லாக் குழந்தைகளும் முயல வேண்டுமென்பதற்காக, வேதம் சொன்ன உவமைக் கதை இது!



பின்? வேறென்ன? ஒரே ராஜமரியாதை. உபசாரம். விருந்து. வசதி. உல்லாசம்.

ஏமாற்ற நினைத்தவனின் மனம் இப்போது ஏங்கத் தொடங்கியது. வெறும் வேடத்திற்கே இவ்வளவு மரியாதையா? அப்படியானால்... நிஜமாகவே நல்லவனாக இருந்தால்... எவ்வளவு மதிப்பும் உயர்வும் கிடைக்கும்?

'தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்' என்றார் திருமூலர். காரைக்கால் அம்மையாரோ இன்னும் ஒருபடி மேலே போய்,

"அறிவாலும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப் பொருளும் தானே" என்றார்.

வையக வாழ்வில் தெய்வீகத்தைத் தொட்டுவிட முடியுமா? இந்தக் கேள்விக்கு விடை தேடும் தருவாயில், ஒன்றைத் தெளிவாக உணர வேண்டும். வையக வாழ்வைத் தாழ்ந்தது என்றோ, குறைவானது என்றோ சனாதன தர்மம் சொல்லவில்லை. தெய்வங்களே மனிதச் சட்டை போர்த்துக் கொண்டு தான் அவதரித்தார்கள். வையக வாழ்க்கை, நெறியான வாழ்க்கையாக, தெய்வீகத்தை நாடும் முயற்சியாக இருக்க வேண்டும் என்பதுதான் இந்து தர்மம் தரும் கொள்கை. ரிக் வேத ரிஷிகள், பூவுலகத்தைத் தகாத இடமாகப் பார்த்ததாகத் தெரியவில்லை. இவ்வுலகம் நல்லுலகம். இங்கு நல்வாழ்க்கை வாழ்ந்தால் நற்பயன் பெறலாம். மருத்துக்கள் என்பவர்கள் தங்களின் நற்செயல்களால், சிரஞ்சீவித்துவம் பெற்றவர்கள். ரிபுக்கள், மனிதர்களாக இருந்து, தங்களின் மேன்மைமிக்க காரியங்களால், தெய்வீகம் அடைந்தவர்கள்.

ஸ்ரீமத் பாகவதத்தில் ஒரு சம்பவம் உண்டு. ஹிரண்யாக்ஷனை அழித்துவிடுகிறார் மஹா விஷ்ணு. அவன் தம்பி ஹிரண்யகசிபுவிற்குக் கோபம் வருகிறது. விஷ்ணுவைத் துரத்தத் தொடங்கினானாம். எங்கு ஓடினாலும் பின்னாலேயே துரத்திக் கொண்டு வந்த அவனிடமிருந்து தப்பிக்க ஓர் உபாயம் செய்தாராம் ஸ்வாமி. என்ன செய்தார்? டக்கென்று அவன் உள்ளத்திற்குள் புகுந்து கொண்டாராம். வெளியில், புறத்தில் தேடியவன், தனக்குள்ளேயே கடவுள் குடியிருந்ததை உணராமல் போனான்.

உள்ளுக்குள் உரு பொருள். ஒவ்வொரு மனிதனிடத்திலும் குடியிருக்கும் கடவுள் தன்மை. அத்தன்மையைத் தெரிந்து புரிந்து உணர்ந்து உயர்த்துவதே வாழ்வின் நோக்கம்.

"பாதி மனதில் தெய்வம் இருந்து பார்த்துக் கொண்டதடா -
மீதி மனதை மிருகம் இருந்து ஆட்டி வைத்ததடா!" என்றாரே கவிஞர். வக்கிரங்களையும் மிருகத் தன்மைகளையும் நீக்கி நன்னெறி வாழ்க்கை வாழ்ந்தால், முழு மனத்திலும் தெய்வம் வரும். புற வடிவிலும் தெய்வீகம் வரும். வையக வாழ்வே தெய்வீக வாழ்வாகும். ●

செஞ்சியார் விவகாரத்தால் நொந்து போயிருந்த ம.தி.மு.க. வட்டாரம், மேலும் சங்கடப்பட்டுப் போயிருக்கிறது. காரணம், நெல்லை மாவட்ட ம.தி.மு.க. செயலாளராக இருந்த டி.ஏ.கே. லக்குமணனின் 'திசை மாறிய வைகோ' என்ற புத்தகம்.

"ஆரம்பக் காலத்தில் பஸ்ஸில் பயணம் செய்த வை.கோ. தூத்துக்குடி பெரியசாமி உதவியால் அம்பாஸிடர் கார் வாங்கினார். ஆனால், இன்று பல கார்களுக்குச் சொந்தக்காரராக இருப்பது எப்படி? பத்தாண்டுகளாக கலிங்கப்பட்டி பகுதியில் விவசாயமே நடக்காதபோது, பால் பண்ணையிலும், விவசாயத்திலும் வருமானம் வந்ததாக வைகோ வருமான வரித்துறைக்குப் பொய் சொல்லியிருக்கிறார். "எனது தந்தை நிரந்தர வைப்புக் கணக்கில் முப்பத்தைந்து லட்சம் போட்டிருந்தார்" என்று வை.கோ. சொல்கிறார். அந்தக் காலத்துப் டி.வி.எஸ். குடும்பத்தில்கூட முப்பத்தைந்து லட்சம் இருந்திருக்காது. எதற்கு இந்தப் பொய்? அண்ணா நகரில் ஒரு கோடி ரூபாய் பெறுமான வீட்டை எப்படிக் கட்டினார்? போன்ற கேள்விகளையெல்லாம் அந்தப் புத்தகத்தில் எழுப்பியிருக்கிறார் லக்குமணன்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல்லும் விதமாக, தொண்டர்களுக்கு, வழக்கறிஞர் நன்மாறன் மூலம் கடிதம் எழுதியிருக்கிறார் வை.கோ.

அந்தக் கடிதத்திலிருந்து...





* டி.ஏ.கே.

கலிங்கப்பட்டியில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தேன். எனது பாட்டனார் அ. கோபால்சாமி நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். உடன் பிறந்தவர் எவரும் இல்லை. செங்குளம் கோபாலகிருஷ்ணபுரத்தில் ஏற்கெனவே சொந்தமான, மிக வசதியான ஆண் வாரிசு இல்லாத குடும்பத்தில், ஒரே பெண்ணான என் பாட்டியை 1906ல் திருமணம் செய்து கொண்டதால், வசதிகள் தானாக வந்து சேர்ந்தன. பாட்டியின் வீடு அப்போதே இரண்டு மாடிக் கட்டடம். நிறைய நஞ்சை, புஞ்சை தோட்ட நிலங்கள். சிக்கனமாக இருந்ததில் சேர்த்திட்ட பண வசதி காரணமாக, 1922ல் கலிங்கப்பட்டியில் மூன்று மாடி கட்டடத் துவங்கி 1923ல் பூர்த்தியானது. முழுவதும் தேக்கு மரம் பயன்படுத்தப்பட்டது. அனைத்தும் பர்மா தேக்குகள். ரயில் மூலம் கொண்டு வரப்பட்டு, மிக்க சிரமத்துடன் ஊர் கொண்டு வந்து சேர்த்தனராம். பெரும் பண வசதி இல்லாமல் எப்படி இத்தகைய வீடு கட்ட முடியும்?

1922லேயே சங்கரன் கோயில் நகரத்தில் ஜின்னிங் பாக்டரி கட்ட 2.60 ஏக்கர் இடம் விலைக்கு வாங்கினார். சுவாமி சன்னதியில் ஒரு தெருவிலிருந்து அடுத்த தெருவரை விரிந்திருந்த பெரிய மாடி வீடு ஒன்றை விலைக்கு வாங்கினார். கோவில்பட்டியில் உள்ள இராஜகோபால் பாங்க் 1922ல் துவங்கப்பட்டது. இதில் எனது பாட்டனார் ஏழாயிரத்தைந்நூறு அடிப்படைப் பங்குகள் வாங்கினார். இவ்வங்கியில் வெள்ளையம்மாள்புரம் மிராசுக் குடும்பத்துக்கு அடுத்ததாக, அதிக பணத்தை முதலீடு செய்திருந்தார் எனது பாட்டனார். அந்த ஏழாயிரத்தைந்நூறு பங்குகளும் இன்றும் விற்காமல் எங்கள் பூர்வீக முதலீடாக அப்படியே உள்ளன.

எனது தந்தையார், ராஜகோபால் பேங்கின் நிர்வாக இயக்குனராக இருபது ஆண்டுகள் இருந்தார். சிக்கனமாக இருப்பார். எங்கள் வீட்டுத் தொழுவங்களில் ஏராளமாக பசு மாடுகள். நூற்றுக்கு மேல் இருக்கும். அழகிய வேலைப்பாடுகள் அமைந்த மூன்று வில் வண்டிகள் பிரயாண வசதிக்காக இருந்தன. எனது தந்தையார் கோவில்பட்டி இந்தியன் வங்கி கிளையிலும், ஸ்டேட் வங்கி கிளையிலும், ராஜகோபால் வங்கியிலும் நிரந்தர வைப்புத் தொகையாக அறுபதுகளில் ஐந்தரை லட்சம் ரூபாய் பணம் போட்டிருந்தார். இதைத்தான் அபூர்வ



சொத்து வந்தது எப்படி?

மாக ஒரு சில மேடைகளில் பேச நேர்ந்தது. என் தந்தை யார் காலத்தில் முப்பத் தைந்து லட்சம் வங்கியில் பணம் போட்டதாக எங்கும் பேசியதில்லை. இந்தப் பணத்துக்கு வருமான வரியும் செலுத்தப்பட்டுள்ளது. மத ராஸ் சிமெண்ட்ஸ் கம்பெனி யில் முப்பதாயிரம் ரூபாய், பங்குகளில் முதலீடு செய்யப் பட்டிருந்தது.

எனது தந்தையார் மறைந்த பின்னர் எழுபத்தி யாறு ஏக்கர் நிலங்களை விற்றிருக்கிறோம். சென்னை அண்ணா நகரில் ஒன்றேகால் கிரவுண்டுக்கும் கொஞ்சம் அதிகமுள்ள இடத்தில் வீடு கட்டினேன். சங்கரன் கோயி லில் அம்மா பெயரில் இருந்த காலிமனை ஒரு ஏக்கர் முப்பது செண்ட் விற்றதில் கிடைத்த பணம், கலிங்கப்பட்டி அயனார்க்காடு பகுதியில் நஞ்சை ஏழு ஏக்கர் விற்ற பணம், மேலும் வாங்கிய கடன் (ஆதாரம் உள்ளது) இவை அனைத்தையும் சேர்த்து இந்த வீட்டைக் கட்டினேன்.

"எத்தனை கார்கள் இந்த வை கோ.வுக்கு? இப்படியும் விமர்சனம். 1992லிருந்து 1996 வரை கரூர் கே.சி. பழனிசாமி, அவரது கண்டசா காரை எனது பயணங்களுக்குத் தந்தார். அவர் கழகத்திலிருந்து வெளியேறிய பிறகு கழகக் கண்மணிகள் நிதி திரட்டி, கரூர் பொதுக் கூட்டத்தில் கண்டசா காரை எனக்கு வழங்கினார்கள். கண்டசா கார் எனக்கல்ல. பொதுச் செயலாளருக்கு. எனக்குப் பிறகு வேறு ஒருவர் பொதுச் செயலாளராகும் போது, இந்தக் கண்டசா கார் அவரிடம் போய்ச் சேரும் என்று பொதுக் கூட்டத் திலேயே சொன்னேன்.

எனது மகன் துரை வையாபுரி, தாம்பரத்தில் மென் பொருள் நிறுவனத்தில் பணியாற்றினான். அவன் வேலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் முன்பு வாங்கிய ஊதியம் மாதம் இருபத்தைந்தாயிரம் ரூபாய். ஆண்டுக்கு மூன்று லட்சம் ஊதியம் (வருமான வரிக் கணக்கில் காட்டியிருக்கிறான்). ஒரு லட்சம் முதலீடு செய்து, இரண்டரை லட்சம் தவணைக் கடனில் மாருதி ஜென் கார் வாங்கியுள்ளான். சிக்கனமானவன். வீண் செலவு கிடையாது. சேமித்த ஊதியம், துணைவியார் குடும்பத் தினர் செய்த உதவி, திரட்டிய கடன் அனைத்தையும் கொண்டு ஒரு நிறுவனத்தில் சிறிய பகுதிக்கு ஏஜென்ஸி எடுத்து கவனித்துக் கொண்டுள்ளான். எங்கள் குடும்பத்தின் பொருளாதார நிலையை என் சகாக்களுக்குச் சொல்வதைக் கடமையாகக் கருதி இதனையெல்லாம் கூறுகிறேன்.

\- கௌசி

சொல்கிறார் வைகோ



''மன்னரே, இளவரசர் தேரை அதி வேகமாக ஓட்டி ஆடு ஒன்றின்மீது ஏற்றி விட்டார்....!''

''இதில் பதற்றப்பட என்ன இருக்கிறது அமைச்சரே? ஆராய்ச்சி மணியை முடக்கி விட்டு, ஆட்டுக்கால் 'சூப்'புக்கு ஏற்பாடு செய்யவும்!''



''குறுநில மன்னர்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்களா, ஏன் அமைச்சரே?''

''கப்பத்துக்கு 'சேவை வரி'யாக பத்து சதவிகித சர்வீஸ் டாக்ஸ் விதித்துள்ளீர்களே, அதை எதிர்த்துதான்!''

''அண்டை நாட்டுச் சக்கரவர்த்தி பணக் கஷ்டத்தில் உள்ளார் என்று நினைக்கிறேன்.''

''எப்படிக் கூறுகிறீர், மன்னா?''

''ஐந்து வருட கப்பத்தை ஒரே தவணையில் கட்டினால் பத்து சதவிகிதம் தள்ளுபடி தருவதாக அறிவித்துள்ளார்!''



''இளவரசியின் சுயம்வரத்துக்காக ஐம்பத்தாறு நாட்டு அரசர்களுக்கு ஓலை அனுப்பியிருந்தோமே, என்ன ஆயிற்று?''

''உடல்நிலை காரணமாக வர இயல வில்லை என்று மருத்துவ சான்றிதழ்களுடன் ஐம்பத்தாறு பதில் ஓலைகள் வந்துள்ளன மன்னா!''



ஆ...அரசே!

ஆர். ரகோத்தமன்



''நீதி நிலைமை மோசமாக உள்ளது அமைச்சரே..''

''ஒப்புக் கொள்கிறேன். அதற்காக, நீங்கள் தினம் பாகன் வேடமணிந்து பட்டத்து யானையைக் கடைவீதியில் செலுத்தி, பிச்சையெடுக்க வைப்பது கேவலமாக உள்ளது!''

''ஐயகோ! முரசு ஒலிக்கும் சப்தம் கேட்கிறதே. போர் வந்துவிட்டதா, அமைச்சரே.''

''அஞ்ச வேண்டாம் மன்னா! முரசை 'சர்வீஸ்' செய்ய ஆட்கள் வந்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.''





''மன்னரே, இளவரசர் நல்ல உஷார் பேர்வழியாக இருக்கிறார். போர்ப் பயிற்சியின்போது கண்டேன்!''

''திறமையாகப் போரிடக் கற்றுக் கொண்டாரா?''

''இல்லை. போரின்போது முதுகிலும் கவசம் அணிவேன் என்கிறார்!''

குழந்தை

யோகி

அவன் பஸ் ஸ்டாப்பில் இருந்து வீட்டை நோக்கி நடந்தான். அது ஒரு புறநகர்ப் பகுதி. ஸ்வீட் கடையில் ஸ்வீட்டும், காரமும் வாங்கிக் கொண்டான். சற்றுத் தள்ளி பூ விற்றுக் கொண்டிருந்த மூதாட்டியிடம் மல்லிகைப்பூவும் வாங்கி, பையில் போட்டுக் கொண்டு நடந்தான்.

எங்கிருந்தோ அழு குரல் சப்தம். சுற்றும் முற்றும் பார்த்தான். அழுகைச் சப்தம் விடாது கேட்டுக் கொண்டிருந்தது. குழந்தையின் அழுகைச் சப்தம் போன்று இருந்ததால், அவன் மனசு பதறியது. அவனுக்குக் கல்யாணமாகி எட்டு ஆண்டுக் காலம் ஆகி விட்டது. இன்னும் குழந்தை இல்லை. அதனாலேயே குழந்தை என்றால் ஆழ்ந்த ஈடுபாடு.

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்த போது, அந்தக் குழந்தை அவன் முன் நின்றது. பெண் குழந்தை. வெள்ளை நிற கவுன் அணிந்திருந்தது. ஐந்து அல்லது ஆறு வயது இருக்கலாம். பாப் கட்டிங் ஸ்டைலில் தலைமுடி. அவன் பையில் இருந்த மிட்டாயை எடுத்துக் கொடுத்து குழந்தையின் அழுகையை நிறுத்த முயற்சி செய்தான். குழந்தை மிட்டாயைத் தூக்கியெறிந்துவிட்டு, "எனக்கு அம்மா வேணும்" என்று அழுதது. மிட்டாயைத் தூக்கி எறிந்ததற்காக அவன் கோபப்படவில்லை.

அவன் அந்தக் குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு திரும்ப பஸ் ஸ்டாப்புக்கு வந்தான். ஸ்வீட் கடைக்காரரிடமும் மற்றும் பெட்டிக் கடைக்காரரிடமும் "குழந்தையைத் தெரியுமா? குழந்தையை யாராவது தவறவிட்டு தேடினாங்களா?" என்று விசாரித்தான். பிறகு பூ விற்கும் பெண்ணிடம், ஸ்டேஷனரி கடைக்காரரிடமும் விசாரித்தான். எல்லோரும் குழந்தை யாருடையதென்பது தெரியாது என்றனர்.

ஸ்வீட் கடையில் இருந்த மைசூர் பாக்கைப் பார்த்து குழந்தை 'அது வேணும்' என்றது. குழந்தை இப்போது அழுகையை நிறுத்தியிருந்தது. இல்லை, அழ மறந்திருக்கலாம் என்று தோன்றியது. 'உம் பேர் என்ன பாப்பா?''

"சௌமியா" என்று அழகாகச் சொன்னது. மைசூர் பாக்கைப் பார்த்ததும் குழந்தை சிரித்தது. அதன் கன்னத்தில் குழி விழுந்தது. குழந்தையின் புன்னகை அழகாக இருந்தது. அந்தச் சிரிப்பு இவனைக் கொள்ளையடித்தது... குழந்தையை அழைத்துக் கொண்டு போகலாம்... யாராவது தேடி வந்தால் கொடுத்து விடலாம் என்று நினைத்து நடந்தான். குழந்தை மைசூர் பாக்கைச் சாப்பிட்டுக் கொண்டே வந்தது. "எனக்குக் கொஞ்சம் கொடுப்பா" என்று கேட்டான். குழந்தை தலையை வேகமாக ஆட்டியவாறு, "இல்ல... இல்ல" என்றது. மைசூர் பாக்கைச் சாப்பிட்டு முடித்ததும் தண்ணீர் கேட்டது. அவன் தன் வாட்டர் கேனில் இருந்து தண்ணீர் கொடுத்தான். தண்ணீர் குடித்ததும், "என்னைத் தூக்கு" என்றது. தூக்கிக் கொண்டான்.



"உன் வீடு எங்க இருக்கு?"

"கோவில்... கோவில்..." என்றது.

"உன் அப்பா அம்மா பேரு என்ன?"

"டாடி மம்மி பேரா?" என்று கேட்டு விட்டு - 'டாடி பேர் மூர்த்தி, மம்மி பேர் அகல்யா' என்றது.

'நீ எத்தனாங்கிளாஸ் படிக்கிறே?''

"யூ.கே.ஜி." என்றது.

"ஏ.பி.சி.டி.. தெரியுமா?"

''ஏ,பி,சி,டி,ஈ,எஃப்,ஜி,ஹெச்,ஐ'' என்று நிறுத்தியது. பராக்குப் பார்த்தது.

"ரைம்ஸ் சொல்லு."

"பள்ளி செல்ல விரும்பி" - என்று ஆரம்பித்து விட்டு நிறுத்தி விட்டது. 'ஹச்..ஹச்..' என்று தும்மியது. தெருவெங்கும் தூசியும், மண்ணுமாக இருந்தது. "எங்க வீட்டுலயே இருந்துக் கறியா?" என்று கேட்டான்.



“ம்” என்று சிரித்தது. “என்னை இறக்கி விடு” என்றது. இறக்கி விட்டான். வீடு இருந்த தெரு வந்துவிட்டது.... வாசலில் நின்றிருந் தாள் ரேணுகா.

இவன் குழந்தையுடன் வருவதைப் பார்த்து ஆச்சர்யப்பட்டாள்... “வா, நம்ம வீட்டுக்குப் போவோம்” என்று குழந்தை யைப் படிக்கட்டில் ஏற விடாது தூக்கி வாசலில் நிறுத்தினாள்.

“யார் குழந்தைங்க?”

“தெரியல... பஸ் ஸ்டாப்ல அழுதுட்டு இருந்தது... விசாரித்தேன்... யாருக்கும் தெரிய லன்னு சொன்னாங்க... கூட்டிட்டு வந்தேன்..” என்றான். “போலீஸ்ல சொல்லி இருக் கலாம்ல” என்றாள். “காலையில் வேலைக்குப் போகும்போது சொல்லிடறேன்” என்றான்.

சின்ன தட்டில் பிஸ்கட் வைத்துக் கொடுத்தாள்... குழந்தை சாப்பிட் டது. “டி.வி. பார்ப் போமா?” என்று குழந் தையைக் கூட்டிக் கொண்டு வந்தாள். அவனுக்கும், அவளுக் கும் நடுவே குழந்தை அமர்ந்து கொண்டு டி.வியில் கார்ட்டூன் படம் பார்த்தது. சந்தோஷமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த குழந்தை திடீ ரென்று அழத் துவங்கியது. “ஏன் பாப்பா அழுறே?” குழந்தை விடாமல் அழுதது...

சோபா ஈரமாய் இருப்பது போல் தோன்ற, குழந்தையைத் தூக்கினாள்... “ஆய் பாப்பா” என்று புன்னகைத்தவாறு குழந்தை யைத் தூக்கி கொண்டு டாய்லெட்டுக்குள் போனாள். குழந்தை பயந்து போய் அழுதது. குழந்தையின் டிரஸ்ஸைக் கழற்றி, குழந்தையை யும், டிரஸ்ஸையும் சுத்தப்படுத்தினாள். ஒரு துண்டை குழந்தைக்குக் கட்டி விட்டாள். மாற்று டிரஸ் இல்லை.

குழந்தை ரேணுகாவின் மீது ஏறி உட் கார்ந்து கொண்டது. ரேணுகாவின் மூக்கைப் பிடித்தது. அவளது காதுத் தோடை தொட் டுத் தொட்டுப் பார்த்துச் சிரித்தது. இரவு

டிபன் செய்வதை மறந்து போனாள். "என்ன இன்னிக்கு டிபன் கட்டா?" என்று சிரித்தவாறு கேட்டான்... "பாப்பா நீ என்ன சாப்பிடுறே?"

"எனக்குப் பூரி வே ம்!" என்று குழந்தை காலை ஆட்டியவாறே ஸ்டைலாய் சொன்னது.

"ஏங்க... இந்தக் குழந்தையைத் தேடி யாரும் வரலன்னா நாமளே குழந்தையை வளர்க்கலாம்... முறைப்படி தத்து எடுக்கலாம்...!" என்று குழந்தையைக் கட்டி முத்தமிட்டாள்.

யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டு, எழுந்து போய் கதவைத் திறந்தான்... இரண்டு பேர் நின்றிருந்தனர். ஒருவன் கையில் கேமராவுடன்... இன்னொருவன் கையில் மைக்குடன்.

"சார்... நாங்க 'சந்திரன்' டீவில இருந்து வர்றோம். பஸ் ஸ்டாப்ல குழந்தையைத் தவற விட்டது நாங்கதான். குழந்தை இந்த மாதிரி அழுதுட்டு நின்னா, கண்டும், காணாமப் போறாங்களா... இல்ல மனித நேயத்தோட நடந்துக்கிறாங்களான்னு காட்டுற ஒரு நிகழ்ச்சி. நீங்க குழந்தையைப் பார்த்ததுல இருந்து, உங்க ஒவ்வொரு அசைவையும் படம் பிடிச்சோம் - வீடு வந்து சேருகிற வரை... பரவாயில்லே சார்... நாங்க மனிதாபிமானம் கொண்ட ஒரு மனிதரைத் தான் சந்திச்சிருக்கோம். மகாத்மா காந்தி பிறந்த தினத்துல இந்த நிகழ்ச்சி ஒளிப்பரப்பாகும்."

அவர்கள் சொன்னதைக் கேட்டு அவனுக்குக் கோபம் வந்தது. "ஏன் சார்... உங்களுக்கெல்லாம் அறிவு இல்ல... உங்களுக்கு இதுவே விளையாட்டாப் போச்சா... குழந்தையை இப்படித்தான் அழவிட்டுட்டு வேடிக்கை பார்க்கிறதா... நாடகமாடறதா? உங்க விளையாட்டுக்கு அளவு இல்லாமப் போச்சு..." என்றவன், "படம் பிடிக்கிறதை நிறுத்துங்க"_ என்று கேமரா மேனைப் பிடித்துத் தள்ளினான். குழந்தை அவர்களை முன்னமே அறிந்திருந்ததால் அவர்களிடம் போய் ஒட்டிக் கொண்டது.

"இந்த மாதிரியே செஞ்சிட்டு இருந்தா உதவணுங்கிற எண்ணம் உடையவனுக்குக் கூட அந்த ஆசை இல்லாமப் போகும். வெளிய போங்க சார்" என்று கதவை மூடிக் கொண்டான்.

"சாரி சார்... வித்தியாசமா ஒரு நிகழ்ச்சி பண்ணுவோம்னு நினைச்சோமே தவிர, வேற காரணம் இல்ல சார். கதவைத் திறங்க சார்" என்றான் கேமராமேன்... "பேசாமப் போயிடுங்க" என்று எரிச்சலுடன் கத்தினான் இவன்.

அவன் கோபத்தில் இருந்தான்... டிவி. காரர்கள் மீது கோபமா, இல்லை குழந்தை தங்களை விட்டுப் போன ஏமாற்றத்தினால் வந்த கோபமா, தெரியவில்லை. ●

சாப்பாட்டு சி.டி.!



தமிழ் மென்பொருள் திருக்குறள் சி.டி., குழந்தைப் பாடல்கள், சி.டி. என்று வெளியிட்டுக் கொண்டிருக்கும் சாஃப்ட் வியு நிறுவனம் சமையல் சி.டி.யையும் வெளியிட்டிருக்கிறது.

இதில் சைவம், அசைவம், செட்டி நாடு உணவு வகைகள் உட்பட நூற்றி இருபத்தியிரண்டு வகையான சமையல் வகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு சமையல் குறிப்பையும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஆடியோவில் கேட்கலாம். எந்தெந்த உணவுகளுக்கு எவ்வளவு கலோரிகள் மற்றும் அளவு முறைகள் போன்ற முழு விவரங்களடங்கிய இந்த சி.டி.யின் விலை முன்னூறு ரூபாய்.

- ஜெ.



'கொக்கி' போட்டா அவ்ளோதான்!

மின் திருட்டைக் கண்டறிய 'சேனல் சென்சார்' என்ற செயல்பாட்டைக் கண்டு பிடித்துள்ளனர், திருச்சி சிறுகனூரில் உள்ள எம்.ஏ.எம். பொறியியல் கல்லூரி மாணவர்கள். மின் மற்றும் மின்னணுவியல் துறை மாணவர்களான ஜெ. சந்திரசேகரன், ப. சம்சுதீன், கு.பாலசுப்ரமணியன், ரா. கௌரிசங்கர் ஆகியோர் ஒரு குழுவாக இயங்கி, இந்த ஆய்வில் வெற்றி கண்டுள்ளனர்.

அவர்கள் ஆய்வுக்காகத் தயாரித்திருக்கும் மின் மீட்டர் போர்டில், மின் கம்பங்கள் இரண்டிலிருந்து மெயின் மீட்டர் இணைப்புக்கு வரும் மின் வயர் மூலமாக முறைப்படியான மின் சாதனச் செலவுக்கான யூனிட் ஓடிக் கொண்டிருக்கிறது. அருகிலிருக்கும் கணிப்பொறி ஒன்றுடன் இணைக்கப்பட்டுள்ளது இதன் செயல்பாடுகள், தவறு செய்யாத வரைக்கும் குறிப்பிட்ட சர்வீஸ் எண் பற்றிய சர்வேயில் 'நோரிமார்க்' எனக் காட்டுகிறது. கூடுதலாக சில மின் சாதனங்களுக்குக் 'கொக்கி' போட்டு மின்சாரம் எடுக்கும்போது, எந்த மின் உபயோகிப்பாளர், எந்த இடம், என்பது உட்பட விலாவாரியாக அம்புக்குறியிட்டுக் காட்டுகிறது கணிப்பொறித் திரை.

மின் ஒயரில் 'கொக்கி' போட்டுக் கூடுதல் மின்சாரம் எடுத்தாலும் சரி, மின் மீட்டரிலிருந்து டெக்னிகலாக குறுக்கு வழியில் திருடினாலும் சரி, இந்தக் கணிப்பொறித் திரை அவர்களைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொடுக்கின்றது. மின் திருட்டில் ஈடுபடுவோரை, இன்ன தேதியில் இன்ன நேரத்திலிருந்து, இன்ன வகையில் தவறு செய்கிறார் எனப் புள்ளி விவரங்களோடு பதிவாகிறது.

"ஒரு மின் இணைப்புக்கு இரண்டு சேனல் சென்சார் பொருத்தி, அதனை மீட்டருடன் இணைத்துவிட வேண்டும். இந்த சேனல் சென்சாரிலிருந்து கணிப்பொறிக்கு வந்து சேரும் அந்தந்த நிமிடத் தகவல்கள், அந்த மின் உபயோகிப்பாளர் எப்படிப்பட்டவர் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

"இதுவரை மின் திருட்டைக் கண்டு பிடித்து, அதனை மின்சார வாரியத்துக்குச் சான்றுகளுடன் தெரியப்படுத்தும் வழிமுறை எதுவும் இல்லை என்பதை தெரிந்து கொண்டோம். அதனால்தான் பரவலாக மின் திருட்டு சாத்தியமாகிறது என்றும் உணர்ந்தோம். இதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்கிற நோக்கில் இதைக் கண்டுபிடித்தோம். மின்சார வாரியம் இதனைச் செயல்படுத்த முன் வந்தால் ஆண்டுதோறும் மின் திருட்டால் ஏற்படும் பல்லாயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பை, உடனே ஈடு செய்ய முடியும்!" என்கின்றனர் அவர்கள்.

கட்டுரை, படங்கள் : ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு




• ஜெ. சந்திரசேகரன், ப. சம்சுதீன், கு. பாலசுப்ரமணியன், ரா. கௌரிசங்கர்



ஜில்லு மல்லு

—கதிர்



என்ன தனியா முனகிக்கிட்டிருக்க.
ஏய்... செல்ஃபோன்ல பேசறது தெரியலயா?
என்ன இவ்வளவு சின்னதாயிருக்கு? பாத்து... பேசும் போது காதுக் குள்ள விழுந்துற போகுது!
விஞ்ஞானம் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கேன்னு சந்தோஷபடுப்பா.
ச்சே... சிட்டியில நாய்ஸ் பொல்யூஷன் பத்தாதுன்னு வாய்ஸ் பொல்யூஷன் வேற....
விஞ்ஞானமாம் வளர்ச்சியாம்! நம்ம குழந்த வளர்ந்திருச் சேன்னு பதினஞ்சு வயசு பையனை இடுப்புல வச்சிக்க முடியுமா?
யார்ரா உனக்கு இதெல்லாம் சொல்லிக் குடுக் கறாங்க?
அர்ஜென்ட்ல.. அதுவா வருது.
இது என்ன லொள்ளுப்பால்ல வர்ற குறளா?
உனக்கு ஒரு திருக்குறள் தெரியுமா? செல்பேசி வாழ்வாரே வாழ்வார் - மற்றோரெல்லாம் கீயூவில் பில்கட்ட BSNL போவார்...



*MRP incl. of all taxes. Net wieght 100g. #MRP incl. of all taxes. This pack of Rasna Utsav Orange soft drink concentrate contains 3g powder and 2.2ml liquid.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

